
பக்கங்கள்: 14

Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ. 5-00

PUMP
With
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

மலை: 5 சுக்ில ஆடு பங்குனிமீ 4 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 18 (17—03—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 6

★ தேர்தல், நாடாளுமன்றம், பதவிகள் சிறியவை

# இழந்த உரிமையை மீட்கும் விதத்தில் எம் அரசியல் செயற்பாடு அமையும்

## பல்கலைக்கழக மாணவர் கூட்டத்தில் மாத்தயா

யாழ்ப்பாணம், மார்ச் 17

கடந்த 40 வருடங்களாக தேர்தல், நாடாளுமன்றம், பதவிகள் என்று இருந்து வந்த அரசியல் பாரம்பரியத்தையே மக்கள் எம்மிடமும் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

தேர்தல், நாடாளுமன்றம் எல்லாம் சிறிய விடயங்கள் மக்களின் பங்களிப்புடன் அரசியல் திட்டங்களை மேற்கொண்டு எமது பாரம்பரிய உரிமைகளை, இழந்த உரிமைகளை, மீட்க வேண்டும். அந்த வகையிலேயே எமது வேலைத் திட்டங்கள் அமைந்துள்ளன. அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவே ஜனநாயக நீரோட்டத்தில் நாம் கலந்துள்ளோம்.

இப்படிக் கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா).



யாழ் பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக்கழக அலுவலகத்தைத் திறந்து வைக்கும் வைபவம் நேற்றுக்காலை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆரம்பத்தில் திரு. மாத்தயா மறுமலர்ச்சிக்கழக அலுவலகத்தை மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்தார்.

மறுமலர்ச்சிக்கழகத் தலைவர் திரு. அருணோதயம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. மாத்தயா மேலும்பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் மக்களின் விடுத

( 3 ஆம் பக்கம் பார்க்க)

நிரந்தர அமைதியை ஏற்படுத்த

# புலிகள்-ஹமீத் இன்று திருமலையில் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 17

திருகோணமலையில் நிரந்தர அமைதி ஏற்படுத்துவது குறித்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் அரசாங்கப் பிரதிநிதியான அமைச்சர் ஜனாப். ஏ.ஸி.எஸ். ஹமீதும் இன்று திருகோணமலையில் பாதுகாப்புப்படை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக உயர் கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், தற்போது கொழும்பில் தங்கியுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் இன்று யாழ்நகர் வருகிறார்!

யாழ்ப்பாணம், மார்ச் 17

இன்று காலையில் கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியாரும் இன்று மாலையில் யாழ்ப்பாணம் வருவார்கள் என்று தெரியவருகிறது.

பாலசிங்கம் தம்பதியரும், திரு. யோகரட்ணம் யோகியும் இன்றுகாலையில் திருமலையில் பேச்சுக்களை முடித்த கையோடு நண்பகல் அளவில் அங்கிருந்து புறப்படுவார்கள் என்றும்—

திரு. யோகி கிளிநொச்சிக்கும், பாலசிங்கம் தம்பதியர் யாழ்ப்பாணத்திற்கும் செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தேவிலால் ராஜினாமா!

புதுடில்லி, மார்ச் 17

இந்தியாவின் துணைப் பிரதம மந்திரி மற்றும் விவசாயத்துறை மந்திரி ஆகியபதவிகளை திரு. தேவிலால் நேற்று இராஜினாமாச் செய்தார்.



கடந்த ஆண்டு நவம்பரில் இந்திரா காங்கிரஸைத்தோற்கடித்து தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தது. அந்த அரசுக்குள் நிலவிவந்த நெருக்கடி 16வார காலத்தின் பின் பகிரங்கமாக வெடித்திருக்கிறது.

தேவிலாலின் மகன் சௌதாலா அண்மையில் நடைபெற்ற சட்டசபை இடைத்தேர்தலின் போது தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டார் என்று எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்தே தேவிலால் ராஜினாமாச் செய்தார் என்று கூறப்படுகிறது. [உ-எ]

டாக்டர் அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார்:

# மாகாணசபை தேர்தல் ஜூன் மாதம் நடக்கும்!

## சுப நேரம்

17 - 3 - 1990

சனிக்கிழமை பங்குனி 4

சுபநேரம்:

3 -20முதல் 4 -50 வரை

இராகுகாலம்–

09 - 20முதல் 10 -50 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## தற்போதைய சபையைக் கலைக்க சட்டரீதியான சிக்கல் இல்லை

— கொழும்பில் இருந்து சிறப்புச் செய்தியாளர் —

**தற்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதற்கு சட்டச் சிக்கலோ அல்லது அரசமைப்புச் சிக்கலோ ஏதும் இல்லை.**

**இந்த மாகாணசபையை ஜனாதிபதி கலைத்ததும் எதிர்வரும் ஜூனில் அல்லது ஜூலையில் புதிதாக மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும்.**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இப்படித் தெரிவித்தார்**

கொழும்பில் வைத்து சஞ்சீவிச் செய்தியாளருக்கு அவர் தகவல் வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:-

கேள்வி:- அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசு உங்களுக்கு உறுதி மொழி அளித்திருக்கிறதா?

பதில்:- உறுதிமொழி என்று சொல்லமுடியாது திருத்தாவிட்டால் நாங்கள் தேர்தலில் நிற்கமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறோம். அதனைப் பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

கேள்வி;- அரசுக்கு அதற்குரிய பெரும்பான்மைப்பலம்

(3-ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பஸ் கட்டணம் குறைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கொழும்புக்கு நடத்திவந்த பஸ் சேவைக்குரிய கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 90 ரூபாவாக அறவிடப்பட்ட கட்டணம் 53 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி பஸ்களை திருத்துவதற்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலைக்கு பஸ்களுக்கு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக ஐந்து லட்சம் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது.

இந்தச் சாலைக்குச் சொந்தமான அனேக பஸ்கள் உதிரிப்பாகங்கள் இன்றி ஓட முடியாத நிலையில் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே புனர்வாழ்வு அமைச்சு இந்த நிதி உதவியை வழங்கியுள்ளது. (ஒ-3)

## அரிசி மூடைகளுடன் லொறி கொழும்பு நகரில் கடத்தல்
### ஆயுதபாணிகள் மூவர் கைது

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு, சென்றல் வீதியில் அரிசி மூடைகளுடன் நின்ற லொறி ஒன்று நேற்று முன்தினம் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டது.

இந்த லொறியில் இருந்த மூடைகள் புளுமெண்டார்' வீதியில் இறக்கப்பட்ட பின்னர் தகவல் கிடைத்து பொலீஸார் அங்கு சென்று லொறியைக் கைப்பற்றினர்.

லொறியில் இருந்த ஆயுதபாணிகள் மூவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் தமிழ்த்தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

## பயிலுநர் ஆசிரியர்களது நியமனங்களை ரத்துசெய்க!
### ஜனாதிபதிக்கு அஷ்ரப் கடிதம்

கொழும்பு, மார்ச் 17

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான பயிலுநர் ஆசிரியர் நியமனங்களை ரத்துச் செய்யும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு விண்ணப்பித்துள்ளது,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச்.எம். அஷ்ரப் இது குறித்து ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாண பயிலுநர் ஆசிரியர் நியமனங்கள் குறித்து ஏராளமான முறைப்பாடுகள் வந்திருப்பதாக கல்விச் சேவை ஆணைக்குழுவே கூறியுள்ளது.

ஆகவே, பயிலுநர் ஆசிரிய நியமனங்களை ரத்துச்செய்து விட்டு புதிதாக பரீட்சை, நேர்முகப் பரீட்சை, ஆகியவற்றை நடத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்— என்று ஜனாப் அஷ்ரப் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஒ-எ)

★ வடக்கு-கிழக்கில் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு

# இளைஞரைப் பிடிக்கத் தூண்டியது ராஜீவின் அரசு வகுத்த திட்டமே!

## ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர் வெளிப்படுத்துகிறார்

கொழும்பு, மார்ச் 17

தமிழ் இளைஞர்களைத் தேடிப்பிடித்து பலவந்தமாக இராணுவப் பயிற்சிக்கு உட்படுத்தும் செயலைத் திட்டமிட்டது ராஜீவ் தலைமையிலான இந்திய அரசே.

'றோ' வின் ஏற்பாட்டில் ராஜீவ் காந்தியின் இணக்கத்துடன் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படிதான் ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ், ரெலோ ஆகிய குழுக்கள் தமிழ் இளைஞர்களைத் தேடிப்பிடித்து கட்டாய இராணுவப் பயிற்சிக்கு உட்படுத்தின.

ஈ. பி. ஆர். எல். எவ்வின் முக்கிய உயர்மட்டப் பிரமுகர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

ராஜீவ் அரசின் திட்டத்தை

சிறப்புச் செய்தி

வெளிப்படுத்திய அவர் ராஜீவ் காந்தி 1989 நவம்பர் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தால் ''தமிழீழம்'' பெறுவது உறுதியாயிருக்கும் என்றும் சொன்னார்.

தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்ததாவது:-

திகதி குறிப்பிட்டு இந்தியப்படையை வாபஸ் பெறுமாறு இலங்கை ஜனாதிபதி கேட்டது திரு. ராஜீவ் காந்திக்கு எரிச்சலை ஊட்டியது.

மாகாண அரசுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்காத நிலையில் படையை வாபஸ் பெறுவது தவறானது என்பதை ராஜீவ் உணர்ந்திருந்தார்.

அதனால் அவர் தலைமையில் 'றோ' ஒரு திட்டத்தை தீட்டியது.

ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டபடி அமைதிப்



படையை விலக்குவது என்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் வரும் அகதிகளுக்கும் இடம்!

புவனேஸ்வர், மார்ச் 17

இலங்கையில் இருந்து இனி வரும் தமிழ் அகதிகளுக்கும் புகலிடம் அளிக்கத் தாம் தயார் என்று ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சர் பிஜு பட்நாயக் அறிவித்துள்ளார்.

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வவுனியாவில் பத்தினியார் மகிளங்குளத்தில் (யாழ்ப்பாணம், கண்டி வீதியின் அருகாமையில்) 6½ ஏக்கர் நெற்காணி விற்பனைக்கு உண்டு. [இதுவவுனியா ரவுணிலிருந்து 1 km தூரத்தில் உள்ளது] விபரங்களிற்கு கிருஷ்ணசாமி ஓவசியர், கிருஷ்ணா இல்லம் பத்தினியார் மகிளங்குளம், வவுனியா, அல்லது36, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [2867]

35' நீளம் 20' அகலம் செற், 15 பிணைச்சல்' 30 கேற் தகரம், 9' 2", 7' 30, 6'-36 7½ அடி நீளம் 6½அடி உயரம் 3 கடைக்கதவு நிலையுடன் 7' நீளம் 3' அகலம் 2 தட்டு கோழிக்கூடு, 150 புசல் நெல் போடக் கூடிய பெட்டகம், கோழித்தீன் தீன் ஆகியன விற்பனைக்கு உண்டு. சி. கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி. (12059]

பட்டித் தேவைக்கு உகந்த நிலையில் உள்ள யமுனாப் பாறிஆடு விற்பனைக்குண்டு. காலை 9 மணிக்கு மேல் பார்வையிடலாம். தொடர்பு 6/2 சந்தனமாதா கோவில் வீதி, கண்டிக்குளி. (12058)

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(Unsexed) தனி சிகப்பு கறுப்பு சேவல் (பிலிமத் கறுப்பு வரிசேவல் (Lohmann) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் 21-3-1990 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய். இல 9, கந்தையா வேன், சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) (12055)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

### தேவை

யாழ் நகரில் இருந்து ஒரு மைல் சுற்றாடலுக்குள் அறுவர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. யாழ் ஆசனக் கோயிலை அண்டிய பகுதி விரும்பத்தக்கது. தொடர்புக்கு 21/ அடப்பன் வீதி, யாழ்ப்பாணம். (12103)

யாழ் குடாநாட்டில் இருக்கும் பிரபல கோழிப்பண்ணை ஒன்றில் உதவி மேற்பார்வையாளராக கடமையாற்றுவதற்குஅனுபவம் உள்ளபதவியில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. தெரிவு செய்யப்படுபவர் பண்ணையில் தங்க வேண்டும். அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும். சான்றிதழ்களுடன் உடன் விண்ணப்பிக்கவும் No.644, C/o உதயன், யாழ்ப்பாணம். (2871)

ஒரு சிறிய குடும்பம் வசிப்பதற்காகவீடு ஒன்று வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோதேவை. வீடு, யாழ் நகர் மையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுவட்டாரத்திலும் சண்ணியமான இடத்திலும் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. NO. 645 C/O உதயன் (2872)

### பெண் லிகிதர் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பெண் லிகிதர் தேவை. க. பொ. த. (உயர்தரம்) வரை படித்திருத்தல் விரும்பத் தக்கது. விண்ணப்ப முடிவுத் திகதி 24-3-90. தொடர்பு: No. 641, C/o உதயன். (C/4024)

### மணமகன் தேவை

ஆறு வருடங்களுக்கு முன் விவாகரத்துப் பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியை 27 வயது சைவ வேளாளர் குல மணமகளுக்கு படித்த அரசாங்க உத்தியோகத்திலுள்ள 32 வயதிற்கும் 37 வயதிற்கும் இடைப்பட்ட மணமகன் தேவை சீதனம் வழங்கப்படும். 639 C/o உதயன் யாழ்ப்பாணம். (2851)

33 வயது நிரம்பிய, O/L சித்தியடைந்த செவ்வாய் தோஷமற்ற, சைவ, கோவிய குல மணமகளுக்கு சகல நற்குணமுடைய அரசாங்கபதவிகளிலுள்ள மணமகன் தேவை பிரஜா உரிமை பெற்று வெளிநாடுகளில் கடமை புரிவோரும் தொடர்புகொள்ளலாம். உடனே சாதக குறிப்புடன் தொடர்பு கொள்ளும் முகவரி No 642 C/o உதயன் யாழ்ப்பாணம், 2866

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கத்தோலிக்க உயர் வேளாள குலமகனுக்கு (civil Engineer) பெற்றோர் நல்ல குணமுள்ள அழகான ஓரளவு படித்த பொருத்தமான 32 வயதுக்குட்பட்ட மணமகளை தேடுகின்றனர். ஓரளவு சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது புகைப்படம் சாதகக் குறிப்பு (இருந்தால்) மற்றைய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o உதயன். No. 636 (2847)

யாழ் குருகுல கத்தோலிக்க பெற்றோர் லண்டனில்மாதம் 70,000 ரூபாவிற்கு மேல் ஊதியம் பெறும், அங்கு நிரந்தரமாக வசிக்க உரிமையுள்ள 38 வயது 5' 4" உயரமுள்ள மகனுக்கு அழகும் நற்குணமும் உள்ள மணமகளைத் தேடுகிறார்கள். கணிசமான அளவு சீதனம் எதிர்பார்க்கப்படும். விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். 643, C/o உதயன். (2868)

### தவறிவிட்டது

12. 03. 90 அன்று கலர் பிலிம்றோல் போட்டோ கலர் 135 m.m திலகாஸ் ஸ்டுடியோவுக்குமுன்பாகதவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவுசெய்து திலகாஸ் ஸ்டுடியோவில் ஒப்படைக்கவும். (12057)

இல. 355820356V உடைய துரைராசா இராசேஸ்வரி என்பவரது அடையாள அட்டை 769 பாதை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து து. ராஜேஸ்வரி 149/3, 4ம் ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம் முகவரியில் ஒப்படைக்கவும். [2870]

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு காலை 9.00 மாலை 4.00 மணிக்கு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். எஸ். ஜெயராஜா, கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (2583)

### புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு 5

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (இரண்டாவது) 18-03-90 ஞாயிறு மு.ப 10 30 பி.ப 1.30 ற்கு நடைபெறும் மேற்படி பரீட்சைக்கான காலை, மாலை வாராந்த வகுப்புகள் ஆரம்பமாயுள்ளன. கடந்த வருடம் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நிறுவனம் ஆண்டு 4 ற்கு அடிப்படை வகுப்புகள் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம் செங்குந்தரன் ஆஸ்பத்திரியடி யாழ்ப்பாணம். (2784)

### SPOKEN ENGLISH

ஆங்கிலம் இலகுவில் பேசப் பழக உதவும் கைநூல்கள் Series 1-7 தயாரிப்பு S.B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (11977)

### காஸ் குக்கர் திருத்த

'உங்களுடைய Gas குக்கரில் பிழைகளா? இல்லை; வெளியில் புதிய உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டுமா எதுவாயினும் மிகத் திறமையான முறையில் குறித்த கலணையில் திருத்திக் கொடுக்கப்படும் அதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம் D முஸ்தபா 38, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (2862)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra Samy & Co அருகாமையில்) (சி/3451)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி




திருமதி
**இராமலிங்கம் நாகலக்சுமி (மணி)**
மறைவு: 15 — 02 — 1990

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவனும், பிள்ளைகளும்**

வி. இராமலிங்கம்,
பாப்பாமோட்டை,
திருக்கேதீஸ்வரன். [11892]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி தர்மலிங்கம்**
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 – 09 – 1917 | 17 – 03 – 1988 |

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய எங்கள் அன்புத்தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இரண்டாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

உங்கள்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வறுத்தலை விளான்,
தெல்லிப்பழை.
(2712)

## SPOKEN ENGLISH

பேச்சு ஆங்கிலப் பயிற்சியில் ஆயிரக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற

**BRIGHT TRAINING CENTRE**

அடுத்த கல்வி முயற்சி

**கடைக்கணக்கு எழுதும் முறை**
**(Methed of Book - keeping)**

★ **தபால் மூலம் கல்வி** ★

கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்தில் இருந்து கற்றுத் தரப்படும். இது ஆறு மாத கால டிப்ளோமா பயிற்சியாகும்.

இன்று நாட்டில் கணக்கு பதிவாளர், (Book-keeper) கணக்கு லிகிதர் (Accounts -Clerk), கணக்கு பரிசோதகர் (Audit Clerk) ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்வது மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல் துறையில் லண்டன் (London) பட்டம் பெற்றவரும், பதினைந்து வருட கால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடன் இப்பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப்பயிற்சியினை திறம்பட செய்து முடிப்பவர்கட்கு சிறந்த தொழிலினைத் தேடித் தரக்கூடிய சிறந்த நற்சான்றிதழ் வழங்கப்படும்.


மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் சுய விலாசத்தையும் எழுதி தொடர்பு கொள்க.

METHOD OF BOOK - KEEPING

**BRIGHT TRAINING CENTRE**

P. O. Box 162, Colombo. (சி-3964)

## ஓராண்டு நினைவஞ்சலி



**குலசிங்கம் ராஜ்குமார்**
(Union Trust and Investments Ltd Jaffna Branch)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 09-02-1964 | 28-03-1989 |

திதி: 17-03-1990

ஆண்டொன்று சென்றது
மறையவில்லை உன் நினைவுகள்
தொடர்கின்றன அவை மேலும்
யாண்டு பல வாழவில்லை — ஆனால்
சாதித்தாய் பலவற்றை
உள்ளூரில் நிறைந்த நல்
ஊருணியானாய் என யாரும்
சொல்ல வாழ்ந்து மறைந்தாய்
இறையடிக்கீழ் நீ சாந்தி
பெறவும் உன்னைப் பிரிந்து
துயருறும் நாம் அமைதி பெறவும்
பிரார்த்திக்கும்—

பப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மல்லாகம் வீதி,
கட்டுவன்,
தெல்லிப்பழை. (2791)

வெளிவந்துவிட்டது!

# வரதர் மாணவர் அகராதி Varathar Students Dictionary

(ஆங்கிலம் — தமிழ்) (ENGLISH — TAMIL)

18400 சொற்கள் - 600 பக்கங்கள்

தொகுப்பாசிரியர்: கொக்குவிலூர்க்கிழான் கா. வை. இரத்தினசிங்கம்

ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு அத்தியாவசியமான நூல்.

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும் விலை ரூபா **95/-**

தொகையாகப் பெறுவதற்கு:

ஆனந்தா புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். (சி/4005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தல். . . . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் இருக்கின்றதா?

பதில்:- ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். அந்தப் பெரும்பான்மையை மற்றக் கட்சிகளின் ஆதரவோடு பெறலாம் என அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

கேள்வி:- அதற்கு நாடாளுமன்றில் உள்ள தமிழ் கட்சிகளின் ஆதரவோடு எஞ்சியுள்ள ஸ்ரீ. ல. சு. கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி. ஐக்கிய சோசலிச முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் இந்தக் கட்சிகளில் ஏதேனும் ஒன்றிடமிருந்து ஆகக் குறைந்தது மூன்று எம். பிக்களின் ஆதரவு தேவை. அந்த ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறீர்களா?

பதில்:- நாடாளுமன்றத்தில் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான அரசமைப்பு திருத்த சட்டமூலம் கொண்டு வரப்படும் போது அதைப் பற்றிச் சிந்திக்கலாம். அப்படி சட்டமூலம் கொண்டு வரப்பட்டு, அதை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நீக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால், அப்போது எழும் சூழ்நிலையில் அதை எவ்வாறு கையாளலாம் என்பதைப் பார்க்கலாம்.

திரு. அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆறுவருட காலத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் அமைதியும் சகஜ நிலையும் நிலவும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

ஆனாலும் மக்கள் மத்தியில் பொதுவாக ஓர் ஏக்கமும் பீதியும் நிலவுகின்றன. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மோதல் உருவாகுமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் மக்கள் அப்படி அஞ்சத் தேவையில்லை.

ஸ்ரீலங்கா அரசுடான பேச்சு வார்த்தையில் நாங்கள் முக்கியமாக சில விடயங்களை வலியுறுத்தினோம்.

முதலாவது தமிழ்ப் பிரதேசங்களில் சட்டம், ஒழுங்கு விடயத்தில் இராணுவம் தலையிடக்கூடாது; வடக்கு, கிழக்கிற்கு கூடியளவு—தேவைக்கு மீறி— இராணுவத்தை அனுப்பக்கூடாது; தேவைக்கு அதிகமாக எமது பிரதேசங்களில் இருக்கும் இராணுவ முகாம்களை மூடவேண்டும்; வீதித்தடை போன்றவற்றை நீக்கி மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தாத வகையில் இராணுவம் இருக்க வேண்டும்.

இரண்டாவது மாகாணப் பொலீசை உருவாக்க வேண்டும் ஒரு நீதி பரிபாலன அமைப்பையும் ஸ்தாபிக்க வேண்டும். இதனை செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். என வலியுறுத்தினோம்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு என தமிழ், முஸ்லிம் மக்களைக் கொண்ட மாகாண பொலீஸ் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்தப் பொலீசை ஸ்தாபிப்பதற்காக மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 31ஆம் திகதியாகும். இதில் எமது இளைஞர்கள் சேர்ந்து கொள்ளலாம்.

நீதிபரிபாலனத்தைப்பொறுத்தவரை மாகாண சபைச் சட்டத்தில் மாகாண நீதிமன்றங்கள் பற்றி பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அது எமக்கு திருப்தி தரக்கூடிய அமைப்பல்ல அது பற்றி நாம்தேர்தலில் வெற்றி பெற்று மக்கள் பிரதிநிதிகளாகச் சென்று பேசி, சரியான நீதிபரிபாலன அமைப்பை ஏற்படுத்துவோம் அதுவரை தற்காலிகமாக தற்போது பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் அளவிலாவது நீதிமன்றங்களை அமைக்க வேண்டும்.

### இராணுவத் தீர்வு இருக்காது

எந்தக் கட்டத்திலும் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஸ்ரீலங்கா அரசு இராணுவ ரீதியான தீர்வை நாடாது என்று ஜனாதிபதி திட்டவட்டமாக எமக்கு உறுதிமொழி தந்திருக்கிறார்.

கருத்து முரண்பாடு வந்தால் கூட அதனைப் பேசி தீர்ப்பதே தவிர படைகளைக் கொண்டு தீர்ப்பதில்லை என்று ஓர் இணக்கம் காணப் பட்டிருக்கிறது.

முப்படைத் தளபதிகளுக்கும் இதுபற்றி விளக்கப்பட்டிருக்கிறது.

"எங்கள் மக்களுக்கு எந்த வித துன்பமும் இழைக்கப் படக்கூடாது. இலங்கைப் படையோ, பொலிஸோ தேவையில்லாமல் எமது மக்களின்வாழ்க்கையில் தலையிடக் கூடாது. சட்டம் ஒழுங்கு இன்ன, இன்ன முறையில்தான் கையாளப்படம் வேண்டும் இராணுவத்தின் பங்களிப்பு இன்ன நிலையில்தான் இருக்க வேண்டும்." — என்ற விடயத்தில் அரசுக்கும் எமக்கும் இடையில் ஓர் இணக்க நிலை, உடன்பாட்டு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன்படிதான் முரண்பாட்டை தவிர்த்து, மோதலைத் தவிர்த்து தற்போதைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆகவே மோதல் ஏதும் வரக்கூடிய சாத்தியக்கூறு இல்லை. மோதல் வரமாட்டாது என்று உறுதியாகக் கூறலாம்.

அனேகமாக இந்தியப்படை இன்னும் ஒருவார காலத்துக்குள் வாபஸ் பெறப்பட்டு விடும். அவர்கள் வாபஸான வுடன் மாகாணசபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். அதற்கு சரியான வழிமுறை உண்டு.

இந்த வழிமுறையில் மாகாணசபையைக் கலைப்பதைத் தடுப்பதற்கு எந்தவிதமான சட்டச் சிக்கலோ, அரசமைப்புச் சிக்கலோ இல்லை.

மாகாணசபை கலைக்கப் பட்டவுடன் மாகாணசபைக்கு புதிய தேர்தல்கள் நடத்தப் படும். அனேகமாக ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் இந்தத் தேர்தல்கள் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம்.

தேர்தல் நடைபெறும் என்றால் ஒரு கேள்வி எழுகிறது. அது ஜனநாயகத் தேர்தலாக இருக்குமா? நாங்கள் ஆயுதங்களை வைத்திருக்கும் போது நடக்கும் தேர்தல் ஜனநாயக முறையில் இருக்குமா? என்று நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள்.

மற்றைய அமைப்புகள் ஜனநாயக தேர்தலுக்கு வரவேண்டும் என்பதற்காக – நாங்கள் கடந்த 17 வருடங்களாகப் போராடி, இரத்தம் சிந்தி, உயிர்கொடுத்து சேர்த்த ஆயுதங்களை கீழே வைக்க வேண்டுமா? அந்த ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு ஈ.பி.ஆர் எல். எவ், ஈ. என். டி. எல் எவ், புளொட், ரெலோ போன்றவற்றை மேடைக்குக் கொண்டுவந்து மாலை போடவா சொல்கிறீர்கள். அது சரியல்ல.

ஒன்று மட்டும் நிச்சயம் நாங்கள் ஆயுதத்தை வைத்திருந்து தேர்தலுக்கு வரும் மற்றைய அமைப்புகளை பயமுறுத்தப் போவதில்லை.

### எப்படி வழங்குவது?

கேள்வி:- மற்றைய அமைப்புக்களின் பாதுகாப்பும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்கள் ஆயுதமின்றி வந்தால் அவர்களுக்கு நீங்கள் பாதுகாப்பு கொடுப்பீர்களா?

பதில்: அப்படி ஒரு உறுதிப்பாட்டை நாங்கள் வழங்க மாட்டோம், அப்படி ஓர் உறுதியை நாங்கள் வழங்கினால் எல்லா கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் வந்துவிடுவார்கள். எல்லாக் கொள்ளைக்காரர்களும் கொலைகாரர்களும் எங்களிடம் பாதுகாப்பு கேட்பார்கள்.

முன்னர் ஒரு லட்சம் இந்திய இராணுவத்தினர் வசம் ஆயுதங்கள், துரோகக் கும்பல்களிடம் ஆயுதம், இலங்கை இராணுவத்திடம் ஆயுதம்— இவற்றுக்கு மத்தியில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதைத்தான் ஜனநாயகத் தேர்தல் என்று இந்திய ஜனநாயகமே சொல்லிக் கொண்டிருந்தது.

ஆனால் இப்போது புலிகள் மாத்திரம் ஆயுதம் வைத்திருக்கும் போது எல்லோரும் ஜனநாயகம் வேண்டும் என்று கதைக்கிறார்கள்.

இன்றைக்கு தென்னிலங்கையோடு ஒப்பிடும் போது ஆயுத பாவனை, ஆயுத பாணிகளின் நடமாட்டம். வடக்கு, கிழக்கில் குறைவாகவே இருக்கின்றன. தெற்கில் மந்திரி முதல் சாதாரண அரசியல் வாதிவரை ஒவ்வொருவருக்கும் ஒரு ஆயுதப் படை பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் வடக்கு, கிழக்கில் அப்படியில்லை.

(அ-இ-உ)

## 23 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
07-07-39

உதிர்வு
24-02-90



அமரர்

### திருமதி சரஸ்வதி நடராஜா அவர்கள்

நந்தா விளக்காய் நமையெல்லாம் நடாத்தி
சிந்தை துயர்மிகச் சென்றனை அம்மா!
அருமருந் தாக அணைத்த நின் றனக்குக்
கருமா திதானும் கழித்திடற் கருகிலோம்
நாளாய்ப் பொழுதாய் நாமெலாம் துயருற
மீளாத்துயிலில் வீழ்ந்தனை அம்மா!
நின்றனக் காய நிறைகரு மாதி
நன்றே நினைந்து நமதஞ் சலியினை
மல்கு மன்புடன் வழங்கு கின்றமை
செல்கதி நன்றாய்ச் சிறக்கப் பரவுதும்

அன்புடையீர்!

நாளை 18-03-90 ஆம் நாள் அதிகாலை 5.30 மணியளவில் நிகழ இருக்கும் எமது குடும்ப ஒளிவிளக்கின் அந்தியேட்டிக்கிரியைகளிற் கலந்து அன்னாரின் ஆன்ம நற்கதிக்காகப் பிரார்த்திக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

அன்புள்ள
அன்னாரின் நாயகன் சி. நடராசா,
(இளைப்பாறிய இலங்கை கடற்படை வானொலி அலுவலர்)
புத்திரர் ந. வசந்தகுமார் (சுவிஸ்),
திருமதி வசந்தி புஷ்பநாதன் (சுவிஸ்),
புத்திரியர் திருமதி சாந்தி சூரியகுமாரன் (கனடா),
செல்வி ஜெயந்தி நடராசா,
பேரப்பிள்ளை பு. மேனகா (சுவிஸ்).

"வசந்தபவனம்"
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(2759)

## புலிகள்-ஹமீத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரியாலய நிர்வாகப்பொறுப்பாளர் திரு. நடேசன் ஆகியோர் இன்று காலை விசேட விமானத்தில் திருகோணமலை நோக்கிப் புறப்படுவர்.

திருகோணமலையில் இன்று நடைபெறும் சந்திப்பில் இவர்களுடன் விடுதலைப்புலிகளின் திருகோணமலை பிராந்தியத் தளபதி திரு. பதுமன், திருகோணமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ரூபன் ஆகியோரும் திருகோணமலையில் உள்ள முப்படைகளின் உயர் அதிகாரிகளும் பங்குபற்றுவர்.

திருகோணமலையில் நிரந்தர அமைதியையும், சகஜ நிலையையும் உறுதிப்படுத்துவது குறித்தும் —

இலங்கை அரச படைகள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படும்என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதிநிதிகள் வியாழக்கிழமையும், நேற்று வெள்ளிக்கிழமையும் கொழும்பில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். (உ)

## கொழும்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இதுகாலவரை இச்சேவைக்கு ஆசனப்பதிவுகள் ஏற்கப்பட்டு விசேட சேவையாக நடத்தப் பட்டு வந்தது தெரிந்ததே.

இனி ஆசனப் பதிவுகள் ஏற்கப்பட மாட்டா எனவும், சாதாரண சேவையாகவே நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதால், பயணிகள் குறைந்ததை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறியவருகிறது.

# இளைஞரைப் பிடிக்கத் தூண்டிய. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும்—

அந்த வேளையில் —அமைதிப்படை விலகிய கையோடு அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படாததைக் காரணம் காட்டி மாகாணசபை தமிழீழத்தைப் பிரகடனம் செய்வது என்றும்—

தமிழீழம் பிரகடனப்படுத்தப்பட்ட கையோடு அதை சில நாட்களுக்கேனும் பாதுகாத்து அப்பிரதேசத்தை எமது கையில் தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாக எமது இராணுவ பலத்தை நாம் எப்படியாவது பெருக்கிக் கொள்வது என்றும்—

நாம் எமது பிரதேசத்தை பாதுகாத்திருக்கும் வேளையில் தமிழீழத்தை அயல் நாடுகள் சில அங்கீகரிக்க கூடிய வகையில் அந்த நாடுகளை இந்தியா வழிப்படுத்தும் என்றும்—

அவ்வாறு சில நாடுகளின் அங்கீகாரம் கிடைத்தகையோடு ஈழத் தமிழரைப் பாதுகாக்க வேண்டும் என்று காரணத்தைக் காட்டி மீண்டும் இந்தியப்படை இலங்கையில் வந்து இறங்கும் என்றும்— திட்டம் திட்டப்பட்டது.

தமிழீழத்தை நாம் பாதுகாக்க வேண்டிய அந்தக் கால கட்டத்தில் எமது இளைஞர்களுடன் கலந்து நின்று இலங்கைப் படையை எதிர்ப்பதற்கு இந்தியத் துருப்புக்கள் மற்றும் நிபுணர்களைத் தந்துதவுவதற்கும் ராஜீவ் காந்தி தயாராக இருந்தார்.

இந்தத் திட்டத்தின்படி தான் நாம் பலவந்தமாக இளைஞர்களை இராணுவப் பயிற்சிக்குப் பிடித்துச் சென்றோம்.

ஆனால் ராஜீவ் காந்தி எதிர்பாராத வகையில் 1989 நவம்பர் தேர்தலில் அவர் தோற்றுப்போனார். அவரது தோல்வியால் அவர் தீட்டிய திட்டமும் குழம்பிப்போனது.

இளைஞர்களை கட்டாய பயிற்சிக்கு பிடித்துச் சென்றதால் எமது அமைப்பு எமது மக்கள் மத்தியில் கெட்ட பெயரைச் சம்பாதித்து விட்டது என்பது உண்மைதான்.

ஆனாலும் எம்மைப் பொறுத்தவரை எமக்கு இது நன்மையே

முதலாவது, எமது இளைஞர்களுக்கு அவர்கள் எந்த அமைப்பை ஆதரித்தாலும் அவர்களுக்கு உரியஇராணுவப் பயிற்சியைப் நாம் பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.

இரண்டாவது, இந்தப் பயிற்சியினால் எமக்குஆயிரக்கணக்கில் ஆயுதங்கள் கிடைத்திருக்கின்றன.

நாம் எத்தனை இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்தோமோ, அத்தனை எண்ணிக்கை ஆயுதங்களை நாம் இந்தியாவிடமிருந்து பெற முடிந்தது.

எம்மிடம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் இன்று எமது வசம் இல்லாமல் இருக்கலாம். அந்த இளைஞர்கள் சிலர் அவர்களுக்குக் கொடுத்த ஆயுதங்களுடன் தப்பி ஓடியிருக்கலாம். ஒரு சில பகுதி ஆயுதம் பறிபோயிருக்கலாம். ஆனால் எஞ்சிய பெருந்தொகையான ஆயுதங்கள் எம்மிடம் இருக்கின்றன.

அவை எமக்கு என்றோ ஒரு நாள் உதவக்கூடுமல்லவா?

— இப்படி அந்தப் பிரமுகர் கூறினார். (அ-உ)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வைபவம்

சர்வதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் தீவுப் பகுதிக் கிளை சான்றிதழ் வழங்கவும், கைநூல் வெளியிடவும் ஏற்பாடுகள் செய்துள்ளது.

இந்த வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில், வித்தியாலய அதிபர் செல்வி மா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

# இழந்த உரிமை. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைக்காக கெரில்லா அமைப்பாக இரகசியமாக இயங்கிய நாம் இன்று தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப்படையாக உங்கள் முன்வந்துள்ளோம். விடுதலைப்படை மேலும் பலமடைவதற்கு மக்கள் தமது பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும்.

கடந்த 18 வருடங்களாக இரகசிய வேலைத்திட்டங்களை, ஆயுதம் ஏந்தி, மக்கள் விடுதலைக்காக மேற்கொண்டு வந்தோம். பல தியாகங்களைப் புரிந்து, எம்மை அர்ப்பணித்து விடுதலைப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தை அடைந்தோம்.

அந்நிலையில் அந்நிய சக்தியான இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தமது பிராந்திய நலனுக்காக தமிழர் இயக்கங்களுக்கிடையில் ஊடுருவி எமக்குள் பகைமையை வளர்த்தனர். அந்நிலையில் ஆக்கிரமிப்பாளர்களை பெரும் சக்தி முறியடிக்க முனைந்தபோது சிறிய சக்திகள் அந்நியருக்கு உதவிக்குப் போயின. அந்நிலையில்தான் நாம் கடுமையான முறையில் நடக்க வேண்டி வந்தது.

### நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை

இந்தியத் தலைமைக்கும் ஸ்ரீலங்காவின் குறிப்பிட்ட சில தலைமைகளுக்கும் இடையில் முரண்பட்ட நிலை ஏற்பட்ட போது தான், நாம் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டோம்.

கடந்த எட்டு மாதங்களாக நடைபெறும் இப்பேச்சு வார்த்தைகளின் பயனாக அந்நியப் படையினரை வெளியேற்றும் இறுதிக்கட்டம் வந்துள்ளது. அத்துடன் இங்கிருந்த துரோகக்கும்பல்களை நிராயுதபாணிகளாக்கியும் உள்ளோம்.

எமது இரண்டாம் கட்டத் திட்டம் என்னவெனில் தமிழ் பிரதேசங்களில் நீண்ட அமைதியை கொண்டு வருவதுடன் புனரமைப்பு வேலைகளையும் மேற்கொள்வதாகும்.

பேச்சு வார்த்தை நடந்தாலும் எமது விடுதலைப் படையின் பலம் வலுப்படவேண்டும். பலம் மட்டுமல்ல எமது மக்களின் அரசியல் ஆதிக்கமும் உருவாக்கப்படவேணடும் அதன் மூலமே அமைதியைக் கொண்டு வர முடியும்.

இன்றைய அமைதிக்குக் காரணம் எமது கரங்கள் தான். இந்த இனவாத சக்திகளின் மனமாற்றமும் அல்ல" இவ்வாறு அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

திருமலையில் வன்செயல் உருவாகுமா? என்று மாணவன் ஒருவன் கேட்ட கேள்விக்கும் பதில் அளிக்கையில், "திருமலையில் மட்டுமல்ல வேறு பகுதிகளிலும் நிலைமை மாறலாம். தன்னிச்சையான வன்முறைகள் மூலமும் கூட்டு வன்முறைகள் மூலமும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படலாம். ஜனாதிபதி பிரேமதாசா எம்முடன் நடத்திய பேச்சுகளின் போது, மோதல்கள் ஏற்படக் கூடிய சூழ் நிலை உருவாகாது என உறுதி கூறியுள்ளார். ஆனால் நாம் அதையே யதார்த்தம் என்று எண்ணி ஏற்கப் போவதில்லை. இன ஒழிப்பு எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை எதிர் கொள்ள நாம்தயார்" என்று திரு. மாத்தயா பதிலளித்தார்.

### ஆறாவது திருத்த நீக்கம்

அரச அமைப்பின் ஆறாவது திருத்த சட்டத்தை நீக்குவது குறித்து கேட்கப்பட்ட கேள்விஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் கூறியதாவது :-

"ஆறாவது திருத்த சட்டத்தை நீக்க வேண்டியது அரசின் கடமையாகும். அதில் அரசு தோல்வியடைந்தால் எமக்கு தோல்வியில்லை. எம்மைப் பாதிக்காது. அந்த விடயம் ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தது" என்று கூறினர் (அ-3)


எமது நேற்றைய புதிய வெளியீடு
ராமராஜன் — ரேகா — கவுண்டமணியின்
பாட்டுக்கு நான் அடிமை (ஒறிஜினல்)
அடுத்த வெளியீடு
விஜயகாந்தின்
புலன் விசாரணை (ஒறிஜினல்)
வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



எமது நேற்றைய
புதிய வெளியீடுகள்
1. ✶ ராமராஜன் ✶ ரேகா ✶ கவுண்டமணி
பாட்டுக்கு நான் அடிமை
(Original)
2. ✶ சிவாஜி ✶ பானுமதி ✶ பத்மினி
ராஜ பக்தி
3. ✶ ஜெமினி ✶ அஞ்சலிதேவி ✶ வீரப்பா
வீரக்கனல்
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[சி-4042]


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



17-02-1990 இறைபதம் அடைந்த
அமரர்

### இ. வி. தளையசிங்கம் B.A.

(Hons) B. Sc (London) பட்டயர்கணக்காளர்
F.C.A. (England and Wales)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் பங்குனித் திங்கள் 5ஆம் நாள் 18-3-90 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலையிலும், சபிண்டீகரணம் 19-3-90 திங்கட்கிழமை காலை 10.00 மணி அளவில் அன்னாரின் வீமன் காமம் தெல்லிப்பளை இல்லத்திலும் நடைபெறும். அவ்வமையம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரத்துவம் அடைந்த இல்லத்தலைவரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி விமலா தளையசிங்கமும்
பிள்ளைகளும்.

வீமன் காமம், தெல்லிப்பளை.
10 3-90

(12061)

## முதலாம் வருட நினைவு அஞ்சலி



திருமதி
கௌரிஅம்மா தம்பிராசா (காந்திமதி)

தோற்றம்: 22-06-1928 மறைவு: 17-3-1989

திதி: 05-04-1990

அன்பின் உருவமாய் பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின். பிறப்பிடமாய்த் திகழ்ந்து
எம்மை வளர்த்து நல்வழிகாட்டி
வாழவைத்து இறைவனடி சேர்ந்த எங்கள்
அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் இதயத்திலே சுடர்விட்டு
பிரகாசிக்கின்றது. என்றும் உங்கள் ஆத்மா சாந்தி
யடைய பிரார்த்திக்கின்றோம்.


உங்கள் பிரிவால் துயருறும்;

அன்பு மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

பணிக்கர் வளவு
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(2907)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா குகதாசன்**
(ஆவரங்கால்)
(இளைப்பாறிய கல்வித்திணைக்கள கட்டிடப்பகுதி மேற்பார்வையாளர்)

தோற்றம் 3. 8. 1921 மறைவு 15. 2. 1990

அந்தியேட்டி 17. 3. 1990

இவ்வுலகை விட்டுப் போனாலும் எம் உள்ளங்களை விட்டு நீங்காத, எங்கள் குடும்பவிளக்கு. எமதுதலைவனுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்கனம்
குடும்பத்தினர்.

கிருபா போட்டோ,
ஆவரங்கால்.

(2903)

## உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக் குறைந்தது 4000 சதுர அடிகொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொது மக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக் கூடிய யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ, தேவைப்படுகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பிரதி முகாமையாளர்,
இலங்கை மின்சார சபை,
இல.52, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்,
15-03-1990.

(சி/4053)

# Jaffna English Academy

9, Rakka Lane, Chundikuli,
JAFFNA.

### TOEFL

(Test of English As A Foreign Language)

Week - End Batch & Week Day - Batch

★ Meticulous Coaching
★ Highest Score Assured.
● DURATION — 3 Months

### ESOL

(English for speakers of other languages) - London

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்குமதே வேளையில் London Certificate பெறக் கூடிய அரிய வாய்ப்பு பரீட்சைகளை Jaffna English Academy யிலேயே எடுக்கலாம்.

Assessment of Answerscripts and Awards of Certificates by Pitmans, London.

★ World — Wide recognition

Week - End Batch: Commencement: 31-03-1990
Week - Day Batch: Commencement: 30-03-1990

### EBC

(English For Business Communications)- London.

A course designed to enhance the Candidate's skill in usiug the English Language in business and professional Correspondence.

★ Assessment of Answerscripts and Award of Certificates from Pitmans, London.

★ Examinations Conducted at Jaffna English Academy.

Week - End Lectures: Commencement: 24-03-1990

### Spoken English (For Adults)

Week - End Batch: Commencement: 31-03-90
Week - Day Batch: Commencement: 28-03-90
● DURATION — 3 Months

### Higher English Course

Week - End Lectures

★ Shakespeare's Romeo and Juliet
★ Bernard Shaw's Arms and the Man
★ George Eliot's Silas Marner
★ Arthur Miller's Death of a Salesman
★ Modern Short Stories
★ Letter Writing & Precis
★ Selected Poems
★ Essays
★ Comprehension Etc

Lectures by:
**Kandiah Navarendran.**

[C-4022]

# சிறப்பாக நடந்து முடிந்த சாரணிய விசேஷ பயிற்சி

## "இணைவு பெறும்" வைபவம் இன்று

யாழ்ப்பாணம் மார்ச் 17

யாழ் மாவட்ட சாரணிய வழிகாட்டுதலுக்குரிய விசேஷ பயிற்சி கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 29 பாடசாலைகளில் இருந்து 65 சாரணியத் தலைவிகள் கலந்து கொணடனர்.

செல்வி அருள்நந்தி, திருமதி மயில்வாகனம், திருமதி தே. அரியரத்தினம், செல்வி எலாயஸ், திருமதி அருட்பிரகாசம் ஆகியோர் இப்பயிற்சிகளை நடத்தி முடித்தனர்.

சிரேஷ்ட சாரணியத் தலைவிகளான திருமதி நவரட்னராஜா, செல்வி கனகராஜா, செல்வி ஜீவானந்தம், திருமதி நல்லருளானந்தம், திருமதி சிவராஜா ஆகியோர் உதவியாக இருந்தனர்.

''பாசறைத்தீ'' வைபவத்தை வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இராஜரத்தினம் திறந்து வைப்பார்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அதே சமயம் யாழ் மாவட்ட சாரணிய வழிகாட்டுநருக்கான விசேஷ பயிற்சியில் பங்கு பற்றிய 20 புதிய சாரணியத் தலைவிகளின் ''இணைவு பெறும்'' வைபவம் இன்று 17 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 17

ஷப்றா அணிக்கும் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் அணிக்கும் இடையிலான சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிமைதானத்தில் நடக்கவிருக்கும் இப்போட்டி காலை 8. 30 க்கு ஆரம்பமாகும்.


## வானொலி நிகழ்ச்சிகள் 17- 3- 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை |
| 5.30 | பாமாலை |
| 5.45 | சைவ நற்சிந்தனை |
| 5.50 | கிறிஸ்தவ நற்சிந்தனை |
| 5.55 | பக்திப்பாடல்கள் |
| 6.00 | வர்த்தக சேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தக சேவை |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தக சேவை |
| 8.00 | வீணை |
| 8.15 | தமிழ் மூலம் சிங்களம் |
| 8.30 | மாணவர் மன்றம் |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10.00 | கல்வியரங்கம் |
| 10.30 | அறிவுச் சுடர் |
| 11.00 | இசையமுதம் |
| 11.30 | ஓடி விளையாடு பாப்பா |
| 11.45 | அரங்கேற்றம் |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6.10 | அறிவிப்புகள் |
| 6.15 | ஞானக் கோவை |
| 6.30 | இசைப் பயிற்சி |
| 6.45 | நாட்டுப் பாடல்கள் |
| 7,00 | குன்றின் குரல் |
| 7.30 | மெல்லிசைப் பாடல்கள் |
| 7.50 | உலகச் செய்திகள் |
| 8.00 | முஸ்லிம் நிகழ்ச்சி |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப் பாடல்கள் |
| 9.30 | நாடகம் |
| 10.00 | வீணை |
| 10.45 | பஜன் |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் நகரில் வீதி ஒழுங்குகளைப்பேணல் பற்றிய கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள நாவலர் மண்டபத்தில் நாளை 18 அம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 9.30 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளார்.

## 31 நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



**திரு. ஆறுமுகம் பொன்னையா**
(ஓய்வு பெற்ற மல்லாகம் நீதிமன்ற உத்தியோகத்தர்)


தோற்றம் 16 – 06 – 1911 மறைவு 15 – 02 – 1990

16 – 02 – 1990 இல் நடைபெற்ற அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 17 – 03 - 1990 ஆம் திகதி எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்கு கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(2908)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் V. K. ஆறுமுகம்**
(முன்னாள் பொலீஸ், அதிபரும் மக்கள் வங்கி வடமாநில பாதுகாப்பு அத்தியட்சகரும்)

தோற்றம்: 19 – 08 – 1911 மறைவு: 28 – 03 – 1989

திதி: 17 — 03 — 1990

உங்கள் ஆத்மா சாந்திடைய முருகப்பெருமானை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

''மீன பவனம்''
நெல்லியடி,
கரவெட்டி.

[11991]

# VICKNA TUITION CENTRE

52, STANLEY ROAD, JAFFNA. Regd. No. 12141

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

★ A/L கலை, வர்த்தக மீட்டல ★ DAY CLASSES (7.00 — 12.00) ★ ஆரம்பம்:– 19 – 03 – 1990

☐ SATURDAY & SUNDAY (8.00 — 12.00 ☐ ஆரம்பம்:– 18 – 03 – 1990

முக்கிய குறிப்பு:
1. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.
2. வினா, விடை வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படும்.
3. [Day Classes] [illegible] நாட்களும் நடைபெறும்.

[சி-4034]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "குறமகள் கதைகள்" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் மார்ச் 17

யாழ் இலக்கிய வட்டம் நடத்தும் "குறமகள் கதைகள்" சிறுகதைத்தொகுதியின் வெளியீட்டுவிழா இன்று 17 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை வைத்தீஸ்வராவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

செங்கை ஆழியான் தலைமை வகிக்கும் வெளியீட்டு விழாவில் திரு. அநுவை. நாசராசன் வரவேற்புரை நிகழ்த்துவார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. வரதர், திரு. டொமினிக் ஜீவா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள். திரு. க. இராசநாயகன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். கலாநிதி இ. பாலசுந்தரம், திருமதி பத்மா சோமகாந்தன், சித்தி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். செம்பியன் செல்வன் நன்றியுரை கூறுவார். (க)

## சைக்கிள் மாட்டுவண்டி வரி

யாழ்ப்பாணம் மார்ச் 17

யாழ். மாநகரசபைக்குட்பட்டவர்கள் தம் சைக்கிள், மாட்டுவண்டி ஆகியவற்றுக்கான வரிகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்குமுன் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இத்திகதிக்குபின் 10 சதவீத தண்டத்துடனேயே வரி செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## சிவமகிமை நாடகம்

கொடிகாமம் மார்ச் 17

மந்துவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் பயிற்சி அளித்த சிவமகிமை என்ற சமைய நாடகம் ஒரே இரவில் ஐந்து மேடைகளில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

மந்துவில் மன்றப்போஷகர் திரு வே. இத்தினசிங்கம் முயற்சியால் இதுநடைபெற்றது. (க-75)

## வயாவிளான் வித்தியாலயம்

யாழ்ப்பாணம் மார்ச் 17

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப்பழைய மாணவர் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

---

### மகாப்பொல புலமைப்பரிசில் வழங்கும்வைபவம் 1988/89 (25-03-1990)

மகாப்பொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவக் கொண்டாட்டங்கள் 25/03/90 தொடக்கம் 04/04/90 வரை பண்டாரகம மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கின்றன. மார்ச் 25-ம் திகதி மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் புலமைப் பரிசில்களை வழங்குவார். இந்த வைபவத்தில் பங்கேற்கும்படி யாழ் பல்கலைக் கழக முதலாம் வருட (1988/89) மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த வைபவத்தில்பங்குபற்ற விரும்பும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இம் மாதம் 20-ம் திகதிக்கு முன் யாழ் பல்கலைக்கழக மாணவரவை ஊடாக சிரேஷ்டமாணவ ஆலோசகருடன் தொடர்புகொள்ளும் படி அறிவுறுத்தப்படுகிறார்கள். போக்குவரத்து, தங்குமிட வசதிகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்
(C/4051)

---

### யாழ். மக்களுக்கோர் அரிய செய்தி!

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## இரவு - பகல் சர்வதேச நேரடித் தொலைபேசிச் சேவை

யாழ். நகரிலிருந்தே உலகின் எந்த நாட்டிலாவது வதியும் தங்கள் உறவினர்களுடனோ, நண்பர்களுடனோ உடனடியாக நேரடித் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

- ★ நேரடியான துரித சேவை
- ★ தெளிவான சம்பாஷணை
- ★ நியாயமான கட்டணம்
- ★ இரவு - பகல் சேவை

தங்கள் சகல தொலைபேசி அழைப்புகளுக்கும் நாடுங்கள்:

## சர்வதேச நேரடித் தொலைபேசி நிலையம்

எஸ். பீ. எஸ். போக்குவரத்துச் சேவைக் கட்டிடம்
இல. 27, விக்ரோறியா றோட்,
(யாழ். ஆஸ்பத்திரிப் பின் வீதி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் — 025-2850

குறிப்பு :-

இரவு நேரங்களில் நமது வாடிக்கையாளர்களுக்கு வெளிநாடுகளில் உள்ளவர்களால் பெறப்படும் அழைப்புக்களில் சம்பாஷணை செய்வதற்கும் இடமளிக்கப்படும். [சி/4011]

---

## Publications For Sale

"THE WORD, MEN and MATTERS"
In Five Volumes
by
The Rt. Rev. Dr. S. Kulandran
(Formerly Bishop of the Jaffna Diocese of the C.S.I.)

PRICE: Rs: 200/- Per Set.

Available at; Jaffna College, Vaddukoddai
C. I. S. R. S., Ashram, Chunnakam
C. L. S., Hospital Road, Jaffna.
Thiru Marai Illam,
1st Cross Street, Jaffna.

A. KADIRGAMAR,
Acting Director, C.I.S.R.S.,
Chunnakam. [C-4030]

---

## கலை வர்த்தகக் கல்லூரி, C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

### SPOKEN ENGLISH

- ✶ LISTENING
- ✶ READING
- ✶ WRITING

ஆசிரியர்;
**Mrs. SHAN**

ஆரம்பம்: 17 - 03 - 1990 சனி 2.00 p,m
(சி-4013)

---

## ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப் போல் நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள் புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி - தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

### Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

★ தங்களின் ஆங்கில பயிற்சி நிலையத்தின் மூலம் பயன் அடைந்த மாணவர்களில் நானும் ஒருவன் என பெருமையுடன் கூறுகிறேன். தங்களின் பயிற்சி புது முறையில் அமைந்து இருந்தமையால் ஆங்கிலத்தை படிப்பது மிக இலகுவாக இருந்தது. தபால் மூலமே இவ்வளவு இலகுவாக ஆங்கிலத்தை படிக்கலாம் என்பதை தங்களின் பயிற்சி நிரூபித்துவிட்டது.

செல்வன் த. சண்முகநாதன்
சரசாலைமத்தி,
சாவகச்சேரி. (BTC-1982)

★ நாங்கள் பிறைட் ஸ்போக்கின் இங்கிலீஸ் மூலம் முன்னர் இருந்ததை விட தற்போது திறம்பட பேசக் கூடியதாக உள்ளோம். ஆங்கிலம் பேசும் வல்லமையை எமக்கு அளித்த பிறைட் பயிற்சி நிலையத்துக்கு எமது நன்றிகள்.

S. கீதா, S. சுகந்தி
632, கொக்காவில் றோட்,
துணுக்காய். (BTC-2243, 2245)

★ I am pleased to inform you namely I have got progress in English study through your English lesson. Thanks a lot for your help I am very greatful to those who Contributed to my betterment.

Miss Pathmini Kumarakuru,
Vallai Road,
Thondaimanaru.
(BTC - 2375)

★ எனக்கு தெரிந்த வரையில் ஓர் ஆசானில்லாமல் சரியாகக் கற்க முடியுமா? என்று அஞ்சுவோருக்கு சிறந்த பதில் அளிக்க வல்ல ஒரே நிறுவனம் பிறைட் ரெயினிங் சென்ரரேயாகும். தபால் மூலம் ஆங்கில கல்வியில் நம்பிக்கையற்றவளாகவே இருந்தேன். ஆனால் உங்களின் உளவியல் ரீதியான பயிற்சிகள் எனக்கு நம்பிக்கை ஊட்டியதோடு ஆங்கிலம் பேசும் வல்லமையையும் அளித்துள்ளது.

Miss M. Zeenathun Nissa,
316/1, Main Street,
Gandara. (BTC-2381)

### Method of Book Keeping (தபால் மூலம் கல்வி)

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இதற்கு மொத்த கட்டணம் ரூபா 500.00 மாத்திரமே,

இன்று நாட்டில் கணக்கு பதிவாளர் (புக்கீப்பர்) கணக்கு லிகிதர் (எக்கவுன்ஸ் கிளார்க்), கணக்கு பரிசோதகர் (ஓடிட் கிளாக்) ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்ளுவதன் மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல் துறையில் இங்கிலாந்து (லண்டன்) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருட கால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடனே இப் பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப் பயிற்சியினை திறப்பட செய்து முடிப்பவர்கட்கு சிறந்த தொழிலினை தேடித்தரக் கூடிய சிறந்த சான்றிதழ் வழங்கப்படும்.

### SPOKEN SINHALA

சிங்களத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை - கவலை வேண்டாம். மூன்றே மாத காலத்தில் உளவியல் ரீதியில் மிகத் திறம்பட சிங்களம் பேசக்கூடியதாக கற்றுத் தேற முடியும். விபரங்களை அறிய விரும்புவோர் "ஸ்போக்கன் சிங்ஹள" என இடது பக்க தபால் மூலையில் எழுதி அனுப்பவும்.

### BUSINESS ENGLISH

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத் திட்டம் - இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விண்ணப்பப்படிவம் எப்படி தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்றாட பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

### புது அறிவொளி

வெளிவந்து விட்டது. எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ், பிரபல்ய புத்தக கடைகளில் கிடைக்கும். நேரடியாக பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து படிக்க விரும்பும் மாணவர்கட்கு பல விசேட வசதிகள் செய்துள்ளோம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:-

## BRIGHT TRAINING CENTRE

P. O. BOX 162, COLOMBO.
SRI LANKA
[சி-3969]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்,

(வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்)

### G. A. Q. - 91

A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பல்கலைக்கழக பதிவுகளை எமது நிறுவனத்திற்செ[illegible] கொள்ளவும்.

விரிவுரையாளர்கள்:

| | |
|---|---|
| பொருளியல் | — குமாரவேல் |
| புவியியல் | — குணராஜா |
| தமிழ் | — குழந்தை |
| இந்து நாகரிகம் | — அருள்நங்கை |
| அரசியல் | — குமார் |
| மெய்யியல் | — சயந்தன் |

விண்ணப்பப் படிவங்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
S. அருள்நங்கை
(சி-4009)

---

## உங்கள் தேவை! எங்கள் சேவை!!

- ★ தரமான
- ★ தெளிவான
- ★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகளுக்கு


✶ ✶ ✶

## "ஷப்றா" (சேவைப் பகுதி)

இல. 19. 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி



வாரி சின்னப்பு

அன்னை மடியில்: 10-05-1928 இறைவன் அடியில்: 28-03-1989

அன்பின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய்
எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கி
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டு மறைந்து ஓராண்டு சென்றாலும்
ஒரு கணமும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!!

உங்கள் பிரிவுத்துயரால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பெறாமகன், பேரப்பிள்ளைகள்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி. (2904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமான தேங்காய் எண்ணெய்
கொண்டு தயாரித்த நுரை வளம் மிக்க
"மில்க்வைற் பார் சோப்"
இரு அளவுகளில் கிடைக்கின்றது.
ரூபா. 20/-, ரூபா- 10/-
பார் சோப் உறை 5 சேர்ப்பித்து
"யோகாசன விளக்க நூலும் படமும்"
பெற்றுக்கொள்ளுங்கள்.

# சஞ்சீவி

17-03-1990 சனிக்கிழமை

இளம் வயதிலேயே சேமிப்புப் பழக்கம்
உண்டாவதால் சுபீட்சமான
எதிர்காலம் உறுதியாகின்றது.
மில்க்வைற் சோப் மேலுறையிலிருந்து 100
திருக்குறளை நேரில் சேர்ப்பித்து ஒரு
உண்டியலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்,
யாழ்ப்பாணம்.

## தொலைபேசி இணைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

உரும்பராய் தபாலகத்துக்கு தொலைத்தொடர்புதிணைக்களத்தினால் புதிய தொலைபேசி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

நகரில் இருந்து நீண்ட தூரத்துக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்பு இது ஆகும். (இ)

## ஞாயிறன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

சண்டிலிப்பாய் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 642 குடும்பங்களுக்குரிய மீளக்குடியமர்தல் நிவாரணம் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்பட இருக்கிறது. (உ-3)

## செயலகத்தில் 26ஆம் திகதி விசேட மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச்17

யாழ் – மாவட்டத்திற்கு வரவு- செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 250 லட்சம் ரூபாவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராய விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

யாழ் செயலகத்தில் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற இருக்கும் இம் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்வர். (ஓ-3)

## முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இளைஞர் சடலம்

முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு — மாங்குளம் வீதியில் கிடந்த இளைஞர் ஒருவரின் சடலத்தை பொலீஸார் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி முதல் சடலம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இறந்தவர் சுமார் 22 வயது மதிக்கக்கூடியவர். கறுப்பு நிறமுடைய இவர், சாம்பல் நிற நீளக் காற்சட்டையும், புள்ளியிட்ட சேர்ட்டும் அணிந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலத்துக்கு அருகில் கிருமிநாசினிப் போத்தல் ஒன்றும் காணப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஓ-92)

## செய்திச் சாரம்

## விட்டாஸ்பிறே விலை குறையும்

கொழும்பு, மார்ச் 17

"விட்டாஸ் பிறே" குழந்தைகள் பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இப்போது 38 ரூபாவாக விற்கப்படும் 400 கிராம் விட்டாஸ்பிறே அடுத்த மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 36 ரூபா 40 சதமாக விற்கப்படும். 250 கிராம் விட்டாஸ் பிறே 23 ரூபா 10 சதத்துக்கு விற்பனை செய்யபடும். (அ)

## தேசிய இராணுவத்தைத் தேடி வேட்டை

கொழும்பு, மார்ச் 17

பதுளை மாவட்டம் பசறையில் அரசு படையினரும் பொலீசாரும் தேடுதல் வேட்டை ஒன்றை நடத்தினர்.

தமிழ்த் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் தேயிலைத் தோட்டங்களில் ஊடுருவல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்ற தகவலைத் தொடர்ந்தே இத்தேடுதல் நடத்தப்பட்டது. (ஓ எ)

## மாணவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

கடலில் குளிக்கச் சென்று காணாமற் போன பல்கலைக்கழக மாணவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

வியாழக்கிழமைமாலை நண்பர்களுடன் கடலில்குளிக்கச் சென்ற பல்கலைக்கழக மாணவன் ரஞ்சித் வில்வரத்தினம் (வயது 19) காணாமற் போனது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் ஏற்கனவே வெளியாகி இருந்தது.

ஆழக்கடலில் பாறை ஒன்றில் சிக்கிக் கிடந்த இவரது சடலத்தை நேற்று நண்பகலில் சுழியோடிகள் மீட்டனர். (அ-9)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை 18 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இப் பொதுக்கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. ஆ. சி. நடராசா தலைமையில் நடைபெறும். (இ-3)

# இலங்கையர் உட்பட 37 பேர் இத்தாலியில்உண்ணாவிரதம்

ரோம், மார்ச் 17

இலங்கையர் உட்பட 37 ஆசிய நாட்டவர் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இத்தாலி நகரான பாரியில் உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

அரசியல் தஞ்சம் அளிக்க இத்தாலி மறுத்ததைத் தொடர்ந்தே இந்த உண்ணாவிரதத்தை அவர்கள் ஆரம்பித்தனர் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 54பேர் (48 ஆண்கள், 6 பெண்கள்) சட்ட விரோதமாக கப்பல்மூலம் கிறீஸில் இருந்து இத்தாலியின் துறைமுக நகரான பாரி போய்ச் சேர்ந்தனர்.

இவர்களில் 17பேரைக் கிரீஸுக்கு மீண்டும் திருப்பிஅனுப்ப இத்தாலி அரசு கடந்த புதன்கிழமை தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து எஞ்சிய 37பேரும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

இத்தாலியில் தொழில் பார்க்க பெர்மிட் பெற்றுத் தரப்படும் என்ற உத்தரவாதத்தின்மீதே தாங்கள் கப்பல் மூலம் கிரீஸில் இருந்து இத்தாலிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும், இதற்காகவ்வொருவரும் 2 ஆயிரம் டொலர் பணம் கொடுத்ததாகவும் 54 ஆசிய நாட்டவர்களும் தெரிவித்தனர். (ஓ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-03-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஒரிஸ்ஸா தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்புவழங்க'பரா'துருப்பு

## மாநில அரசு கேட்கிறது

புவனேஸ்வர், மார்ச் 17

ஒரிஸ்ஸா மாநிலத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க பரா இராணுவத் துருப்புக்களை அனுப்பி வைக்கும்படி மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது.

தமிழ் அகதிகள் மீது தாக்குதல் நடத்தப் போவதாக ஒரிஸ்ஸா, கோரபுட் மாவட்டத்தில் வாழும் பழங்குடியினரும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் விடுத்த பயமுறுத்தல்களைத் தொடர்ந்து மாநில அரசு இந்த அவசரக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

இதனிடையில், தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களைச் சுற்றி சுமார் 4ஆயிரத்துக்கு மேற்பட்ட மாநிலப் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சர் பிஜு பட்நாயக் கருத்து வெளியிடுகையில்,

'அகதிகளை வெளியேற்றும்படி பெரிய நிர்ப்பந்தங்கள் தரப்படவில்லை. ஏன் அவர்களை அகதிகள் என்று அழைக்க வேண்டும்? தமிழ் விருந்தினர்கள் என்று அவர்களை அழைப்பது நல்லதல்லவா' — என்று சொன்னார்.

அகதிகளுக்கு இடம் கொடுத்ததை ஒரிஸ்ஸாவில் உள்ள இந்திரா காங்கிரஸ் உள்ளூர்த் தலைவர்களும்கூட எதிர்க்கின்றனர். உள்ளூர் காங்கிரஸ் தலைவரான ரகுநாத் பட்நாய்க் பயமுறுத்தல் ஒன்றை விடுத்திருக்கின்றார்.

'தேவையற்ற வெளிநாட்டவரை பலாத்காரமாக வெளியேற்றுவோம்' — இதுவே அந்தப் பயமுறுத்தலாகும். (ஓ-எ)

## பி. பி. சி. செய்தியாளர் பொலீஸாரால் விசாரணை!

### எனினும் பின்னர் மன்னிபபுக் கோரப்பட்டது

கொழும்பு, மார்ச் 17

பி. பி. ஸி. சிங்கள ஒலிபரப்பில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா பற்றி வெளியான செய்தி ஒன்று தொடர்பாக கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் நட்டால் இரகசியப் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டார்.

இரகசியப்பொலீஸ் திணைக்களத்தின் நான்காவது மாடிக்கு அழைக்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள்வரையில் திரு. கிறிஸ் நட்டால் விசாரிக்கப்பட்டார்.

பின்னர் திரு. நட்டால் தங்கியிருந்த ஐந்து ஸ்டார் ஹோட்டல் அறையையும் இரகசியப் பொலீஸார் சோதனை செய்து சில தஸ்தாவேஜுகளையும் எடுத்தனர்.

திரு. நட்டால் பி. பி. சி. சிங்கள சேவை 'சந்தேசய'வுக்கு அனுப்பிய செய்தியின் ஆங்கில மூலத்தை அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்ன, ரணில் விக்கிரமசிங்கா, ஏ. ஜே. ரணசிங்கா ஆகியோர் நேற்று வாசித்துப்பார்த்தனர்.

மூலப்பிரதியில் ஆட்சேபகரமான விஷயங்கள் எவையும் இருக்கவில்லை என்று மூன்று அமைச்சர்களும் தெரிவித்தனர்.

ஜனாதிபதியை அவதூறு செய்யும் விதத்தில் இச்செய்தி இருந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்தே திரு. நட்டால் விசாரணை செய்யப்பட்டார்

"திரு. கிறிஸ் நட்டால் விசாரணை செய்யப்பட்ட சம்பவம் முதல்தடவையானதாகவும், கடைசித்தடவையானதுமாகவும் இருக்கவேண்டும்" என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா சொன்னார்.

இச்சம்பவம் குறித்து நிபந்தனையற்ற விதத்தில் திரு. கிறிஸ் நட்டாலிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோருவதாகவும் அமைச்சர் விக்கிரமசிங்கா தெரிவித்தார். (ஓ-எ)

## எரிந்த நிலையில் சடலங்கள்

கொழும்பு, மார்ச் 17

அடையாளந்தெரியாத இரண்டு இளைஞர்களின் சடலங்கள் அரைகுறையாக எரிந்த நிலையில் பூஸா அருகில் கடந்த வியாழன் காலை காணப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர் (உ—எ)

# வேலை நிறுத்தம் செய்தோருக்கு பணிக்கொடையும், ஓய்வூதியமும்

## தமிழ்புத்தாண்டுக்கு முன் கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 17

1980 ஜூலை வேலை நிறுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு பணிக்கொடைப்பணமும், ஓய்வூதியமும் சிங்கள–தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி எம். பி. நிமால் சிறிபால டீ சில்வாவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் பொது நிர்வாக, உள் துறை மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் யு. பி. விஜேக்கூன் முன்கண்ட தகவலை வெளியிட்டார்'

பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் வழங்குவது சம்பந்தமான கருமங்களில் 90 சத வீதமானவை முடிவடைந்து விட்டனஎன்றும்அமைச்சர் சொன்னார். (ஓ-எ)

## பரீட்சை கட்டணங்கள் உயரும்: மீளாய்வுக்கு ரூ. 100

கொழும்பு, மார்ச் 17

ஜீ. சீ. ஈ. உயர்தர பரீட்சைக் கட்டணம், இப்பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கான கட்டணம் ஆகியவற்றை அதிகரிக்க பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கான அனுமதியை கல்வி அமைச்சிடம் பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

ஜீ. சீ. ஈ. பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கான கட்டணம் தற்போது 50ரூபாவாக உள்ளது.

இதனை நூறுரூபாவாகஅதிகரிக்கபரீட்சைத்திணைக்களம் முடிவு செய்துள்ளது.

ஜீ. சீ. ஈ. உயர்தரப்பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணம் எவ்வளவு அதிகரிக்கப்படும் என்பது வெளியிடப்படவில்லை.

அதிகரித்துவரும் போக்குவரத்துச் செலவு, பரீட்சைக்கான கடதாசிச் செலவு, மற்றும் வினாத்தாள்கள் திருத்துவதற்கான கட்டணம் அதிகரிப்பு – ஆகியனவே பரீட்சைக் கட்டணங்களை அதிகரிக்கக் காரணம் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

## நினைவுத் தூபி இன்று திறப்பு

குருநகர், மார்ச் 17

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக 1987இல் நடைபெற்ற சமரில் நாவற்குழியில் வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் போராளி 2ஆவது லெப்டினன்ட்விஜயானந்தன் (ஜீவா) கேதீஸ்பெரிய தம்பி நினைவாக இன்று நினைவுத்தூபி ஒன்று திறந்து வைக்கப்படும்.

யாழ். பிரதானவீதி 6ஆம் குறுக்குவீதிச் சந்திக்குச் சமீபமாக போராளி கேதீஸின் தந்தை பெரியதம்பி நினைவுத் தூபியைத் திறந்து வைப்பார். (ஓ-51)

## செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில்

# சிற்ப, ஓவியக் கண்காட்சி; இந்துவில் இன்றும் நாளையும்!

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் சிற்ப, ஓவியக்கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. இக்கண்காட்சி யாழ். இந்துக்கல்லூரியில் இன்றும், நாளையும் [சனி, ஞாயிறு] இடம்பெறும்,

கண்காட்சியை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்கள் பார்வையிடலாம்.

யாழ். செஞ்சிலு[illegible] சங்கம் இக்கண்காட்சி நடத்தப் படுவதன் நோக்[illegible] குறிக்கோள்களையும் விளக்கியுள்ளது. அவற்றில் சில வருமாறு:–

★ எமது மக்களின் பாரம்பரிய கலைகள் பேணப்பட்டு ஊக்குவிக்கப்படவேண்டும்.

★ கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் உரிய அந்தஸ்து வழங்கப்படவேண்டும்.

★ மாணவ சமுதாயம் தனதுபொழுதைப் பயனுள்ள [illegible] வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. [illegible]

## கரம்பனில் நினைவுப் பேருரை

ஊர்காவற்றுறை, மார்ச் 17

கரம்பன் குருமடம் ஸ்தாபகர் அந்தோனிப் பிள்ளை நினைவுப் பேருரை நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு குருமடத்தில் இடம் பெறும்.

வருடாந்தம் மார்ச் 18 ஆம் திகதி நடைபெறும் நினைவுப் பேருரையை இம்முறை கொழும்புத்துறை மருத்துவக் கல்லூரி பேராசிரியர் டொமினிக் அன்ரன்ஜோசப் அடிகளார் நிகழ்த்துகிறார்.

"சுய அனுபூதி உணர்வும் அனைத்து ஆன்ம நேய ஒருமைப்பாடும்" என்பது நினைவுப் பேருரையின் தொனிப் பொருளாக இருக்கும். [அ]

# மரண அறிவித்தல்கள்

## செல்வி பத்மநாதன் சசிகலா

பெரியபளை, பளையைச் சேர்ந்த செல்வி பத்மநாதன் சசிகலா அவர்கள் 15-03-1990 அன்று அதிகாலை அகால மரணம் அடைந்துள்ளார்.

இறுதிச் சடங்குகள் 18-03-1990 ஞாயிறு காலை 9-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
திரு. திருமதி இ. பத்மநாதன்
ப. சயந்தகுமார்
சகோதரங்கள்

பெரியபளை,
பளை.
[2909]

## Wilfred Ranjit

திரு. ம. வில்பிறேற் (இளைப்பாறிய வட பிராந்திய ஊழியரும், தற்போதைய கொமேசல் அச்சக முகாமையாளர்) திருமதி ஹரட்ஸ் வில்பிறேற் அவர்களின் அன்பு மகன் ரஞ்சிற் (மாணவன், யாழ் வளாகம், பழைய மாணவன், பரியோவான் கல்லூரி) அவர்கள் 15-03-1990 அன்று அகாலமரணம் அடைந்துவிட்டார்.

இவர் செல்வின் (மாணவன் யாழ். வளாகம்) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17-03-1990 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் நல்லடக்கத்திற்காக கொஞ் சேஞ்சி மாதா (St. Mary's Burriyal Grounds) சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்,

தகவல்:
ம. வில்பிறேற்

23, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.
(12105)

## திரு. K. றிச்சேட் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அதிபர், அமெரிக்கன் மிஷன் பாடசாலை, காங்கேசன்துறை.)

கீச்சியன்காடு வல்வெட்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. K. றிச்சேட் சுப்பிரமணியம் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 61, பாரதி வீதி, சுண்டிக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (17/03/90) ஆராதனையின் பின் 2-00 மணியளவில் நல்லடக்கத்துக்காக உடுப்பிட்டி C. S. I. சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பகவதி சுப்பிரமணியம்

61, பாரதி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(12106)

## திருமதி வீரலட்சுமி செல்வநாயகம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி வீரலட்சுமி செல்வநாயகம் சிவபதம் எய்தினார்.

இவர் பருத்தித்துறையைச் சேர்ந்த காலம்சென்ற செல்வநாயகம் செட்டியாரின் அன்பு மனைவியும் காலம்சென்ற கணேசபிள்ளையின் (ஓவசியர்) அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம், சிவசுப்பிரமணியம் (A. G. M. National live stock Development Board, Sirigapathe, Farm Badalgama), இராசேந்திரன் (Retd staff, State Bank of India, Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவரூபன் (பரியோவான் கல்லூரி) அன்பரசி, சிவகௌரி (இந்துமகளிர் கல்லூரி), நந்திவளவன், தமிழரசி (கொக்குவில் இந்துக் கல்லூரி). ஜெயகணேஷ் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் ஆசைப் பேத்தியுமாவர்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 17-03-1990 சனிக்கிழமை காலை கோவில் வீதி கொக்குவில் கிழக்கு 'வீரலட்சுமி' இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு 10மணியளவில் எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
செ. சிவசுப்பிரமணியம்
செ. இராசேந்திரன்

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.
[2906]

## திருமதி எமிலி அதிசயமலர் சோமநாதர்

திருமதி எமிலி அதிசயமலர் சோமநாதர் காலமானார். இவர் N. T. N. சோமநாதரின் மனைவியும், உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட J. V தம்பிமுத்து தம்பதிகளின் மகளும், உரும்பிராய் முன்னாள் விதானையார் திருச்செல்வத்தின் சகோதரியும், சந்திரன், ஆனந்தன், சாந்தன், வினோதன், வனஜா ஜெயந்தா ஆகியோரின் தாயாரும், பிறேம றஞ்சினி மாலா, அற்புதநிதி, றோய் மேதர் ஆகியோரின் மாமியாரும் ஜெயசுதன், சுதர்சன், லொக்ஸிலி, றொபினா, சிந்துஜா, அனிரா, ஜக்சன் டேவிற்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் சேமக்காலை ஆராதனை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு பெரிய மதவடி மானிப்பாய் வீதி, உடுவில் இல்லத்தில் நடைபெறும்.

குடும்பத்தினர்

மானிப்பாய் வீதி,
உடுவில்.
[2905]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**SKYLINES**

For Quality Photostat Copying,
Electronic Typewriting
and
Roneo works
281 B, CLOCK TOWER ROAD,
JAFFNA.

சஞ்சீவி சஞ்சிகை

17 - 03 - 1990 சனிக்கிழமை

தரமான
★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்
வேலைகளுக்கு
**ஸ்கைலைன்ஸ்**
281, பி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## கருத்துக் கலசம் — சுபூரா

### வேண்டும் பல மண்டபம்

எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது ஒன்றுகூடல், கலந்துரையாடல், கருத்தரங்கு, வரவேற்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு யாழ்ப்பாண நகரத்தில் மண்டபம் ஒன்று இல்லாத குறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்தக் குறையை யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வசதியான ஒன்றுகூடல் மண்டபங்களுக்கு முன்னர் பற்றாக்குறை இருந்ததில்லை. யாழ். நூல்நிலைய மண்டபம், வீரசிங்கம் மண்டபம், கல்லூரி மண்டபங்கள் என்று வசதியான பலவும் இருந்தன. கலை நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய கலை அரங்குகள் கூட அமைக்கப்பட்டிருந்தன.

வன்செயல்கள், இராணுவ நடவடிக்கைகள் என்ற போர் நிலைமையின் கொடுமையால், விசாலமான, வசதியான மண்டபங்கள் எல்லாம் தரைமட்டமாகி, பயன்படுத்தமுடியாத நிலையில் வீழ்ந்து கிடக்கும் கண்ராவியைக் காண்கிறோம்.

எழுத்தாளர்கள் கலைஞர்களுக்கு மட்டுமன்றி மற்றும் பொது நிகழ்ச்சிகள், மாநாடுகளை நடத்தக்கூடிய வசதியான கேட்போர் கூடங்களோ, மண்டபங்களோ இல்லாமல் பலசாராரும் கஷ்டப்படுவதையும் காண முடிகிறது.

யாழ்ப்பாணம் போன்ற ஒரு பிரதான நகரில், மண்டபம் இல்லாத குறை பல துறைகளின் வளர்ச்சிக்கும் குந்தகமாக அமையும். பல முன்னேற்ற முயற்சிகளுக்குத் தடைக்கல்லாக குறுக்கே நிற்கும். போக்குவரத்து, தொலைத்தொடர்பு ஆகிய சேவைகள் — வசதிகளைப் - போலவே, சமூக வளர்ச்சிக்கு மண்டப வசதியும் இன்றியமையாதது; அவசியமானது.

ஆகையால் மண்டப வசதிகளை உண்டாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும். இதில் யாழ்ப்பாண மாநகரசபை போன்ற மக்கள் நிறுவனங்களுக்கு பெரும் பொறுப்பும் கடமையும் உண்டு. கடந்த காலங்களில் மாநகரசபை இந்தக் கடமையை — சேவையைச் சரிவரச் செய்தது. மீண்டும் அந்தப் பொறுப்பை ஏற்றுச் செயலாக்க வேண்டும். வெறும் அதிகாரியாக மட்டுமன்றி, மக்களின் கூட்டு மொத்தப் பிரதிநிதியாகவும் விளங்கும் மாநகர ஆணையாளர் இதில் உடனடிக் கவனம் செலுத்தக் கோருகிறோம்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தமிழ் மாவட்டத் தலைநகரம் ஒவ்வொன்றிலும் மண்டப வசதிகளை ஏற்படுத்த மாகாணசபை போன்ற அமைப்புகள், நடவடிக்கை எடுப்பது அவசியம். இதில் பணவசதி படைத்த தனியார்துறையினருக்கும் பங்கு அளிக்கலாம்.

# தமிழில் இராமாயண நூல்கள் கம்பனுக்கு முன் இருந்தனவா?

காசில் கொற்றத்து இராமன் கதையை வான்மீகியைப் பின்பற்றி எழுதியிருப்பதாகக் கம்பன் கூறியிருப்பினும், சிற்சில இடங்களில் கம்பன் தமிழ் மரபைப் போற்றி, வான்மீகியின் வழியினின்றும் மாறுபடுகின்றான்.

வான்மீகியின் கதைப் போக்கைத் தன் நோக்கால் ஆராய்ந்து, புதிய உத்திகளைக் கம்பன் படைத்துள்ளான்.

கம்பனுக்கு முன்பே தமிழில் இராமாயண நூல்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றையும் பின்பற்றிக் கம்பன் இராமாயணம் எழுதியிருக்க வேண்டும்.

கம்பனுக்கு முன்பு தமிழில் வழங்கிய இராமாயண நூல்களைக் காண்போம்:-

### சீராம கதை

பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர் 'பாரதம் சீராம கதை' என்று குறிப்பிடுகின்றார்.

இராமாயணத்தை 'சீராம கதை' என்றே பண்டு வழங்கினர் என்கிறார் பெரும்புலவர் மு. இராகவய்யங்கார்.

### வெண்பாவில் இராமாயணம்

கம்பன விருத்தப்பாவில் இராமாயணம் எழுதியுள்ளான். விருத்தம் பாடுவதில் கம்பனுக்கு நிகர் கம்பன் தான்.

'விருத்தம் என்னும் வெண்பாவிற்கு உயர் கம்பன்' என்பது ஆன்றோர் மொழி.

'வெண்பாவிலும் இராமாயணம் தமிழில் இருந்தது' என்பதனை 'யாப்பருங்கல விருத்தி' என்னும் செய்யுள் இலக்கண நூல் மூலம் அறிகிறோம்.

யாப்பருங்கலத்துக்கு விருத்தியுரை எழுதியவர் பலவடியான் வந்த பஃறொடை இராமாயணமும் என்று எழுதியுள்ளார்.

எனவே பஃறொடை வெண்பாவில் எழுதப்பட்ட இராமாயணம் தமிழில் இருந்து, பின்னர் கால வெள்ளத்தில் அழிந்திருக்க வேண்டும்.

### வீர சோழிய உரை

வீர சோழியம் என்ற இலக்கண நூலின் உரை ஆசிரியர், இராமாயணக் கதை கூறும் மேற்கோள் பாடல்களைத் தந்துள்ளார்.

வீர சோழிய உரைகாரர் காட்டும் இராமாயண வெண்பாக்களில் ஒன்று:

மற்றிவனை மாலென்
றறிந்தால் அவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென்
பேதையர்காள்! மற்றிவன்தன்
கண்டான் கடைசிவத்தற்
-குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி

சில வெண்பாக்களையே வீரசோழிய உரை கூறினாலும், வெண்பா யாப்பில் இராமாயணம் பண்டு விளங்கியது என்பதற்கு ஆதாரமாகிறது.

### ஆசிரிய மாலையில் . . .

'ஆசிரிய மாலை' என்ற தொகை நூல் புறத்திரட்டில் சேர்க்கப் பெற்றுள்ளது. அந்த 'ஆசிரிய மாலை' இராமன் வரலாறு பற்றிய பாடல்களை உடையது.

ஆசிரிய மாலை என்ற நூலை ஆராய்ந்தால், கம்பனுக்கு முன்பும் தமிழில் இராயண நூல் உண்டு என்பதற்கு ஆதாரம் ஆகிறது.

### ஆசிரியப்பாவில் . . .

பஃறொடை வெண்பா, விருத்தப்பா ஆகிய செய்யுள் இனத்தில் இராமாயணம் விளங்குவது போலவே ஆசிரியப்பாவிலும் தமிழில் இராமாயண நூல் விளங்கியது.

ஸ்ரீ புராணம் என்பது ஜைன நூல். மணிப் பிரவாள நடையில் அமைந்த அந்த நூலில் ஆசிரியப்பாவில் இராமாயண நிகழ்ச்சிகள் எழுதப் பெற்றுள்ளன.

சீதையின் சோகத்தைச் சித்தரிக்கும் ஸ்ரீ புராண ஆசிரியப் பாவில் சில வரிகள்:-

''மாற்றிவன் செய்த
மாயா மானின்
நோற்றி லாதே
நோக்கிய நோக்கின்
அருவினை யேனை
அருளிய மனத்தால்
மருவிய மாய
உருவுதற்கு எழுந்த
மான்மறி தொடர்ந்து
செல் வாள் அரிபோலக்
கான்நெறி விடுத்துக்
கடுவனம் புகுந்து
மாயாப் புணர்ப்பின்
மன்னனை நினைந்து
ஆயமும் தாயமும்
தோழியும் இன்றியோர்
நொதுமல் ஆனவன்
விதிவழி ஒழுகி
இடனிடை யிட்ட
சேய்மைத் தன்றியும்
கடலிடை யிட்ட
காப்பிற் றாகிய
இலங்கை மூதூர்
இடு சிறைப்பட்டு...''

### பல திரட்டு

தமிழக அரசின் கைஎழுத்து புத்தகச்சாலையில் 'பல திரட்டு' என்ற சுவடியில் 'இராமாயண வெண்பாக்கள்' உள்ளதைப் பெரும்புலவர் திரு. மு. இராகவ அய்யங்கார் வெளிப்படுத்தியுள்ளார்.

வசிட்டனும் கோசிகனும்
மன்னவனும் கூடி
விசித்திரமா மங்கலச்சொல்
விண்டு—சசிக்குநிகர்
மாமுகத்துச் சீதைக்கும்
வாழும் உருமிளைக்கும்
மாமுகூர்த்தம் இட்டார்
மகிழ்ந்து

இவ் வெண்பாவில் சீதையின் திருமண நிகழ்ச்சியோடு ஊர்மிளை திருமண நிகழ்ச்சியும் சுட்டப்பட்டுள்ளது.

### நச்சினார்க்கினியர்

தென்மொழியும் வடமொழியும் கற்றுத்துறை போகிய சொல்லேர் உழவர் நச்சினார்க்கினியர்.

''உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்'' என்று போற்றப்பெற்றவர். தொல்காப்பியப் பொருளதிகார உரையில்,

''ஆள்வினை முடித்த
அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய
இராமன் அவனொடு
மிதிலை மூதூர்
எய்திய ஞான்றே
மதியுடன் பட்ட
மாக்கண் சீதை
கடுவிசை வில்
நாண் இடிஒலி கேளா
கெட்ட பாம்பின்
வாட்டம் எய்தித்
துயில் எழுந்து
மயங்கினள் அதான்று''

என்ற இராமாயண வரிகளை நச்சினார்க்கினிர எடுத்துக் காட்டியுள்ளார்.

வான்மீகியின் இராமனும் சீதையும் திருமணத்திற்கு முன் சந்திக்கவில்லை. கம்பராமனும் சீதையும் திருமணத்திற்கு முன் நோக்குகின்றனர். இது தமிழ் மரபு. இதனையே காட்டுகிறது மேற்காணும் பாடல்!

### அகநானூற்றில்...

''தனுக்கோடி கடற்கரையில் விளங்கிய ஓர் ஆலமரத்து நிழலில் தங்கி, வானர வீரர்களுடன் ஸ்ரீராமன் ஆலோசனை செய்தபோது, தொல்லை தந்த பறவைகளின் ஓசைகளைத் தன் திருக்கையால் அமர்த்தி அடக்கினான்'' என்ற நிகழ்ச்சியை அகநானூறு,

''வெல்போர் இராமன்
அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல''—

என்று தெரிவிக்கிறது.

ஆலமரத்து நிழலில் இராமன் ஆலோசனை செய்த நிகழ்ச்சி இராமாயண நூல்களில் கூறப்படவில்லை.

என்றாலும் அகநானூற்றின் மூலம், தமிழில் அகநானூற்றிற்கு முன்பே ஓர் இராமாயண நூல் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது இச் செய்தி.

**இலக்கியம்**

**- புலவர் முத்து வெங்கடேசன் -**

### புறநானூற்றில்...

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றபோது தன் அணிகலன்களை இடை வழியில் போட, அவற்றை வானர வீரர்கள் கண்டெடுத்து அணிந்த நிகழ்ச்சியைப் புறநானூற்றுப் பாடலொன்று சுட்டுகின்றது.

கடுந்தேர் இராமன்
உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன்
வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி
கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை
இழைப்பொலிந் தாங்கு

என்பன புறநானூற்று வரிகள். இந்நிகழ்ச்சியின் தொடர்பைக் கம்பன் காவியத்திலு'ம் காண்போம். வான்மீகியும் சுட்டியுள்ளார்.

### சிலப்பதிகாரத்தில்...

இளங்கோவடிகள் இராமன் வரலாற்று நிகழ்ச்சியைக் கோவலன் கண்ணகி வரலாற்றுக்கு உவமையாகக் காட்டியுள்ளார்.

பலருக்கும் தெரிந்த செய்தி தான் உவமையாக வர முடியும்.

சிலப்பதிகார காலத்துக்கு (கி. பி. 2 - ஆம் நூற்றாண்டு) முன்பே தமிழில் இராமாயணம் உண்டு என்பதை—

பெருமகன் ஏவ
வல்லது யாங்கணும்
அரசே தஞ்ச மென்று
அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த
அயோத்தி போலப்
பெரும் பெயர் மூதூர்
பெரும்பே துற்றதும் —

என்ற சிலம்பு வரிகளும்

தாதை ஏவலின்
மாதுடன் போகிக்
காதலி நீங்கக்
கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற்
பயந்தோன் என்பது
நீ யறிந் திலையோ
நெடுமொழி யன்றோ —

என்ற சிலம்பு வரிகளும் மெய்ப்பிக்கும்.

### மணிமேகலை

வானரங்கள் சேது கட்டிய செய்தியை கி. பி. 2 - ஆம் நூற்றாண்டு நூலான மணிமேகலை.

நெடியோன் மயங்கி
நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர்
அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந் தெறிந்த
நெடுமலை யெல்லாம்
அணங்குடை அளக்கர்
வயிறுபுக் காங்கு —

என்று அழகாகக் குறிப்பிடுகின்றது.

### ஆழ்வார்களும் இராமாயணமும்

ஆழ்வார்கள் இராமனைப் பரம்பொருளாகிய திருமால் என்றே கருதி பக்தி பூர்வமாக அனுபவித்துள்ளார்கள்.

ஏழை ஏதலன் கீழ்மகன்
என்னாது
இரங்கி மற்றவற்கு இன்
னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கி
யுன் தோழி
'உம்பி எம்பி' ஒன்று ஒழிந்
தில உகந்து,
தோழன் நீயெனக்கு —

என்ற திருமங்கை ஆழ்வார் பாசுரம்,

ஆழநீர்க் கங்கை
அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு
எம்பிநின் தம்பி நீ
தோழன் மங்கை
கொழுந்தி... —

என்ற கம்பன் வரிகளோடு ஒப்பிடத்தக்கது.

'ஆழ்வார்களுக்குக் கம்பன் கடன்பட்டுள்ளான்' என்பார் மறைந்த பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன்.

இராமன் கதைச் சுருக்கத்தைக் குலசேகர ஆழ்வார் பதினோருபாடல்களில் சுவை மணக்கத் தந்துள்ளார்.

'அங்கண் நெடுமதில்' என்று தொடக்கம் பெற்ற அப் பாடல்களை இராமாயணம் முழுவதும் படிக்க இயலாதவர்கள் படித்து, இராமாயணம் படித்த பலனைப் பெறலாம்.

கம்பராமாயணத்துக்கு முதன் முதல் திறனாய்வு எழுதிய மகரிஷி வ. வெ. சு. ஐயர் குறிப்பிடுவது போல், கம்பராமாயணம் உலகப் பெரும் காவியங்களுக்குள்ளே முதன்மை பெற்றது.

அக் காவியம் முதன்மை பெறக் கம்பன் தனக்கு முன் வழங்கிய தமிழ் இராமாயணங்களையும் ஆழப் படித்து உணர்ந்து தெளிந்துள்ளான்; உணர்ந்து தெளிந்து சுவை மணக்கச் சொல்லியுள்ளான். ★

# விண்வெளியில் இருந்து செயற்கை நிலவொளி — மண்ணில் நாளெல்லாம் பௌர்ணமி!

காற்று, கடலலை, நிலக்கரி, பெட்ரோல், சூரியன், அணுசக்தி என்று எத்தனையோ ஆற்றல் மூலங்களை நம்பித்தான் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

விண்வெளியிலிருந்து சூரிய ஆற்றலை மின்சாரமாக்கிப் பூமிக்கு அனுப்பிடக் கொஞ்சக் காலத்திற்கு முன்னால் எஸ். பி. எஸ். (S. P. S.) எனும் சூரியத்திறன் செயற்கைக்கோளினை (Solar Power Satellite) வடிவமைக்கும் நூதனத் திட்டம் ஒன்றை அமெரிக்கா அறிவித்தது.

சோவியத் ரஷியாவும் பதினைந்தாயிரம் டாலர்கள் செலவில், புவிநிலை வட்டப் பாதையில் (Geostationary) 'விண்வெளி சூரிய மின்நிலையங்கள்' (Space Solar Electric Stations) எனும் கனத்த செயற்கைக் கோள்களை விண்ணிற் செலுத்தும் பூர்வாங்க முயற்சியில் ஈடுபட்டன.

### மினி சந்திரன்கள்

இதற்கிடையில் 1980 வாக்கில் சோவியத் ரஷ்யாவில் சற்று வித்தியாசமான சிந்தனை இழையோடியது.

விண்வெளியிலிருந்து செயற்கைக்கோள்கள் வழி சூரிய மின்னாற்றலைச் சேகரித்து அனுப்புவது ஒருபுறமிருக்க – அந்தச் சூரியஒளியினைக் கூட அப்படியே பிரதிபலித்து பூமிக்குத் திசை திருப்பிவிடலாமே!

இராத்திரிப் பொழுதுகளில் இச் செயற்கைக்கோள்கள் 'மினி சந்திரன்கள்!'

நில நடுக்கோட்டின் மேல் 36,000 கிலோ மீட்டர்கள் உயரத்தில் செயற்கைக்கோள்கள் வடிவில் அவ்வாறு விண்ணில் தீபம் ஏற்றிவிட்டால், தெருவிளக்குகளை அணைத்து விடலாம்.

நித்தமும் பௌர்ணமி! அப்புறமென்ன, நகர்கள், வீதிகள், போக்குவரத்து வாகன நிலையங்கள் எங்கும் எப்பொழுதும் – அனாவசியமாக இரவிலும் பகல்தான்.

மின்சாரத்தை வீணடிக்க வேண்டியதில்லை. ஆற்றல் சிக்கனம்! மின்சார லாபம்.

### அர்த்த இராத்திரியில்

இரவில் சூரிய வெளிச்சம் வழங்கும் இந்த அபூர்வத் திட்டம் குறித்து 'சோவியத் வீக்லி' (Soviet Weekly) எனும் வார ஏட்டில் 'ஆகாயத்தில் தெரு விளக்குகள்' (Street lamps in the Sky) என்றும், 'அர்த்தராத்திரியில் சூரியப் பிரகாசம்' (Sunshine at midnight) என்றும் அவ்வப்போது (ஆகஸ்டு 4, 1984, மே 12, 1984 இதழ்கள்) கட்டுரைகள் வெளியாயின.

இப் புதிய 'செயற்கை நிலா'த் திட்டம் மே 1984-ல் சூடு பிடித்தது. மாஸ்கோ காற்றுவெளிப் பயணப்பயிற்றகத்தில் (Moscow Aviation Institute) பரீட்சார்த்த முயற்சி ஆரம்பமானது.

சுமார் 200 கிலோ கிராம் எடையுள்ள செயற்கைக் கோள் உதவியினால் 110 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பிரதிபலிப்பானை விண்ணில் குடைவிரிக்கச் செய்வதன்மூலம் ஏறத்தாழ 9 சதுர கிலோ மீட்டர் நிலப் பரப்பை வெட்டவெளிச்சமாக்கலாம்.

எனினும் பகல்பொழுது மாதிரி அவ்வளவு பிரகாசம் இருக்காதாம். சராசரி முழு நிலா ஒளியில் பாதியளவேனும் வெளிச்சம் கிடைக்கும்.

### பிரதிபலிப்புக் குடைகள்

தொடக்கத்தில் அது போதும். படிப்படியாக செயற்கைக் கோளின் பிரதிபலிப்புக் குடைகளைப் பெரிதாக்கி ஒரு பட்டினத்தையே இரவில் ஜகஜோதியாக்கிவிட முடியும்.

ஏழு பௌர்ணமி நிலவுகளுக்கொப்பான பிரகாசத்தை விண்ணிலிருந்து பாய்ச்ச முடியும்.

ஏற்கனவே, நவம்பர் 1983 ப்ராவ்தா (Pravda) எனும் சோவியத் இதழில் - சோவியத் நிபுணர்கள் ஆர்க்டிக் வட்டாரத்தில் விண்ணிலிருந்து வெளிச்சம்போடும் பணி தொடங்கிவிட்டதாகச் செய்தி வெளியிட்டிருந்தது.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே வேர் விட்ட இச் சூரிய ஒளித் திட்டம் இன்னும் பச்சை பிடிக்க வழியில்லை!

### சோவியத்தின் சூரிய மின்சாரத்திட்டம் 21 ஆம் நூற்றாண்டில் நிறைவேறும் வாய்ப்பு

ஆயினும், ''அத் திட்டம் அறவே செத்துவிடவில்லை'' என்றும், மே 15, 1987 இல் முதன்முறையாகப் பறக்விடப்பட்ட 'எனர்ஜியா' (Energia) எனும் உலகின் மிகப் பிரமாண்டமான பளு தூக்கி ஏவூர்தியில் போதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதும், ''சூரிய ஒளித் திட்டம் மீண்டும் புறப்படும்'' என்றும், ஒருவேளை வரும் 21 ஆம் நூற்றாண்டில் இது ஒரு மகத்தான திட்டமாகப் பரிணமளிக்கும்' என்றும் சோவியத் தரப்பில் நம்பகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்' வாசனை

சஞ்சீவி சிறுகதை

பரமசிவத்தாரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை! வேதனையை அடக்கி அடக்கி வைத்ததில் அது ஆவேசமாகத் தொண்டையை வந்து அடக்கியது.

நேற்றுவரை அவரோடு ஒட்டி ஒட்டி வாழ்ந்து விட்ட பூரணம் இன்று! கண்களை மூடி... மௌனியாக வெறும் ஜடமாகக் கிடக்கும் காட்சி, 'மனைவி இறந்து விட்டாள்' என்று மூளைக்கு உணர்த்தியும் அவர் மனம் ஏற்க மறுத்தது.

கிட்டத்தட்ட முப்பந்தைந்து வருடங்கள்! இன்பத்திலும், இன்னலிலும் அவரோடு துணையாக நின்றவள் இன்று இல்லை! நினைக்க நினைக்கத் துயரம் பொங்கியது.

சால்வையைப் பந்தாக்கி வாயைப் பொத்தியவர், வேதனையை விழுங்க முடியாமல் சுவரோடு சாய்ந்தவாறு மெல்ல அமர்ந்து கொள்கிறார்.

கண்களில் நீர் அருவியாகச் சொரிந்து கொண்டிருந்தது.

பூரணத்தை அவர் கைப்பிடித்த நிகழ்ச்சி நேற்று நடந்தமாதிரி அவர் மனதில் தோன்றியது. பரமசிவத்தார் அந்தக் காலத்து மனிதர். தனக்கென்று சில கொள்கைப் பிடிப்புகளைக் கொண்டவர்; மண்ணையே தனது ஜீவனத்திற்காக நம்பியவர்; வெளியூரில் பெண் எடுக்க அவர் அன்று விரும்பாமைக்கும் இவையே காரணங்கள். கிராமத்து மண்வாசனையை ஏற்கக்கூடிய பண்பு நிறைந்த பெண்ணையே அவர் மனம் நாடியது.

நிறைந்த சொத்துப்பத்துகள், தோட்டவருமானங்கள், 'இல்லை' எனும் அளவிற்குப் பொலிந்து கிடந்தமையால், 'அவற்றையெல்லாம் கட்டிக்காக்கும் பக்குவம் நிறைந்தவள் கிடைத்தால் போதும். பொருள் பண்டம் கொண்டு வருபவள் எனக்குத் தேவையில்லை.' என்று அந்தக்காலத்திலே நண்பர்கள் மத்தியில் சூளுரைத்தவர் அவர்!

அவரது முற்போக்கான எண்ணத்திற்கேற்ப அவர் நினைத்த மாதிரியே பூரணம் அவருககு மனைவியாக வாய்த்தது அவர் அதிஷ்டம் தான். அவரது பிரயாசைக்கேற்ப அவரின் செம்மண் பூமி பொன்னாக விளைந்து செழித்தது. அவர் வாழ்க்கையும் எந்தக் குறையுமின்றி, தடையின்றித் தண்ணீரில் போகும் ஓடம் போல நகர்ந்து கொண்டிருந்தது.

'வாருங்கோ பரமசிவம் மண்ணை குருக்களய்யா வந்திட்டார்.'

அயல் வீட்டுக்காரரான கணநாதன் பரமசிவத்தாரை ஆதரவுடன் எழுப்பிக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு பந்தலுக்கு வருகிறார்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு குருக்களய்யா சொல்பவற்றைச் செய்வதற்காகப் பரமசிவத்தார் தன்னைத் தயார்படுத்திக்கொண்டார். சால்வைத் துண்டால் முகத்தை அழுந்தத் துடைத்தவர், ஐயரின் முன் அமர்ந்து கொள்கிறார்.

'வெளிநாட்டிலையிருந்து பிள்ளையள் ஒருத்தரும் வரயில்லையாமே''

'அதையேன் பேசுறியள். இரண்டு ஆஸ்பிள்ளையள் அவங்கள் போனதுக்கு இந்தப்பக்கம் திரும்பியும் பாக்கிறதில்லை இப் கூட வர நினைக்கேல்லைப் பாத்தியளே! பிள்ளையளைப் பெத்தும் ஒரு சுகமுமில்லை'-

யாரோ இருவரின் உரையாடல் பரமசிவத்தார் காதிலும் விழத்தான் செய்தது. தனது பிள்ளைகள் இப்படி மாறுவார்கள் என்பது அவர் எதிர்பார்த்ததுதான் என்றாலும், ஏமாற்றத்தின் வேதனையில் அவர் துடித்துப் போனதும் உண்மை! என்றாலும், இந்த 'ஏமாற்றம்' என்பது இப்பொழுது அவருக்குப் பழகிப்போன ஒன்றாகிவிட்டது.

இரண்டு ஆண்பிள்ளைகளையும் தனது இரு கண்மணிகளாகப் பாதுகாத்து வளர்த்தவர். தன்னைப் போல் மண்வெட்டி பிடித்து வெய்யிலில் வதங்காமல் பிள்ளைகள் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்பது அவரின் நியாயமான ஆசையாக இருந்தாலும், வளர்ந்த மண்ணை மறந்துவிடுமளவிற்குத் தன் பிள்ளைகள் இருப்பார்கள் என்று அவர் அன்று எதிர்பார்க்கவே இல்லை.

'அப்பா! இப்ப 'அகதி' என்று சொல்லினால் வலுசுகமாய் ஜேர்மனிக்குப் போகலாமாம். எனக்குத் தெரிஞ்ச எத்தினையோ பெடியள் அப்பிடிப் போட்டாங்கள் '

'எத்தினையோ பேருக்கு எத்தனையோ கரைச்சல்கள்... அவங்கள் போகட்டுமன்... அதுக்காக மற்றவையளும் பொய் சொல்லிக் கொண்டு'...

'அப்பா! நீங்கள் என்ன சொல்ல வாறியள் என்று எனக்கு விளங்குது. நெடுகக் குழந்தைப் பிள்ளையள் மாதிரி நீங்கள் சொல்லுறதுக்கெல்லாம் ஒத்துப் போக என்னாலை முடியாது. நான் எப்பிடியும் போறதெண்டு முடிவு செய்து போட்டன்.'

மூத்தவன் கிருஷ்ணா ஆணி அடித்தமாதிரிப் பேசி விட்டுப் போனதும் பரமசிவத்தார் நிலை குலைந்து போனார். அவன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் மனதில் ஆணி அடித்தமாதிரிப் பதிந்தன.

அவர் நெஞ்சம் வலித்தது. இது நாள் வரை அவர் வாழ்வில் 'ஏமாற்றம்' என்ற ஒன்று குறுக்கிட்டதேயில்லை. முதன் முறையாக ஏற்பட்ட



அந்த ஏமாற்றத்தைத் தாங்க மாட்டாமல் அரற்றினார். பூரணம் மட்டும் அவருக்கு ஆறுதலளிக்க இல்லாவிட்டால் அவருக்குப் பயித்தியமே பிடித்திருக்கும்.

கிருஷ்ணா சொன்னதைச் செய்து காட்டக்கூடியவன் ஜேர்மனிக்குப் பயணமாவதற்கான ஒழுங்குகளைச் செய்து முடித்தவன் அப்பாவின் முன் வந்து நின்றான்.

'தம்பி கிருஷ்ணா! கடைசியாக உன்னட்டை ஒன்றேயொன்று கேட்கிறன் அதுக்கு மாத்திரம் பதில் சொல்லு'

'என்ன? என்பதை வாயால் சொல்லாமல் நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தான்.

ஜேர்மனிக்குப் போய் உழைக்கிறதுக்கு உனக்கிப்ப என்ன அவசியம் வந்தது'

'அப்பா! இங்கை சொந்த மண்ணைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருந்தால் என்ன கிடைக்கப்போகுது சொல்லுங்கோ... ஒழுங்காப் படிக்க ஏலாது... படிச்சு முடிச்சால் நேர்வழியிலை ஒரு வேலை எடுக்க ஏலாது...' - நாட்டின் குழப்பமான சூழல் கிருஷ்ணாவை விரக்தியாகப் பேச வைத்தது.

'அதுக்காக......'

'சொந்த மண்ணிலை சுதந்திரமில்லாமல் வாழுறதை விட, ஏதோ ஒரு அந்நிய நாட்டிலை போய் நிம்மதியாய் இருக்கிறதுமேல்'

அப்பாவிற்கும் மகனுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் பூரணத்திற்குப் புரிந்தன. அடுப்படியிலிருந்தவாறே அவள் பதில் சொன்னாள்.

'நிலவுக்குப் பயந்து பரதேசம் போறதாலை யாருக்கு நட்டம். நடக்கிறது எங்கிருந்தாலும் நடந்துதான் தீரும்'

'பிரச்சினைகளுக்கும் கஷ்டங்களுக்கும் எப்பவும் நாங்கள் முகம் குடுக்க வேணும் கிருஷ்ணா! பயந்து ஓடினால் ...... அவைகள் எங்களை நாய் மாதிரித் துரத்திக் கொண்டே வரும்'

அப்பாவின் இந்த வார்த்தைகள் பேசுவதற்கு மட்டும் தான் லாயக்கு. இவையெல்லாம் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்பது கிருஷ்ணாவின் மனதிற்குள்ளாக எழுந்த முடிவு.

அதன்பின்..... கிருஷ்ணா ஜேர்மனிக்குப் போய் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் அவனிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தில் தனக்கு நிரந்தரமாக ஒரு நல்ல தொழில் கிடைத்திருப்பதாகவும், ஊரில் தன்னுடன் ஒன்றாகப் படித்த தான் விரும்பிய பெண்ணைத் தனக்காக அனுப்பி வைக்கும்படியும் எழுதியிருந்தான்.

கடிதத்தைப் படித்த பரமசிவத்தார் கலங்கிப்போனார். தேசம் விட்டுத் தேசம் போனால் நம் பண்பாடுகளையுமா பறக்க விட வேண்டும்.

கண்முன் நின்று கொண்டு அந்தப் பெண்ணைத் தனக்கு மணம் முடித்து வைக்கும்படி கேட்டிருந்தால்... அவர் ஒரு போதும் சம்மதித்திருக்கவே மாட்டார்.

எங்கோ தொலைதூரத்திலிருந்து கொண்டு பெற்றவர்களிடம் நேரில் கதைக்க முடியாதவற்றைக்கூட கூசாமல் எழுதித் தாம் நினைத்தவற்றையெல்லாம் சாதித்துவிடும் இந்தக் காலத்துப் பிள்ளைகளின் போக்கிற்கு அவர் பிள்ளை மட்டும் விதிவிலக்காகி விடவில்லை என்பது அவருக்குப் புரிந்தது.

'அவன்ரை ஆசைப்படியே செய்துவிடுங்கோ' பூரணம் கூட மகனுக்காகப் பரிந்து பேசினாள்.

வேறு வழியின்றி அவர் போக்கிற்குச் சற்றும் ஒத்துவராத அந்தப் பெண்ணின் வீட்டாரிடம் தானே நேரிற் சென்று, எல்லாவற்றையும் பேசி முடிவாக்கி, மருமகளாக ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கும் வரை அத்தனை ஏற்பாடுகளையும் அவரே கவனித்தார்.

பெற்றமனம் பித்து என்பார்களே அதனாலதானோ? ஆனால் ..... அவர் பிள்ளை பெற்றவர்களைப் பார்க்க ஒரு தடவை.....? வேண்டாம்! பெற்ற அன்னை இறந்தபின் கடைசித்தடவை யாவது .... வரவேயில்லை இரண்டாவது மகன் மாதவன் மேற்படிப்பைத் தொடர்வதற்காக இந்தியாவுக்குச் சென்றவன்.

ஏற்கனவே கிருஷ்ணாவின் வெளிநாட்டுப் பயணத்தின் போது ஏற்பட்ட அனுபவம் பரமசிவத்தாருக்கு நிறையவே இருந்ததால் மாதவன் விடயத்தில் மறுப்பு ஒன்றும் தெரிவிக்காமல் மௌனமாகயிருந்து விட்டார்.

'பிறந்த மண்ணில் நான் கொண்ட அளவு கடந்த பற்றுக்கும் பாசத்திற்கும் என்ரை பிள்ளை பலியாக நேர்ந்திட்டால்...... எனக்குள்ளை ஊறிப்போன என்ரை சமூக உணர்வுகள் என்னோடையே போகவேணும் எண்டது விதியாயிருந்தால்... அதை ஒருவராலும் மாற்ற ஏலாது. நடக்கிறதெல்லாம் இந்த மண்ணுக்கு ஏற்பட்ட சோதனையாகக்கூட இருக்கலாம்'— நொந்து போன மனதைத் தானாகவே தேற்றிக் கொண்டார்.

பிள்ளைகளிருவரும் வெளிநாட்டிற்குச் சென்றபின் பரமசிவத்தாருக்கும் பூரணத்திற்கும் ஆறுதலளித்து வருவது அவர்களிடமிருந்து வரும் கடிதங்கள் தான்.

வருடங்கள் சில கழிந்து போன நிலையில் மாதவனின் கடிதத்தொடர்பு திடீரென்று நின்றுபோனது.

உங்கடை மகன் மாதவன் இந்தியாவிலை ஒரு வெள்ளைக்காரப் பொம்பிளையைக் கலியாணம் முடிச்சிட்டாராம். உங்களுக்கு விஷயம் தெரியாதே!

வியாபார நோக்கில் அடிக்கடி இந்தியா சென்றுவரும் சிலர் மூலம் இத்தகவலை அறிந்த போது, பரமசிவத்தார் கஷ்டப்பட்டு ஜீரணித்துக் கொண்டார். ஆனால் அவரது மனைவிக்கு அதுவே முதலாவது 'இதய அதிர்ச்சி' க்குக் காரணமாகிற்று.

பட்ட காலிலே படும் என்பார்களே! அதை உண்மையாக்கும் விதத்தில் மறுநாள் கிருஷ்ணாவிடமிருந்து வந்த கடிதம் அமைந்திருந்தது.

தான் ஜேர்மனியை விட்டுக் கனடாவிற்குச் செல்ல இருப்பதாகவும், அங்கேயே நிரந்தர பிரஜைகளாக குடும்பத்துடன் தங்கிவிடத் தீர்மானித்திருப்பதாகவும் கிருஷ்ணா அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.

பெருங்கடலில் கைப்பொருட்களை நழுவவிட்டுக் கரையில் நின்று தவிப்பவர்கள் நிலையில்தான் அப்போது பரமசிவத்தாரும் பூரணமும் இருந்தார்கள்.

புத்திர சோகம் தாளாது தவித்தனர்; வேதனையுற்றனர். முடிவு...! நோய்க்கு அடிமையாகிப் படுத்த படுக்கையாகிவிட்டாள் பூரணம்.

பிள்ளைகள் மீது தீராத ஆத்திரம் பரமசிவத்தாருக்கு 'இனி உவங்கள் எனக்குப் பிள்ளைகள் இல்லை' ஆத்திரத்தில் மானசீகமாகச் சபதம் செய்துகொண்டார்.

மனைவிக்கு கணவனும், கணவனுக்கு மனைவியுமே குழந்தைகள் என்ற நிலையில் அந்த வயோதிபத் தம்பதியினரின் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது, அந்த ஆண்டவனுக்குகூடப் பொறுக்கவில்லைபோலும்.

பூரணத்திற்கு நாளுக்கு நாள் உடம்பு பலவீனமாகிக் கொண்டே வந்தது. முடிவில் அவள் இனிமேல் நீண்டநாட்களுக்கு உயிர்வாழமாட்டாள் என்பதை தெரிந்து கொண்ட போது...... உயிர் ஊசலாடும் நிலையில் பெற்று வளர்த்த பிள்ளைகளை ஒரு தடவை கண்குளிரக் காணவேண்டும் என்ற ஆசையைப் பூரணம் வாய்விட்டுச் சொல்லவில்லையென்றாலும், அந்த ஏக்கத்தைப் பரமசிவத்தார் புரிந்து கொண்டார்.

அவர் அசையாவிட்டாலும், தசை அசைந்துவிட்டது. தெரிந்தவர்களை கொழும்புக்கு அனுப்பி கிருஷ்ணாவுக்கும், மாதவனுக்கும் செய்தியைத் தெரிவிக்க ஏற்பாடு செய்தார்.

ஆனால் அவர்கள்........ நினைத்தவுடன் லீவு எடுக்க முடியாது, தாம் நினைத்தபடி தங்கள் செலவில் வருவதற்கு ஏராளமாகப் பணச் செலவு, என்று ஏதேதோ காரணங்களைக் கூறிப் பின் வாங்கிவிட்டார்கள்.

''ஆ! வந்திட்டியளே தம்பியவை வாருங்கோ! இங்காலை இப்பிடிவாங்கோ''

அமர்க்களமாக யாரோ குரல்கொடுக்க மரண வீட்டிற்குள் நுழைபவர்கள் யார் என்பதை அறியும் ஆவலில் அத்தனைபேர் பார்வைகளும் வாசற்பக்கம் செல்கிறது.

நினைவுகளிலிருந்து சுய நிலைக்கு மீண்ட பரமசிவத்தார்கூடத் தலையை உலுப்பி விட்டு உற்றுப்பார்க்கிறார்!

வீடியோ கமரா சகிதம் இரண்டு இளம் வாலிபர்கள்!! பரமசிவத்தார் உடலெங்கும் மின்சாரம் தாக்கிய அதிர்ச்சி!!

''ஆர் இவையளைக் கூட்டிக்கொண்டு வந்தது?'' துப்பாக்கிச் சன்னமாகப் புறப்பட்ட அவர் கேள்விக்கு உடனடியாக யாரும் பதில் சொல்ல முன்வரவில்லை.

சற்று நேர அமைதிக்குப் பின் நடுத்தர வயதுள்ள ஒருவர் எங்கிருந்தோ விரைந்து வந்தார்; குருக்களின் முன் நின்றிருந்த பரமசிவத்தாரின் அருகில் சென்று காதோடு எதையோ சொல்ல பரமசிவத்தார் துள்ளிக்குதித்தார்.

''ஓகோ... அவையளின்ரை வேலையா இது! அங்கையிருந்து கொண்டு உத்தரவு போடுகிறதுக்கு மட்டும்தான் அவைக்கு உரிமை! வேறையொன்றுக்கும் இல்லை..... அப்படித்தானே!... கூடாது! என்ரை பிள்ளையள் படத்திலைகூட எங்களைப் பார்க்காமலிருக்கட்டும்.''

''முதலிலை இந்தச் சாமானுகளையும் எடுத்துக் கொண்டு இந்த இரண்டு பேரையும் வீட்டாலை வெளிக்கிடுத்துங்கோ...... கெதியாய்'' கோபமாகப் பேசிய பரமசிவத்தாரைப் பார்த்து அனைவரும் செய்வதறியாது திகைத்தனர்.

வீடியோ கமறாவுடன் வந்தவர்கள் வந்த வழியே திரும்பினர். பூரணத்தின் இறுதிக் கிரியைகள் யாவும் அமைதியாக நடந்து முடிந்தது.

இறுதி ஊர்வலத்திற்குப் பூரணத்தின் உடல் தயாரான போது..... பரமசிவத்தார், முற்றத்து மண்ணில் விழுந்து, புரண்டு ஆவேசமாக அழுது தீர்த்தார்.

தன் மனைவி பூரணத்திற்காக மட்டுமல்ல! பெற்று வளர்த்த பிள்ளைக்காக மட்டுமல்ல! தான் பிறந்து...... வளர்ந்து...... வாழ்ந்த. இந்த மண்ணுக்குமாக!

(யாவும் கற்பனை)

- வசந்தா நல்லதம்பி -

## பொது அறிவுப்போட்டி இல. 35

1. 'மனித கம்பியூட்டர்' என உலகநாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்டவர்? ... ... ... ... பி. டி. உஷா / திருமதி சகுந்தலாதேவி
2. ஒரு நதியின் கரையில் உள்ள நகரம்? ... ... ... கெய்ரோ / பீக்கிங்
3. இமயமலையில் உள்ள புனிதத் தலங்களில் ஒன்று? ... ... பத்ரிநாத்/சிதம்பரம்
4. உலகில் எத்தனை கடல்கள் உண்டு? ... ... .. ... ... ... ... 1 / 5
5. ஆவியாகும் தன்மை இதற்கும் உண்டு? ... ... ... நீர் / உயிர்
6. இதனைக் குறைத்தால் பெண்ணுக்கு அழகு என்றார் ஔவையார்? ... ... ... உணவு / உடை
7. இதற்கும் தோகை உண்டு? ... ... ... ... ... .. ... மயில் / கரும்பு
8. நவமணிகளில் ஒன்று? ... ... ... குண்டுமணி / பவளம்
9. ஸ்ரீ இராமரின் குலகுரு இவர்? ... ... ... ... வசிட்டர் / விஸ்வாமித்திரர்
10. முதலில் விண்வெளிப் பயணத்தை தொடங்கிய நாடு எது? ... ... ... ... ... ரஷ்யா / அமெரிக்கா
11. உலகப் புகழ்பெற்ற ஓவிய மேதை? ... ... ... பிக்காஸோ / ரவிவர்மா
12. நோயாளிக்கு உறவு யாவர்? ... ... ... ... ... ... மருத்துவன் / நோய்

பெயர்:- ...................................
விலாசம்:- ...................................
...................................

பொது அறிவுப்போட்டி இல: 35
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 21 - 03 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# மலையக எழுத்தாளரின் மனக்குமுறல்கள்

நல்லூர்க் கம்பன்கோட்டத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை நடந்த இலக்கிய சந்திப்பு நிகழ்ச்சியில் மலையகத் தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொண்டு தங்கள் மனக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சிக்கு 'மல்லிகை' ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா தலைமை வகித்தார்.

அவற்றின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.

**தெளிவத்தை யோசப்**

தமிழ் இலக்கியம், தமிழ் நாட்டு இலக்கியம், ஈழத்து இலக்கியம் என்று கூறும் போது மலையக இலக்கியம் குறைந்தது அல்ல; குறைத்து மதிப்பிடவும் முடியாது.

எழுத்தாளர் மற்றவர்களுக்கு உதாரணமாக வாழவேண்டும். மற்றவர்கள் வாழ்க்கையை விட வித்தியாசமாக இருக்கவேண்டும். இப்படித்தான் வாழ வேண்டும் என்று கட்டுப்பாடு வேண்டும்.

1963 க்கு முன் இருந்து மலையகத்தில் எழுதுகிறார்கள். சி. வி. வேலுப்பிள்ளை, கணேஷ் போன்றவர்கள் எழுதுகிறார்கள். அன்றைய படைப்புக்கள் ஆங்கில அறிவின் மூலம் வந்தன.

1830 ல் மலையகத்தவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றால் பல கட்டுப்பாடுகள் இருந்தன. சுயமாக அவர்கள் வாழ அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. எவ்வளவோ போராட்டத்தின் பின்பு 1930 ல் தான் அவர்களுக்கு கல்வி வசதி கிடைத்தது.

1960 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றம் மூலம் இலக்கியத்துறையிலும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. கொழும்புப் பத்திரிகைகளில் இந்திய எழுத்தாளர்கள் தான் எழுதி வந்த சம்பிரதாயத்தை அதன் மூலம் உடைக்க முடிந்தது. இந்திய சஞ்சிகைகளை வாசித்துப் பழகிய எம் மக்களிடையே நம்மவர்கள் படைப்புக்களையும் மதிக்கும் நிலை உருவாகியது.

அதன்பின் தான் மலையக மண்ணின் மணம் வீசும் படைப்புக்கள் வந்தன. அக்கால கட்டத்தில் மலையக எழுத்தாளர்களின் படைப்புக்களை எவரும் மதிக்கவில்லை. அதன் காரணமாக மலையகத்தில் பல சஞ்சிகைகள் வெளிவர ஆரம்பித்தன.

மலையக எழுத்தாளர்கள் பேச்சும், எழுத்தும் தமிழக நடையில் இருப்பதாகக் காரணம் காட்டிக் கொழும்புப் பத்திரிகைகள் படைப்புக்களைப் புறக்கணித்து வந்தன.

எம் போராட்டத்தால் இன்று மலையக எழுத்தாளர் மதிக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில் ஒரு குறையையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். எம் படைப்புக்களுக்கு எவரும் விமர்சனம் செய்யவில்லை.

யாழ்ப்பாணத்தில் பெரும் விமர்சகர்கள் இருந்தும் இன்று வரை எவரும் எம் படைப்புக்களை விமர்சனம் செய்யாதது பெரும் கவலையான விடயம்.

இன்று மலையகம், மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று தனித்தனி இலக்கியங்கள தனித்தன்மையுடன் வெளிவந்தபோதும் சகலருக்கும் இடையில் ஓர் இணைப்பு(Link) உருவாக்கப்பட வேண்டியதவசியம்.

**திக்குவல்ல கமால்**

கடந்த காலங்களில் ஏற்பட்ட நிகழ்வுகளால் மலையக எழுத்தாளர்கள் இங்கு வர முடியாத சூழ்நிலை நிலவி வந்தது. இன்று யாழ்ப்பாண எழுத்தாளர்களுடன் கூடிக் குலாவிக் கருத்துக்களைப் பரிமாற சந்தர்ப்பம் கிடைத்தது பெரும் பாக்கியம்.

1975 ஆம் ஆண்டுக்குப்பின் இங்கிருந்து படைப்புக்கள் எமக்குக் கிடைக்கவில்லை. இதனால் படைப்புக்களைப் படிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இங்குள்ள பத்திரிகைகளோ, சஞ்சிகைகளோ அங்கு கிடைக்க வழி செய்யப்பட வேண்டும். எம் படைப்புக்களும் உங்களுக்குக் கிடைக்கவில்லை.

இங்கிருந்த நிலைதான் அங்கும் இருந்தது. தென் இலங்கை இலக்கிய நிலை பற்றிக் கூறுவதாயின், குறிப்பிடத்தக்க அளவு முன்னேறவில்லை.

எம் இலக்கியம் தனித்து நிற்காமல் உங்களுடன் இணைந்து செயல்படவேண்டும் என்பதே எம் ஆசை.

**மேமன் கவி**

மலையக எழுத்தாளர்களை யாழ்ப்பாண எழுத்தாளர்கள் புறக்கணிக்காது ஒன்றிணைத்துக் கொள்ள முன்வரவேண்டும். மலையக- யாழ்ப்பாண எழுத்தாளர் களிடையே பாலம் உருவாக்கப்படவேண்டும்.

**அந்தனி ஜீவா**

மலையக மக்களுக்காகப் போராடிய நடேசு ஐயருக்கு இங்கு மதிப்பு அளிக்கப்படவில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இவ்விடயத்தில் ஆய்வு மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணம் நாவல்கள் பற்றிய அறிமுகவிழாக்களை நாம் மலையகத்தில் எதுவித செலவுமின்றிச் செய்கிறோம். அதே நேரம் எம்படைப்புக்களுக்கு இங்கு எவரும் அறிமுக விழா நடத்த முன் வருவதில்லை. இந்நிலை மாற வேண்டும். (எ - 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வானொலிகளில் தமிழ் நிகழ்ச்சிகள்

□ உலகத்தின் பல்வேறு நாடுகளின் வானொலி நிலையங்கள் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன.

எந்த நாடு எந்த அலைவரிசையில் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது என்பது பலருக்குத் தெரிந்திருக்காது.

அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறோம்:

★ மலேசியா - அதிகாலை 2.45 முதல் 6 மணி வரை; மாலை 4.30 மணிமுதல் 8.30 மணிவரை - அலைவரிசை 60

★ பாகிஸ்தான் - மாலை 2.30 மணி முதல் 3.15 வரை; அலைவரிசை 19,25

★ பீகிங் (சீனா) - மாலை 7.30 மணி முதல்8.30 மணி வரை; அலைவரிசை 25, 31

★ மாஸ்கோ (சோவியத்யூனியன்) - மாலை 6.00 மணி முதல் 6.30 மணிவரை இரவு 7.30 மணி முதல் 8.00 மணி வரை; அலைவரிசை 19,25,41

★ சீஷெல்ஸ் - காலை 7.00 முதல் 7.30 வரை மாலை6.30 முதல் 7.30 வரை அலைவரிசை 19, 25, 41.

★ வத்திக்கான் (இத்தாலி)- காலை 7.00 முதல்7.15 வரை இரவு 8.10 முதல் 8.20; அலைவரிசை 31, 41, 49.

★ சிங்கப்பூர் - அதிகாலை 4.30 முதல் 5.20 வரை மாலை 2.30 முதல் 6.30 வரை அலைவரிசை 41,49.

★ வெரித்தாஸ் (பிலிப்பீன்ஸ்) - காலை 6.00 மணி முதல் 6.30 மணிவரை மாலை 7.30 மணிமுதல் 7.55 வரை அலைவரிசை 19, 25, 31.

பி.பி.சி. தமிழோசை மற்றும் இந்திய இலங்கைத் தமிழ்ச் சேவைகள் ஒலிபரப்பாகும் நேரங்கள் நம்மவருக்கு நன்றாகத் தெரிந்த ஒன்றுதானே! ★

# பெரியாரின் பத்திரிகைக்கு ராஜாஜி வைத்த பெயர்

□ தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தவர் ராஜாஜி என்று அழைக்கப்படும் ராஜகோபாலாச்சாரியார்.

ஆச்சாரியார் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் அழைக்கப்பட்டவர்.

அரசியலில் ராஜாஜியின் கருத்துக்கள் தி. மு. க. மற்றும் திராவிடர் கழகம் ஆகியவற்றின் கருத்துக்களுக்கு நேர் மாறாக இருந்த காலத்தில் பெரியார் ஈவெரா அவர்கள் 'விடுதலை' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

1935 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பத்திரிகைக்கு 'விடுதலை' என்ற பெயரை வைத்தவர் பெரியார் அல்லர்.

அப்பெயரைச் சூட்டியவர் ராஜாஜி அவர்கள்தான்.

'விடுதலை' பத்திரிகைச் சீர்திருத்தத் தமிழைப் பின்பற்றியது.

விடாப்பிடியாக பெரியார் பின்பற்றிய எழுத்துச் சீர்திருத்தம் 1978 ஆம் ஆண்டில்தான் தமிழ் நாட்டில் சட்டமாக்கப்பட்டது. ★



# தந்தையை மடக்கிய ஜவகர்லால் பதில்

→ ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் நேருஜி படித்துக் கொண்டிருந்த சமயம்......

அவரது தந்தை மோதிலால் நேரு வாரம் ஒரு முறை மகன் ஜவஹருக்கு பணம் அனுப்பி வந்தார்.

ஒருமுறை பணம் அனுப்பக் கோரி தந்தைக்கு ஜவஹர் கடிதம் அனுப்பினார்.

ஒரு வாரத்துக்குள் இரண்டாவது தடவையாகப் பணம் கேட்கிறானே, என்ன செலவு செய்கிறானோ என்று எண்ணிய மோதிலால் ஜவஹருக்குப் பதில் அனுப்பினார்.

''அனுப்பிய பணத்துக்குக் கணக்கு அனுப்பவும்''— என்று மோதிலால் கடிதத்தில் கேட்டிருந்தார்.

உடனே ஜவஹர் தந்தைக்குப் பதில் கடிதம் எழுதினார்.

அந்தப் பதிலைக் கண்டதும் மோதிலால் மகனுக்கு மறு வார்த்தை இன்றி அனுப்பி வைத்தார்.

ஜவஹர் அனுப்பிய பதில் இதுதான்.

''என் மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் என்னிடம் கணக்குக் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி என் மீது நம்பிக்கை இல்லாத பட்சத்தில் நான் அனுப்பும் கணக்கினால் உங்களுக்குப் பலன் எதுவும் இல்லை.'' ★

# முல்லாவின் கேள்வி

□ ''காய்கறிகளிலேயே கத்தரிக்காய்தான் மிகவும் சிறந்தது என்பது என் கருத்து. உம் கருத்து என்ன?''

இப்படிப் பக்கத்தில் இருந்த முல்லாவைப் பார்த்துக் கேட்டார் மன்னர்.

''அதற்கு முல்லா, ''அதிலென்ன சந்தேகம்? உலகிலேயே கத்தரிக்காய் தான் மிக மிகச் சிறந்தது!'' - என்றார்.

''பின்னொரு சமயம், ''காய்கறிகளிலேயே மிகவும் மோசமானது கத்தரிக்காய் தான் என்பது கருத்து. நீர் என்ன சொல்கிறீர்?'' — என்று முல்லாவைப் பார்த்துக் கேட்டார் மன்னர்.

முல்லா, ''அதிலென்ன சந்தேகம் உலகிலேயே மிக மோசமானது கத்தரிக்காய் தான்'' - என்றான்.

மன்னர், முல்லாவைப் பார்த்து;

''அப்படி என்றால் சில நாட்களுக்கு முன்பு கத்தரிக்காயைப் புகழ்ந்தீர்களே! அது ஏன்? — என்று கேட்டார்.

அதற்கு முல்லா —' அரசே, நான் என்ன கத்தரிக்காயிடமா வேலை செய்கிறேன்? உங்களிடம் அல்லவா!''- என்று பதிலளித்தார். ★

பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

# இந்துமாகடலுக்கு அட்லஸ் தயாரிப்பு; இலங்கைத்தீவும் ஒரு சிகரத்தின் உச்சியே!

→ அட்லஸ் புத்தகத்தைப் புரட்டினால் பல்வேறு கண்டங்களின் படங்கள் இருக்கும்.

நாடுகளின் எல்லைகளைக் குறிக்கின்ற படங்கள் அல்லாமல் மலைகள் நதிகள், பீடபூமி, சமவெளி போன்றவற்றைக் காட்டுகின்ற படங்களும் காணப்படும்.

ஆனால் இந்த எல்லாப் படங்களிலும் கண்டங்களை அல்லது நாடுகளைச் சுற்றியுள்ள கடல்கள் அனைத்தும் வெறும் நீல நிறத்தில் காணப்படும்.

எனினும் உலகின் கடல்களுக்கு என்றே தனியாக அட்லஸ் தயாரிக்க முடியும். இப்போது இந்துமாகடலுக்கு அட்லஸ் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த அட்லஸ் 150 பக்கங்களைக் கொண்டது.

இந்து மாகடலின் நீர் முழுவதும் வற்றிப்போய் விட்டதாக நீங்கள் கற்பனை செய்து கொண்டால், நீண்ட மலைத் தொடர்கள் சிகரங்கள் (இவற்றின் உச்சிகளே தீவுகள். இலங்கைத்தீவும் ஒரு சிகரத்தின் உச்சிதான்.) எரிமலைகள், பள்ளத்தாக்குகள், நீண்ட வெட்டுப்பள்ளங்கள் பீடபூமிகள் ஆகியவற்றைக் காணமுடியும்.

உலகின் எல்லாக் கடல்களிலும் இவை அமைந்துள்ளன.

இந்துமாகடலை எடுத்துக் கொண்டால் இக்கடலின் நடுவே தெற்கு வடக்காக நீண்ட மலைத்தொடர் உள்ளது. இதன் தென்கோடியானது கிளைகளாகப் பிரிகின்றது. இவை பிறகடல்களில் அமைந்துள்ள நடுக்கடல் மலைகளுடன் இணைந்தவையாக உள்ளன.

யுனெஸ்கோவின் கீழான பன்னாட்டு கடல் ஆய்வுக் கமிஷனின் ஏற்பாட்டின் கீழ் 13 நாடுகளைச் சேர்ந்த கடல் ஆய்வுக் கப்பல்கள் நடத்திய ஆய்வின் பலனாகவே இந்துமாக் கடல் அட்லஸ் தயாரிக்கப்பட்டுள்ளது.

உலகின் பெருங்கடல் ஒன்றின் அட்லஸ் தயாரிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

அட்லாண்டிக்கடல் அட்லஸ் இந்த ஆண்டுக் கடைசியில் வெளியாகும்.

பசுபிக்கடல் அட்லஸ் இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்தே வெளியாகும். ★

# 'வேலியம்' இருக்கும் தாய்ப்பால்

→ தாய்ப்பாலில் இயற்கையாகவே தூக்கமருந்து சேர்ந்திருப்பதாகச் சுவீடன் நாட்டு மருத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இது 'வேலியம்' என்ற தூக்கமாத்திரை போன்றது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தான் குழந்தைகள் தாய்ப்பால் குடித்ததும் தூங்குகின்றன என்று அவர் தெரிவித்திருக்கிறார். ★

# எது சுலபமானது?

□ எது நிலையானது?
நம்பிக்கை.
எது சிறந்தது?
நற்குணம்,
எது மிக விரைவானது?
எண்ணம்.
எது மிகச் சுலபமானது?
பிறருக்குப் புத்திமதி சொல்வது.
மகா கடினமானது எது?
உன்னையே நீ அறிதல்.
மகா அழகு எது?
அகில பிரபஞ்சம். ★

# பக்ரீறியா மூலம் பட்டு உற்பத்தி

□ பக்ரீறியாக்களைக் கொண்டு பட்டு தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்கா வெற்றி கண்டுள்ளது.

சிலந்திகளில் காணப்படும் நூல் உற்பத்திக்குத் தேவையான பரம்பரை அலகுகளை (ஜீன்) எடுத்து பக்ரீறியாக்களில் இணைப்பதன் மூலம், பக்ரீறியாக்களைப் பட்டு நூல் உற்பத்தி செய்யும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் அமெரிக்க இராணுவ விஞ்ஞானிகள். பக்ரீறியா உற்பத்தி செய்யும் நூல் சாதாரண பட்டு நூலை விடத் தரமானதும் பலமானதுமாகும்.

இராணுவ வீரர்கள் பாவிப்பதற்கான பாரம் குறைந்த தலைக்கவசங்கள், குண்டு துளைக்காத ஆடைகள் தயாரிப்பதற்கு செலவு மற்றும் நிறைகுறைந்த மூலப்பொருள்களைக் கண்டு பிடிக்கும் ஆய்வின்போதே, இதனைக் கண்டு பிடித்தார்கள். ★

# நடித்துக்கொண்டே நாடகம் எழுதியவர்

□ ஷேக்ஸ்பியர் 37 நாடகங்களை எழுதிய போதும் கடைசிவரை மேடை நாடகங்களில் நடித்துக் கொண்டேயிருந்தார்.

ஆரம்ப நாட்களில் நகைச்சுவை நடிகராகவும், பிற்காலத்தில் சோக நடிகராகவும் விளங்கினார் ஷேக்ஸ்பியர். ★

# குளிக்கப் போய் சேறு பூசும் ஸ்பெயின் மக்கள்

□ ஸ்பெயின் நாட்டின் கடற்கரையோரத்தில் சோன் பெட்ரோ டெல்பினாடர் என்ற பெயரில் சிறு நகரம் ஒன்று உண்டு.

இந்த ஊரில் உள்ள சிறு ஆற்றினுள் காணப்படும் சேறு அதிசயமானதாகக் கருதப்படுகிறது.

இந்தச் 'சேறு' மனிதனின் எலும்பு, தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளை போக்கவல்லது.

ரோமானியரின் படையெடுப்பின் போது இந்த ஆறு தோன்றியது. ஐரோப்பிய மக்கள் இந்தச் சேற்றினால் கவரப்பட்டுள்ளனர்.

பிரபலமான மருத்துவர்கள் கூட இந்த ஆற்றின் சேற்றைத் தேய்த்துக் குளிக்க சிபாரிசு செய்கிறார்கள்.

முதலில் இந்த ஆற்றின் சேறை உடல் முழுவதும் தேய்த்துக் கொள்ளவேண்டும். சிறிது நேரத்தில் சேறு காய்ந்து விடும். பிறகு இந்த ஆற்றுத் தண்ணீரில் குளிக்கவேண்டும்.

அவ்வாறு குளித்தால் தோல், எலும்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் குணமடையும்.

இந்த ஆற்றின் தண்ணீரில் ஒரு வித உப்பு கலந்திருக்கிறதாம்.

இந்த நீரில் குளித்தவுடன் உடலில் ஒருவித புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

முகம் முழுவதும் இந்த ஆற்றின் சேற்றைப் பூசிக் காயவிடவேண்டும். பின்னர் ஆற்று நீரால் கழுவ வேண்டும். முகம் பள பள என ஜொலிக்குமாம்.

ஸ்பெயின் நாட்டுக் கடல் ஆராய்ச்சியாளர்கள் இந்த சேற்றில் சல்பர் அதிகமாகக் கலந்திருப்பதாகக் கூறியுள்ளனர்.

சேற்றை உடலில் தேய்த்தவுடன் உடலில் உள்ள திசுக்கள் காய்ந்து விடுகின்றன. பிறகு ஆற்று நீரால் கழுவியவுடன் ஒருவித புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

இப்படியானால் 'குளிக்கப்போய்ச் சேறு பூசுவதா?'- என்ற நம்மூர்ப் பழமொழி ஸ்பெயின் நாட்டில் செல்லாது போல் தெரிகிறதே! ★

# தத்துவஞானியாக வர

● தத்துவ ஞானியாக மாறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

தத்துவஞானியாக விளங்கிய சோக்ரடீஸ் கூறியிருப்பதை வாசியுங்கள்:-

கட்டாயம் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு நல்ல மனைவி கிடைத்தால் சந்தோஷத்துடன் மணவாழ்க்கை கிட்டும்.

உங்களுக்கு மோசமான மனைவி கிடைத்தால் நீங்கள் ஒரு தத்துவ ஞானியாக உருவெடுப்பீர்கள். அதனால், நிறைய ஆட்கள் பயனடைவார்கள்'—

# மேலை நாடுகளில் 'விடியோ' சிற்பக்கலை!

□ விடியோ சிற்பக்கலை இப்போது மேலைநாடுகளில் பரவி வருகிறது.

முன்னர் ஒருவரின் மார்பளவுச் சிலை ஒன்றைத் தயாரிப்பதற்கு சிற்பி ஒருவருக்கு பல நாட்கள் எடுக்கும். சிலைக்கு உரியவர் தினம் சிலமணி நேரமாவது ஆடாமல் அசையாமல் சிற்பி முன் 'சிலை'யாக உட்கார்ந்து கொள்ள வேண்டும்.

இது அலுப்பூட்டுகிற விஷயம்.

ஆனால் இப்போது இதற்கு நவீன முறை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

5 நிமிடங்கள் அசையாமல் உட்கார்ந்திருந்தால் போதும். அதன் பிறகு பத்தே நாள்களில் சிலை தயாராகி விடும்.

லேஸர் ஒளிக்கற்றையும் விடியோ கமராவும் இப்புதிய முறையைச் சாத்தியமாக்கியுள்ளன.

சிலையை விரைவாக வடித்து முடிக்க, இயந்திரக் கருவி அல்லது தகுந்த சாதனத்தை உருவாக்கக் கடந்த காலத்தில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுண்டு.

விடியோ சிற்ப முறையை பிரெஞ்சு பொறியியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஒருவரை சிற்பமாக வடிப்பதானால் அவரை உட்கார வைத்து லேசர், விடியோ கமிரா ஆகியவற்றைப் பயன்படுத்தி அவரது முக அமைப்பு ஒரு பிலிமில் பதியப்படுகிறது.

பிலிமில் பதியப்பட்ட உருவ அமைப்பதானது பின்னர் டிஜிட்டல் வடிவில் மாற்றப் படுகிறது. இத்தகவல்கள் பகுக்கப்பட்டு மரத்தைக் கடையும் இயந்திரத்தில் செலுத்தப்படுகின்றன. அந்த இயந்திரம் குத்துமதிப்பான ஒரு மொடலைத் தயாரித்து அளித்து விடுகிறது.

பின்னர் சிற்பி இந்த மொடலில் நுணுக்கமான மாற்றங்களைச் செய்கிறார்.

சிற்பம் வடிக்க இவ்விதம் இயந்திரமுறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றாலும், இயந்திரமே சிற்பத்தை வடிப்பதில்லை. சிற்பியின் முன்னால் ஒருவர் உட்கார்ந்திருக்கும் நேரத்தைத் தான் இது குறைக்கிறது.

எனவே என்னதான் இயந்திரம் வந்தாலும், சிற்பம் உருவாவதில் ஒரு சிற்பியின் கைவண்ணம் பிரதானமாக இருந்து வரும். ★

# காதலுக்கு தூது செல்லும் இயற்கையின் படைப்புகள்

□ உலகம் இறுகி ஒரு பொருளாய் நிற்பது -

ஒரே ஒரு தெய்வம் முடிவு வரை விரிந்து நிற்பது - இது காதல்.

காதலர் பிரிந்திருக்கும் போது அவர்களை ஒருவர்க்கொருவர் ஓலையெழுதலாகாதென்று தடுத்தால், அவர்கள் நமக்குத் தெரியாபடி ஆயிரம் ஆச்சரிய வழிகள் கண்டுபிடித்துப் பேசிக்கொள்கிறார்கள்.

பறவைகளின் பாட்டையும்,

மலர்களின் சுகந்தத்தையும்,

குழந்தையின் சிரிப்பையும், ஞாயிற்றின் ஒளியையும், காற்றின் உயிர்ப்பையும், விண்மீன்களின் கதிர்களையும் காதலர் தூதுவிடுகிறார்கள்.

ஏன் கூடாது?

தெய்வத்தின் படைப்பு முழுவதும் காதலுக்குத் தொண்டு செய்யும் பொருட்டே அமைந்திருக்கிறது.

உலகம் முழுவதையும் தூதுபோகச் செய்கிற திறமை காதலர்க்கு உண்டு.

இளவேனிற் காலமே. நான் அவளுக்கு எழுதுகிற ஓலை நீ.

உயிரே. நீ கல்லாய்ப் பிறந்தால் காந்தக்கல்லாய்ப் பிற.

செடியானால், தொட்டால் வாடும் செடியாகி விடு.

மனிதனானால் காதல் செய்.

காதல் இல்லாவிடில், ஞாயிறு என்றதோர் தீப்பந்தம் அவிந்துபோய் விடும்.

- மகாகவி பாரதியார்



பாரதியார்

# மனிதனிடம் இருக்கும் நுண்ணறிவுத் திறம்

□ நுண்ணறிவுத்திறம் (Insight) என்பது என்ன?

நாம் ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்ற சிந்தனையில் இருக்கலாம். நமக்குப் பல வழிகள் தோன்றலாம்.

ஆனால் அவற்றில் எல்லாம் நமக்குத் திருப்தி ஏற்படவில்லை.

நாம் ஒரு புதிருக்கு விடைகாணும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கலாம். சரியான எந்த விடையும் நமக்குக் கிடைக்காத நிலையில்........

திடீரென்று நமது மூளையில் ஒரு மின்னல். நாம் தேடிக் கொண்டிருக்கும் தீர்வு அல்லது விடை நமக்குக் கிடைத்து விடுகிறது.

இவ்வாறாக, நமது சிக்கல்களுக்குத் திடீரென்று ஒரு விடையோ அல்லது தீர்வோ கிடைப்பதைத் தான் நுண்ணறிவுத்திறம் என்கிறார்கள்.

□ நுண்ணறிவுத்திறம் அதிஷ்டவசமாக ஏற்படும் ஒன்றா? அப்படித்தான் பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இது தவறான கருத்து. நமது சிந்தனை கடுமையாக இருக்கும் போதும் நமது மூளை சுறுசுறுப்பாக இயங்கும்போதும்தான் நமக்கு நுண்ணறிவுத்திறம் கிட்டும்.

விஞ்ஞானி ஆர்க்கிமெடிஸ் குளியல் தொட்டிக்குள் இறங்கியபோது அவரது சிக்கலுக்கு விடை கிடைத்தது.

சும்மா கொதித்துக் கொண்டிருந்த கேத்தலை பார்த்த ஜேம்ஸ்வாட்டுக்கு ஒரு புதிய உண்மை கிடைத்தது.

ஆப்பிள் மரத்தின் கீழே படுத்திருந்த நியூட்டன் மீது ஆப்பிள் ஒன்று விழுந்தது; இன்றைய அறிவியல் யுகம் பிறக்க அது காரணமாயிற்று.

நியூட்டனுக்கு முந்தியும் ஆப்பிள்கள் விழுந்து கொண்டுதானிருந்தன. பலர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. அவற்றைப் பொறுக்கித் தின்றுவிட்டுப் போய்விட்டார்கள்.

ஆனால் நியூட்டனுக்குத்தான் அந்த சாதாரணமான நிகழ்ச்சியில் விஞ்ஞானத்தைக் காண முடிந்தது.

அதனால்தான் நியூட்டனைப்பற்றி ஒரு வரலாற்று ஆசிரியர் சொல்கிறார்:

'நியூட்டனுக்கு முன்னர் பலர் தலைமீது ஆப்பிள்கள் விழுந்தது என்னவோ உண்மைதான். ஆனால் நியூட்டன் விஷயத்தில்தான் முதன்முதலாக ஆப்பிள் ஒன்று மனிதனின் தலைக்குள் விழுந்தது'

இவ்வாறாக நுண்ணறிவுத்திறம் என்பது அறிவியல் சிந்தனையில் நிகழும் ஒரு சுவாரஸ்யமான அனுபவம்தான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திருந்திய ஆதவன்

"மீரா... மீரா... ஒன்பது மணியாகிறது இன்னும் தூக்கமா...?..."

சட்டெனத் தலை நிமிர்ந்தாள். முகம் எல்லாம் வீங்கி இருந்தது. அதிர்ச்சியுடன்—

"என்ன... முகமெல்லாம் இப்படி இருக்கே!"

என் கேள்விக்குப் பதிலாக அவள் கண்களில் இருந்து முத்து முத்தாகக் கண்ணீரே கொட்டுகிறது.

எந்தத் துன்பம் வந்தாலும் மிகச் சிம்பிளாக எடுத்துச் சிரித்த முகத்துடன் வலம் வரும் மீராவா ?

நான் தாங்க முடியாமல் அவள் உடலைப் பிடித்துக் குலுக்குகிறேன். ஏதோ ஒரு குப்பி தரையில் விழுந்து உடைந்து சிதறுகிறது.

சிந்திய துளிகளை ருசி பார்த்த இரண்டு எறும்புகள் துடி துடித்து இறந்தன. விறைத்துப் போய் மீராவைப் பார்க்கின்றேன்.

"இந்து...! நீ நினைக்கிறதெல்லாம் சரி. குடும்ப விஷயங்களை நான்கு சுவர்களுக்குள் இருக்கவேண்டியவை என்று நினைப்பவள் நான். சிரித்த முகத்துடன் எல்லாவற்றையும் பொறுத்துப் பொறுத்து அலுத்துப்போய் இந்த முடிவுக்கு வந்துள்ளேன்"

"மீரா...! கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லேன்..."

"இந்து... என் கணவர் என்னோடு மிக அன்பாக இருக்கிறார். எனக்கு எது பிடிக்குமோ அதையெல்லாம் செய்கிறார். குடும்பத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால்......

"ம்... சொல்லு" — உற்சாக மூட்டினேன்.

"இந்து...!...குடும்பத்திற்கு ஏற்ற கணவராக இருக்கிறார். ஆனால் அழகான பெண்களைக் கண்டதும் அவர்களுடன் தேவையில்லாமல் பேசுவதும் சிரிப்பதும், படத்திற்குப் போவதும்...... அவர் மேல் உயிரையே வைத்திருக்கும் எனக்கு அவரின் இந்த சபல புத்தி ஆத்திரத்



தையும் அழுகையையும் தருகிறது.

"ஏன் இதுகளை எடுத்துக் கூறி உன் கணவனைத்திருத்த வேண்டியது தானே...!

'நானும் எத்தனையோ தடவைகள் சொல்லி விட்டேன். அப்போதைக்குப் போது எனக்கு சமாதானம் சொல்லி இனிமேல் அப்படி ஒன்றும் செய்யமாட்டேன் என்று ஆயிரம் சத்தியங்கள் செய்கிறார். இவ்வளவுக்குக் காரணம் பெண்கள் தான். அவர் திருமணமானவர் என்று தெரிந்தும் இந்தப் பெண்கள் இப்படி நடந்து கொள்கிறார்களே !"

மீரா சொல்லிக்கொண்டு இருக்கும் போது யாரோ அறையில் நுழைவதை உணர்ந்து திரும்பிப் பார்க்கிறேன்.

மீராவின் கணவன் ஆதவன் தான் கலங்கிய கண்களுடன் நின்று கொண்டு இருந்தான்.

"மீரா ..! நீ சொன்ன எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். உன்போல நல்ல மனைவி கிடைப்பதே அருமை... உன்னைக் கலங்க வைச்சேனே...? ...சத்தியமாக இனிமேல் நான் இப்படி நடந்து கொள்ளவே மாட்டேன்."

ஆதவன் கண்களில் இருந்து வடிந்த நீரைப் பார்த்துப் பதைத்தபடி எழுந்த மீரா அவசரமாகத் துடைத்து விடுகிறாள்.

நான் அறையை விட்டு வெளியேறுகிறேன்.

'இந்து'வின் டைரியில் இருந்து

# 'மறு'மகளாகக் கணவன் வீடு செல்லும் மருமகள்!

ஒரு பெண் திருமணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போகும்பொழுது அவள் ஒரு புதிய உலகத்தில், புதிய வாழ்வில் அடியெடுத்து வைக்கின்றாள்.

அவள் அந்தப் புதிய உலகத்தில் ஆதாரமாய் நம்பி வருவது அவளுடைய கணவனைத்தான். கணவன் மூலமாகத்தான் அவள் ஏனைய உறவினர்களை அறிந்து கொள்கிறாள்.

புதிய சூழ்நிலை, புதிய உறவினர்கள், புதிய பழக்கங்கள் என்று முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் அவள் நுழைந்திருக்கின்றாள் என்பதை அவளுடைய கணவன் மாமியார், மாமனார், அனைவருமே புரிந்து கொண்டு அன்புடன் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

புதிய சூழ்நிலையில் தன்னைப் பொருத்தி, புதிய வழக்கங்களை ஏற்றுக் கொள்ள அவளுக்குப்போதிய அவகாசம் கொடுக்க வேண்டும்.

அவள் முற்றிலுமாகப் புதிய சூழ்நிலைக்குத் தக்கபடித் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கலாகாது. அவள் வீட்டின் மருமகள் என்றாலும் அவளும் ஒரு தனி பிரகிருதி தான் என்பதை உணரத் தவறலாகாது. அவளுடைய தனித்துவம் மதிக்கப்பட வேண்டும்.

உதாரணமாக அவளுக்குப் பகலுணவிற்குப்பின் தூங்கும் பழக்கமிருக்கலாம். மத்தியானம் பெண்கள் தூங்கக் கூடாது; அது இந்த வீட்டுப் பழக்கமல்ல; நீ தூங்கக் கூடாது' எனத் தடை விதிக்கலாகாது.

பெண்ணாயினும், ஆணாயினும் சுதந்திரமாய் இருப்பதைத்தான் விரும்புவர். 'பெண் என்பவள் ஆணின் போகப் பொருள், அடிமை என்று எண்ணும் காலம்மாறி விட்டது. எனவே அதைச் செய்யக் கூடாது, இதைக் செய்யக் கூடாது, என்று தடையுத்தரவு பிறப்பித்து அவளுடைய சுதந்திரத்தைப் பறித்தலாகாது.

மருமகள், 'புகுந்த வீடு தான் இனி என் வீடு, கணவனின் உறவினர்கள் தான் இனிஎன்உறவினர்கள்' என்று ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

குடும்பத்தில் நடக்கும் சண்டைகளில் மாமியார் - மருமகள் சண்டை பிரசித்தி பெற்றது.

இந்தச் சண்டைகளால் தான்கூட்டுக் குடும்ப அமைப்பேஉடைந்து வருகின்றது.

இந்த மாமியார் மருமகள் சண்டைக்கு இன்னார்தான் காரணம் என்று குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியாது. இது இரு கை ஓசை.

முதலில் இந்தச் சண்டையைத் தவிர்க்க மாமியார் என்ன செய்ய முடியும் என்பதைஅடுத்த வாரம் பார்ப்போம். ★




## அன்றாட வாழ்வில் கவனிக்கவேண்டியவை

● உங்கள் வீட்டுத் தோட்டத்தில் பூசணி, பறங்கிக் காய், போன்றவை காய்த்திருப்பின் அவற்றை முற்றாக பிடுங்கி எடுக்காது காய்களின் காம்புப்பகுதியை சேதப்படுத்தாது உங்கள் பாவனைக்கு வேண்டியதை மட்டும் வெட்டிஎடுக்கவும். மிகுதியை மரத்துடனேயே விடவும். (இப்படியானவை மரத்துடன் 1 கிழமைக்கு பழுதுபடாமல் இருக்கும்.)

● முழுபூசணிக் காயைப் பிடுங்கி விட்டால் தேவையானவற்றைப் பாவனைக்கு எடுத்துக்கொண்டு மிகுதியை ஒருபேப்பரால் மூடி, அதை வைக்கும் இடத்தைச் சுற்றி சாம்பல் தூவி விடவும். இதனால் எறும்பு, மற்றும் பூச்சிகளில் இருந்து பாதுகாக்கப் படும்.

● வாங்கும் இறைச்சிவகைகள் மெதுவாக இல்லாவிடில் பப்பாளிக்காயில் சில துண்டுகளை வெட்டி இறைச்சியுடன் போட்டு அவித்தால் இறைச்சி மெதுவாக சாப்பிட உகந்ததாக இருக்கும்.

● குத்தரிசி கஞ்சியை எடுத்து அதோடு சீனி அல்லது கருப்பட்டி சேர்த்து சிறிது உப்பு விட்டு தேங்காய்ப் பாலும் சேர்த்து கலந்து குளிரூட்டியில் வைத்துப் பருகலாம். வெப்பமான காலத்திற்கு இது பருக உகந்தது.

— தேவி

# சந்திரகுப்தனின் சாதுரியம்!

நந்தர்கள் மகத நாட்டை ஆட்சி புரிந்த காலம். நந்தர்களிடம் துருக்கி நாட்டு மன்னவன் இரும்பு கூண்டு ஒன்றிற்குள் சிங்கமொன்றை அடைத்து அனுப்பி வைத்தான்.

துருக்கியிலிருந்து அதைச் சில பேர் மகத நாட்டுக்குக் கொண்டு வந்தனர்.

கொண்டு வந்தவர்கள் நேரே அரச சபைக்குச் சென்றனர். அவர்களில் ஒருவன் அரச சபையைப் பார்த்து —

'மன்னர் பெருமானே! அமைச்சர்களே! பெரியோர்களே! வணக்கம். துருக்கியிலிருந்து எங்கள் மன்னர் ஆணைப்படி இங்கு வந்திருக்கிறோம். இதோ பாருங்கள் இந்தக் கூண்டை! இந்தக் கூண்டிற்குள் ஒரு சிங்கம் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இரும்பால் ஆன இந்தக் கூண்டைத் திறக்காமல் அதில் அடைப்பட்டுள்ள சிங்கத்தை வெளியேற்ற வேண்டும். மகதத்தில் அப்படிப்பட்ட புத்திசாலிகள் யாராவது இருக்கிறார்களா என்பதை அறியவே எங்கள் துருக்கி மன்னர் இச் சிங்கத்தை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார்' — என்று பணிவுடன் கூறி முடித்தான்.

நந்த மன்னனும், அமைச்சர்களும் வந்து சிங்கத்தைப் பார்த்தார்கள். சிங்கத்தைக் காவல் புரியும் காவலன் தன் கையில் உள்ள ஒரு கோல் கொண்டு காட்டும் சைகைகளுக்கேற்ப அச்சிங்கம் பாய்ந்தும் நடந்தும் கூண்டுக்குள்ளேயேஉலாவிக் கொண்டிருந்தது.

மன்னனுக்கும் அமைச்சர்களுக்கும் கூண்டைத் திறக்காது சிங்கத்தை வெளியேற்றுவது எப்படி என்பது புரியவில்லை.

கூண்டைத் திறக்காது சிங்கத்தை வெளியேற்றும் புத்திசாலிகள் யாராவது மகத நாட்டில் இருக்கிறார்களா? என்று தங்களுக்குள் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு புரியாமல் விழித்தனர்.

சிங்கத்தை கூண்டோடு திருப்பி அனுப்பவும் அவர்களுக்கு விருப்பமில்லை. அப்படி அனுப்பிவிட்டால் அது மகத நாட்டின் அறிவுக்குத் தோல்வியல்லவா? அந்த இழிவை ஏற்பதற்கும் நந்தர்கள் உள்ளம் இசையவில்லை.

உடனே மன்னன் 'நாளை அரசசபை கூடும்போது, இக் கூண்டுக்குள் இருக்கும் சிங்கம் வெளியேற்றப்படும். நீங்கள் இன்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்'

என்று துருக்கியிலிருந்து வந்தவர்களைப் பார்த்துக் கூறினான். சபை கலைந்தது.

பின்பு மன்னனும், அமைச்சர்களும் ஒன்று கூடி ஆலோசனை செய்தனர். அமைச்சர் ஒருவர்,

'மன்னா! நாளை அரச சபை கூடும்போது சிங்கம் வெளியேற்றப்படும் என்று திடீரென்று அறிவித்து விட்டீர்கள்! அப்படியானால் சிங்கத்தை வெளியேற்றுவது யார்?' என்று மன்னனைப் பார்த்துக் கேட்டார்.

'சந்திரகுப்தன்' என்று டக்கென்று பதில் சொன்னான் மன்னன்.

'சந்திரகுப்தனா?' என்று ஆச்சரியம் பொங்கக் கேட்டனர் அமைச்சர்கள்.

'ஆம்' என்றான் மன்னன். 'மன்னா! நாம் தான் அவனை வஞ்சகமாக சூழ்ச்சி செய்து தற்போது சிறை செய்திருக்கிறோமே' என்றார் அமைச்சர் ஒருவர்.

'அவன் நம் சூழ்ச்சியைத் தெரிந்தும் இதற்கு சம்மதிப்பானா?' என்றார் மற்றொரு அமைச்சர்.

மன்னர் 'அமைச்சர்களே! சந்திரகுப்தன் மிக நுண்ணிய அறிவு கொண்டவன். அவன் ஒருவனால்தான் சிங்கத்தைக் கூண்டிலிருந்து வெளியேற்ற முடியும். நம் மகதத்திற்கு ஏற்பட்ட இழுக்கைப் போக்க முடியும். எனவே அவனை விடுதலை செய்து நம் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழுக்கைப் போக்குவோம்' என்று கூறினான்.

மறுநாள் காலை சந்திரகுப்தன் விடுதலை செய்யப்பட்டான்.

நந்தர்கள் அவனிடம் எல்லா விவரங்களையும் கூறினர். சந்திரகுப்தன் எல்லா விபரங்களையும் தெளிவாகக் கேட்டு விட்டு 'சரி வாருங்கள். சிங்கத்தைக் காண்பியுங்கள்' என்றான்.

சந்திரகுப்தன் சிங்கத்தை எப்படி வெளியேற்றுகிறான் என்பதைப் பார்க்க ஏராளமானவர்கள் கூடியிருந்தனர். சபை கூட்டப்பட்டதும் கூண்டு வரவழைக்கப்பட்டது.

சந்திரகுப்தன் கூண்டருகே வந்து சிங்கத்தை நன்றாக உற்றுப் பார்த்தான். சந்திரகுப்தனின் நுண்ணிய அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தில் அவனுக்கு உண்மை புரிந்து விட்டது.

'ஒரு இரும்புக் கம்பியின் ஒரு முனையை நன்றாகத் தீயில் பழுக்க வைத்து எடுத்து வரச் சொல்லுங்கள்' என்று மன்னனைப் பார்த்துக் கூறினான் சந்திரகுப்தன்.

உடனே மன்னன், சேவகன் ஒருவனைக் கொண்டு வர அனுப்பினான். கொஞ்ச நேரத்தில் சேவகன் காய்ச்சிய கம்பியை சந்திரகுப்தனிடம் கொடுத்தான்.

சந்திரகுப்தன் அக்கம்பியில் தீ இருக்கும் முனையைக் கூண்டுக்கம்பிகளின் இடைவெளியே சிங்கத்தின் மீது செலுத்தினான். உடனே சிங்கம் கொஞ்சம் கொஞ்சமாக உருகி, கரையத் தொடங்கியது. சிறிது நேரத்தில் சிங்கம் முழுவதும் உருகி வெளியே வந்து விட்டது.

கூடியிருந்தவர்களுக்கு ஒரே ஆச்சரியம்! நந்த மன்னன் வியப்பு மேலிட சந்திரகுப்தனிடம் கேட்டான், 'எப்படி வெளியேற்றினீர்கள்?'

சந்திரகுப்தன், 'இந்தக் கூண்டுக்குள் இருப்பது உண்மையான - உயிருள்ள சிங்கமல்ல. இது அரக்காலும் இரும்பாலும் செய்யப்பட்ட சிங்க உருவமாகும். கூண்டுக்கு வெளியே நின்றிருந்த காவலன் கையில் உள்ள கோலில் காந்தம் இருக்கிறது. அரக்காலும் இரும்பாலும் ஆன இந்தச் சிங்கம், காவலன் தன் கையில் உள்ள கோல் கொண்டு இங்குமங்கும் ஆட்டுவதால், காந்தத்தின் காரணமாகத்தான் சிங்கம் அசைவு கொள்கிறது. பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கம்பியினைச் சிங்கத்தின் மீது செலுத்தியதும் அரக்கு முழுவதும் உருகி வெளியே வந்து விட்டது' என்று விளக்கினான்.

இவ்விளக்கத்தைக் கேட்டதும சந்திரகுப்தனின் நுண்ணிய அறிவை எல்லோரும் பாராட்டினார்கள். அவனால் மகத நாட்டின் மானம் காக்கப்பட்டதாய் அவனுக்குப் புகழ்மாலை சூட்டினார்கள்.

(சந்திரகுப்தன் காலத்தில் நடந்த ஒரு உண்மை நிகழ்ச்சியை மையமாக வைத்து, புனையப்பட்டகதை.) ★

## பாடு... சில் வண்டே!

வண்ண வண்ணப் பூக்களை
வட்ட மிட்டு மயக்கும்
சின்னச் சின்ன வண்டுகளே
சிட்டாய் எங்கே பறக்கின்றீர்!

காலை இளம் பூக்களைக்
கவர்ந்து இழுக்கும் வண்டுகளே
தேனை உண்ட களிப்பினிலே
தேம்மாங் கென்ன பாடுகிறீர்!

சோலை எங்கும் பறந்து
பூவைச் சுற்றி அலையும்
வேலை ஒன்றே தான் உனதோ
வேறும் தொழிலும் உனக்குண்டோ?

பொன்னைப் போலும் உடலில்
மின்னும் ஆடை போர்த்து
வண்ணக் கோலம் காட்டும்
வண்டே பாட்டுப் பாடன்

வான வீதி தனிலே
வலம் வரும் சில் வண்டே
நானும் கேட்பேன் உன்பாடல்
நீயும் பாடன் சில்... லென்று.

— நெடுந்தீவு லக்ஷ்மன்.




# எண்ணி முட்டையிடும் பறவைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### முட்டைகளின் எண்ணிக்கை

பறவைகட்கு பறவை முட்டைகளின் எண்ணிக்கை மாறுபடும். முட்டைகளின் எண்ணிக்கை குஞ்சுகளின் தப்பிப் பிழைக்கும் ஆற்றலை - மறுதலையாகச் சொல்வதாயின் குஞ்சுகளின் அழிவைப் பொறுத்து, வேறுபடும்!

பாதுகாப்பற்ற சிறிய புதர்களில் கூடுகள் அமைத்து முட்டையிடும், கானான் கோழி, காட்டுக்கோழி, வாத்து ஆகியவற்றின் முட்டைகள், பாம்பு, கீரி போன்ற எதிரிகளால் அழியக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம்.

மேலும் இப்பறவைகளின் குஞ்சுகள் முட்டையினால் வெளிவந்ததும் தாமே சுயமாக உலாவித் திரிவதால் இவை எதிரிகளால் தாக்கப்படும் நிகழ்தகவும் அதிகமாக இருக்கிறது.

எனவே இப்பறவைகளின் சந்ததி அழியாமல் பாதுகாக்கப்படவேண்டுமாயின் இவை அதிகளவில் உற்பத்தியாக வேண்டும். இதற்காகவே இவை அதிகளவு முட்டைகளை இடுகின்றன.

காட்டுவாத்து 15–20 முட்டைகளை இடுகிறது.

கானான்கோழி 5-8 முட்டைகளை இடுகிறது.

ஆனால் பாதுகாப்பான இடங்களில் கூடுகட்டி வாழும் கிளி, மைனா, பருந்து போன்றவைவற்றின் முட்டைகட்கு எதிரிகளால் ஏற்படும் சேதம் மிகக்குறைவு. எனவே இவை பொதுவாக இரண்டு முட்டையே இடுகின்றன.

இங்கே நாம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கொப்ப இயற்கையின் உயிரினவியல் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பார்க்கலாம்.

பாதுகாப்பற்ற இடங்களில் கூடுகட்டுவனவும்; எதிரிகளால் அதிகம் வேட்டையாடப்படுபவையுமான வாத்து; கானான்கோழி போன்ற பறவைகளை இயற்கை அதிகளவு முட்டை இடச் செய்கிறது. இவை அதிகளவு முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தாலும், எதிரிகளால் வேட்டையாடப்படுவன போக மிஞ்சுவது இரண்டு அல்லது மூன்று தான்.

அதிகளவு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவைகளின் குஞ்சுகள், பொரித்த சில மணிகளில் தாமாக இரைதேடப் புறப்பட்டுவிடுகின்றன. எனவே இவற்றிற்கு பெற்றோர் பறவைகள் உணவூட்டவேண்டிய அவசியமில்லை. உணவு இருக்கும் இடத்தைக் காட்டிவிட்டால் மட்டும் போதுமானது.

ஆனால் ஆணும் பெண்ணுமான ஒரு சோடி மைனாக்கள் தமது இரண்டே இரண்டு குஞ்சுகட்கு உணவூட்டுதலிலேயே தமது 4/5 பங்கு நாள் பொழுதைக் கழிக்கின்றன.

இத்தகைய மைனாப் பட்சி ஒன்று 8 முட்டைகள் இட்டுக் குஞ்சு பொரித்தால் அதன் கதி என்னவாகும் என்பதை சிறிது கற்பனை பண்ணிப் பாருங்கள்!

பறவைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த இயற்கை இன்னுமோர் வினோதம் செய்கிறது!

பூபிஸ், ஸ்டுவாஸ் போன்ற பறவைகளை இரண்டு முட்டைகளை இடும்படி இயற்கை ஆணையிடுகிறது!

ஒரு அடைகாத்தலின் போது ஒரு குஞ்சுதான் உற்பத்தியாகவேண்டும் என்பது இயற்கையின் மற்றோர் கட்டளை! ஒரு முட்டை எதிரிகளால் களவாடப்பட்டாலோ அன்றேல் வேறு காரணங்களால் பொரிக்க முடியாமல் போய்விட்டாலோமற்றையதுபொரித்து சந்ததி தளைப்பதற்காகவே மற்றோர் முட்டை!

தற்சமயம் இரண்டு முட்டைகளுமே பொரித்துவிட்டால், தாய்ப்பறவை ஒரு குஞ்சை தின்றுவிட்டுமற்றைய குஞ்சை மட்டுமே வளர்த்து இயற்கையின் விதிப்படி நடக்கிறது.

### முட்டையிடும் தன்மை

பொதுவாக பறவைகள் காலை வேளையிலேயே முட்டை இடுகின்றன. ஆனால் குயில், தேன்வளி காட்டுக்குருவி, மூர்ஸ் போன்ற பிற பறவைகளின் கூடுகளில் முட்டையிடும் பறவைகட்கு முட்டையிடும் நேரம் என்று ஒன்று இருப்பதில்லை!

தமது விருந்தோம்பல் பறவை கூட்டைவிட்டு வெளியேறும்வரை காத்திருந்து இவை முட்டையிடுகின்றன.

மேலும் பறவைகளின் முட்டையிடும் தன்மை நிறுத்தப்படக் கூடியதும், தொடரப்படக் கூடியதுமான ஓர் ஆச்சரியமான சம்பவமாக திகழ்கிறது!

நமது வீடுகளில் வாழும் சிட்டுக்குருவி பொதுவாக இரண்டு முட்டைகளையே இட்டுக் குஞ்சு பொரிக்கும்!

இந்த இரண்டில் ஒரு முட்டையை பெற்றோர் பறவை காணாத நேரத்தில் எடுத்து விடுங்கள்! இரண்டொரு நாளில் இன்னோர் முட்டை இடப்பட்டிருக்கும்! இதையும் அகற்றிவிடுங்கள்! மீண்டும் இன்னோர் முட்டை இடப்பட்டிருக்கும்!

இதில் இருந்து என்ன தெரிகிறது? பறவைகள் முட்டையிடும் அளவை நிறுத்தவும் தொடரவும் கூடிய தன்மையைக் கொண்டுள்ளன. இவ்வியல்பு பறவைகட்கு மட்டுமே உள்ள சிறப்பியல்பாகும்! (முற்றும்)

- வடகோவை வரதராஜன் -

## அறிவியல் வினா-விடை

● தென்னை மரத்தில் ஆண் மரம் உண்டா? இல்லையா?

தென்னை இருபால் மரமாகும்.

பனையைப்போல் ஆண் மரம் தனியாக இல்லை. ஆண், பெண்பால் பூக்களும் ஒருமரத்தில்உண்டாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாப் பாடலை எழுதுவதால் சிறந்த கவிஞராக முடியுமா?

பேட்டி:
## கவிஞர் மு. மேத்தா

மு. மேத்தா-இலக்கிய ரசிகர்களுக்கு நெருக்கமான பெயர் இது.

தனது கண்ணீர்ப் பூக்களின் மூலம் பலரது விழிப்பூக்களை வியப்பால் விரிய வைத்த இந்த 'எளிய' கவிஞரை அவரது இல்லத்தில் சந்தித்தபோது......

● மக்களுக்கு அதிகமாகத் தெரிந்தவர்கள் கவிஞர்களா? சினிமாப் பாடலாசிரியர்களா?

எங்கள் மக்களுக்கு கம்பனைத் தெரியாது. கண்ணதாசனைத் தெரியும். வள்ளுவனைத் தெரியாது. வாலியைத் தெரியும். இது வரவேற்கத்தக்க போக்கல்ல!


மு. மேத்தா

திரைப்படப்பாடல் என்பது ஒரு சிறந்த வடிவம் என்பதையோ, லட்சக்கணக்கான மக்களிடம் உடனடியாகச்சென்று சேரக் கூடிய சாதனம் என்பதையோ யாரும் மறுக்க முடியாது.

திரைப்படப்பாடல் ஆசிரியனுக்கு ஒரு சிறந்த நாற்காலி உண்டு.

அதற்காக சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த இலக்கிய சிம்மாசனங்களை எல்லாம் விளம்பர நாற்காலிகளில் வீற்றிருக்கும் பாடலாசிரியனுக்குத் தத்தம் செய்வதை யாரும் ஒத்துக்கொள்ள முடியாது. பாடல் ஆசிரியன்மீது இருக்கிற வெறுப்பினால் நான் இதைச் சொல்லவில்லை. ஏனென்றால் நானும் பாடல் ஆசிரியனாகப் பணியாற்றுகின்றவனே!

கேரளத்திலும், வங்கத்திலும் மக்கள் பக்குவமாக இதைப் பாகுபடுத்திப் பார்க்கிறார்கள்.

தமிழகத்தில்தான் பகுத்து உணரக் கூடிய பார்வை இல்லாமல் இருக்கிறது.

இங்கே ஒரு சிறந்த கவிஞன் திரைப்படத்தில் எழுதாவிட்டால் அவனுடைய அற்புதமான கவிதைகள் அறிமுகமாகாமல் போகின்றன. ஆனால் ஒரு சுமாரான பாடலாசிரியன் திரைப்படத்தில் வெற்றிபெற்றுவிட்டால், அவனுயடை குப்பைகள் கூடக் கொலுவேறி விடுகின்றன.

கவிஞர்கள் திரைப்படத்தில் எழுதலாம். ஆனால் திரைப்படத்தில் எழுதுபவர்கள்எல்லாம் கவிஞர்கள் அல்ல.


இளையராஜா

☐ திரைப்படத்தில் பாடலுக்கு முக்கியத்துவமா? இசைக்கு முக்கியத்துவமா?

தொடக்க காலத்தில் பாடல்களுக்கு முக்கியத்துவம் இருந்தது. இடைக்காலத்தில் இசையும் பாடலும் சமபங்கு பெற்றன. தற்போது இசையே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

இளையராஜாவின் இசையில் பாடல்கள் இருந்தால் குட்ஸ் வண்டிப் படங்களும் கோவை எக்ஸ்பிரஸ் ஆகிக் கொடி உயர்த்துகின்றன.

எழுதுபவர் யார் என்பது பற்றிய கேள்வியே இல்லாமல் செய்துவிட்டார் அவர்.

● கண்ணதாசனுக்குப் பிறகு நல்ல சினிமாக் கவிஞர் உருவாகவில்லை என்ற புகாருக்கு உங்கள் பதில் என்ன?

கண்ணதாசனுக்குக் கிடைத்த கதைச் சூழல்களும், அவருக்குக் கிடைத்த முழுமையான வாய்ப்புகளும், அவரைப் பேச வைத்த பின்னணியும் இன்றைக்கு எழுதிக்கொண்டிருக்கும் எல்லாருக்கும் அமையவில்லை.

ஆனால் கண்ணதாசனுடைய காலத்திலேயே சிறப்பாக எழுதியிருக்கிறார் வாலி.

'கண்போன போக்கிலே கால்போகலாமா?' – 'கடல் நீர் நடுவே பயணம் போனால் குடிநீர் தருபவர் யாரோ?' – என்பது போன்ற சிறப்பான பாடல்களை அவர் எழுதியிருக்கிறார்.

தற்போது எழுதிக்கொண்டிருக்கும் கவிஞர்களுக்கு வாய்ப்புக்கள் முழுமையாக வழங்கப்படும்போது நீங்களும் துலாக்கோலைக்கையில் தூக்கிக்கொள்ளலாம்.

● நீங்கள் சினிமாவில் சாதித்தது என்ன?

சாதித்தேன் என்று சொல்லிக் கொள்ள இதுவரை எதுவுமில்லை.

ஆனால் திரைப்படத்துறையில் ஒருவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான எடுத்துக் காட்டாய் நான் இருந்தேன். இருக்கிறேன்.

காக்காய் பிடிக்காமல் ஒருவன் காலந்தள்ள முடியாது என்றுகூறினார்கள். ஓங்கிஅந்த இலக்கணத்தை உடைத்திருக்கிறேன்.


கண்ணதாசன்

கர்வம் இல்லாமல் பெருமை பேசாமல் ஒருவன் பிரகாசிக்கமுடியாது என்றார்கள்.

அந்த தர்பாரை என் எளிமையால் தகர்த்திருக்கிறேன்.

பொய்யில்லாமல் நடமாட முடியாது என்றார்கள். என்உண்மைகளால் நான் அதை ஒழித்துக் கட்டியிருக்கிறேன்.

இதனால் திரைப்படத் துறையில் இருப்பவர்கள் எல்லாம் திருந்திவிடுவார்கள் என்று நிச்சயமாக நான் நினைக்கவில்லை.

அந்தக் கடலில் நான் ஓர் அலை அவ்வளவுதான்.

ஆனால் எனக்குப் பின்னால் வருகிற இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவனாக நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

● நீங்கள் மற்றவர்களோடு ஒத்துப் போகாத ஒரு பாடலாசிரியர் என்று கூடச் சிலர் சொல்கிறார்களே!

மிக மிக எளிமையானவன். வாழை மரத்தைப் போலவே எட்டும் தொலைவில் இருப்பவன். ஏமாற்றாதவன். என் தொழிலின் மீது சிரத்தைக் கொண்டவன்.

கவிதை என்பது, ஒரு கவிஞனின் சுதந்திர மலர்ச்சி!

என் அடக்கத்தின் மீது யாராவது அகங்காரத்தைப் பிரயோகிப் பார்களேயானால் நான் கொதித்து எழுவேன்.

வாய்ப்புகளுக்காக வலை வீசத் தெரியாதவன் — எதை வேண்டுமானாலும் விலை பேசத் தெரியாதவன் என்று வேண்டுமானால் என்னைக் குற்றஞ் சாட்டலாம். வேறு எந்த வகையிலும் என்னைக்குறை சொல்ல முடியுமா?

(எ-4)

# "சீர்காழி"யின் மகன் சிவசிதம்பரம் யாரிடம் இசை பயின்றார்?

பிரபல சங்கீத வித்வானும் பின்னணிப் பாடகருமான மறைந்த சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வர் சீர்காழி சிவசிதம்பரம்.

தந்தையைப் போன்று இன்று சீர்காழி சிவசிதம்பரமும் இசைத்துறையில் கொடி கட்டிப் பறக்கிறார்.

டாக்டர் தொழில் பார்க்கும் சீர்காழி சிவசிதம்பரத்திற்கு கர்நாடக சங்கீதத்தைபோதித்த குரு யார் தெரியுமா?

நிச்சயமாக அவரது தந்தை சீர்காழி கோவிந்தராஜன்அல்லர்.

திரு. சிவசிதம்பரமே கூறுவதை வாசியுங்கள்;

● கர்நாடக சங்கீதத்தைப் பொறுத்தவரை உங்கள் குரு அப்பா தானே?

'இல்லை. அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

24-3-88 வரை அதாவது அப்பாவின் இறுதி மூச்சுவரை அவர் பிஸியாகவே இருந்ததால் அப்பாவிடமிருந்து சங்கீதத்தைக் கற்கும் அரும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

இந்த விஷயத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மற்றும் சென்னை தமிழிசைச் சங்க மாணவர்கள் என்னை விட எவ்வளவோ கொடுத்து வைத்தவர்கள்.

சங்கீதவித்வான் பி. ராஜம் ஐயரின் சகோதரரும் கர்நாடக அரசு இசைக் கல்லூரியின் முதல்வருமான பி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அப்பாவிடம் ஆழ்ந்த பாசம் கொண்டவர்கள். ஆத்ம நண்பர்!

எனது 10 ஆவது வயதிலிருந்து அவரிடமே சங்கீதத்தைக் கற்று வருவதனால் அவரே என் குரு. ★

"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச் செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை
ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம் உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | – | 17% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ச. கருணரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண.
A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி. B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்
இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.
61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER

# நிகழ்வின் அத்திவாரம் நம்பிக்கையே

எப்பொழுதும் புதிய தொரு விடயத்தைத்தொடங்கும் பொழுது, எவரும் ஒரு நம்பிக்கையுடன் தான் தொடங்குகின்றனர்.

ஆமாம், நம்பிக்கை என்பது மிக மிக முக்கியமானது. ஏனெனில், நம்பிக்கையின்றி எந்தவொரு நன்மையும் நடைபெறுவதில்லை.

ஏனெனில், உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் எழும் ஒரு 'நம்பிக்கைத்துளிதான்'

**யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'நான்' உளவியல் மஞ்சரியின் 16ஆம் ஆண்டு சிறப்புமலரில் இருந்து ஒரு கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

ஒரு நிகழ்வின் தொடக்கம் என்பதே உண்மை.

நம்பிக்கையே ஊக்கத்தின் அடித்தளம், நிகழ்வின் அத்திவாரம்.

எனவே, நம்பிக்கையைப் பற்றிச் சற்றுச் சிந்தனை செய்வோம். ஏனெனில் நம்பிக்கையே நம் அன்றாட வாழ்வின் அடித்தளமாய் அமைந்து, ஓடமாய் மாறிக் கலங்கரை விளக்கமாய்த் திகழ்வது.

எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலம், எல்லாக் காலங்களினதும் உணர்வாய்த்திகழ்வதும் நம்பிக்கையே.

நம்பிக்கை என்பதற்குப் பொதுவாக, அகராதி தரும் அர்த்தம் என்ன? நாம் எண்ணிய ஒன்றை எதிர்பார்த்திருப்பது, இந்த எதிர்பார்ப்பு நம் உள்ளத்தில் எழாவிட்டால் நாம் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் இறங்க மாட்டோம். இல்லையா?

**நம்பிக்கைக்கு விளக்கம்**

டாண்டே (Dante) என்ற அறிஞர், நம்பிக்கைக்கு நல்ல விளக்கம் கொடுத்துள்ளார். நிச்சயமாய் நிறைவேறும் என்ற மனத்துடன் எதிர்பார்த்திருப்பது என்கிறார் அவர்.

நம்பிக்கை என்பது 'சும்மா' விரும்புவது அல்லது எதிர்பார்ப்பது மட்டுமில்லை என்கிறார் அவர். அதைவிட ஒரு படி மேலானது என்பதையே அவர் விளக்குகிறார்.

'நிச்சயம்' என்ற ஓர் உள்ளார்ந்த எண்ணம் எழவேண்டும்.

நடைபெற்ற நலமான ஒன்றில் மனதை ஊன்றி வளமான ஒன்றில் எண்ணத்தை ஏற்றி, நினைத்தது நடைபெறும் என்னும் சிந்தனையுடன் செயற்படலே 'நம்பிக்கை' என்னும் நற்பண்பு.

'நம்பிக்கை' எப்பொழுதும் மக்களிடமுள்ள நல்லவைகளையே நாடுகின்றது.

என்றும் அது தீமை, தேவையற்றவை, பிழையானவை போன்றவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்காது. அவைகளிலிருந்து விடுபடவே முயற்சிக்கும்.

நம்பிக்கை, எது செய்யப்பட வேண்டும், எது செய்யப்பட முடியும் என்பது பற்றி ஆராய்ந்து வழிகாட்டும்.

நடந்து முடிந்த நல்லவையற்றவை பற்றியே நாளாந்தம் எண்ணிக் கொண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

'நம்பிக்கை' மெழுகுவர்த்திகளில் ஒளியேற வைக்கிறதே ஒழிய, இருளை சபித்துக் கொண்டிருப்பதில்லை.

நல்லவைகளைச் செய்யத் தூண்டுமேயொழிய, தோல்விகளைப்பற்றி எண்ணித் துவள விடாது.

'நம்பிக்கை' ஒருவர் மனந் தளர்ந்து, இனி நமக்கு இது ஒத்துவராது கைவிட வேண்டியது தான், என்று எண்ணி தோல்வி மனப்பான்மையில் தத்தளிக்கும் பொழுது அவர் உள்ளத்தில் புகுந்து உற்சாகமூட்டி, நல்லதைச்செய்வதற்கு நல்லுணர்வு ஊட்டுகிறது.

**ஞாயிற்றின் ஒளி**

தோல்வியும், துன்பமும், துவளலும், உள்ளக் கதவுகளை மூடும் பொழுது, நம்பிக்கை நல்ல உள்ளக்கதவுகளைத் திறந்து ஞாயிற்றின் ஒளியைப் பாய்ச்சுகின்றது.

நம்பிக்கை, உள்ளம் உடைந்திருக்கும் பொழுது கூட, உற்சாகமூட்டி உந்து சக்தியாய் அமைகின்றது.

நம்பிக்கை எந்தவொரு பாரிய தோல்வியையும் கூட மனோதைரியத்துடனும், மகத்தான விசுவாசத்துடனும், ஏற்றுக் கொண்டு, ஏற்ற பிரதி நடவடிக்கைகளைச் செய்கின்றது.

இவ்வளவு, நல்லியல்பு, நற்பண்புகளை உள்ளடக்கிய தாயுள்ள 'நம்பிக்கை'யை நாம் இருகைநீட்டி வரவேற்று ஏற்க வேண்டியது நம் கடமையல்லவா?

புதிய ஆண்டு பூத்துக்குலுங்கும் இவ்வேளையில் நம்பிக்கையை, நம் உள்ளத்துக்குள் வரவேற்பது ஏற்புடையதல்லவா?

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள். அவ்வாறு செய்வீர்கள் என்ற தன்னம்பிக்கை என் உள்ளத்தில் எழுகிறது.

**நன்றி: 'நான்'**

**- ஏ. வி. பி. கோமஸ் -**

# ஊனமுற்றோருக்கு கைகொடுக்கும் நவீன கொம்பியூட்டர் சாதனங்கள்

ஊனமுற்றோருக்கு உதவக் கூடிய பிரத்தியேகமான கொம்பியூட்டர் சாதனங்கள் பலவற்றை அமெரிக்காவிலுள்ள கொம்பியூட்டர் நிறுவனங்கள் தயாரிக்கத் துவங்கியுள்ளன.

உலகில் ஊனமுற்றோரில் பல லட்சம் பேர் இச் சாதனங்களால் பயன் பெற முடியும்.

பெரிய அளவிலான கீ–போர்டுகள் கொண்ட கொம்பியூட்டர்கள், ஊனமுற்றோரின் தலையில் பொருத்தப்படும் ஒளிக்குமிழைக் கொண்டு இயங்கக் கூடிய கொம்பியூட்டர்கள், கூப்பிட்ட குரலுக்குப் பதில் கொடுக்கும் கொம்பியூட்டர்கள் என்று பல வகையான கொம்பியூட்டர்கள் விற்பனைக்கு வந்து விட்டன.

ஊனமுள்ள ஒருவர் உடலிலுள்ள ஏதாவது ஒரே ஒரு தசையை மட்டும் அசைக்க முடிந்தால் போதும், அந்த ஆற்றலைக் கொண்டே ஒரு கொம்பியூட்டரை அவர் இயக்கிவிடலாம். 'புருவத்தை ஏற்றி இறக்குவதன் மூலம் கூட அவரால் ஒரு கொம்பியூட்டரை இயக்கிவிட முடியும்', என்கிறார் ஊனமுற்றோருக்கு உதவும் நிலையத்தைச் சேர்ந்த வல்லுநரான மேரி பாட்ராதாபாக்.

அமெரிக்காவில் ஜார்ஜியா மாநிலத்திலுள்ள அட்லாண்டா நகரில், அமெரிக்க அரசுக்குச் சொந்தமான இந்த நிலையம் இயங்கி வருகிறது.

ஊனமுற்றோரின் பலவீனங்களை அறிந்து, அதற்கு ஏற்ற வகையில் கொம்பியூட்டர்கள் வடிவமைக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஊனமுற்றவர்கள் மற்றவர்களைச் சார்ந்து இராமல் சுதந்திரமாக இயங்குவதற்கு இத்தகைய கொம்பியூட்டர்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று அவர் சொன்னார்.

சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கிற அல்லது கட்டிலில் படுத்த படுக்கையாக உள்ளவர். வானொலிப் பெட்டியை, தொலைபேசியை, தொலைக்காட்சிப் பெட்டியை, குளிர் சாதன இயந்திரத்தை அல்லது வேறு எந்தவிதமான மின்னணு சாதனத்தையும் இயக்குவதற்குத் துணை புரியக் கூடிய மைக்ரோ கொம்பியூட்டர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொம்பியூட்டருடன் இணைக்கப்பட்டுள்ள சில சிறப்புச் சாதனங்களை இயக்குவதன் மூலம் இந்தச் செயல்களை எல்லாம் அவர்கள் சுலபமாகச் செய்ய முடியும் என்று ராதாபாக் கூறினார்.

**பேசும் கொம்பியூட்டர்**

பேச முடியாதவர்கள் பேசுவதற்குத் துணை புரியக்கூடிய அதிசயக் கொம்பியூட்டர் ஒன்றை ஒஹியோவிலுள்ள ப்ரென்கே ரோமிக் (Pronke – Romich) நிறுவனம் உருவாக்கி இருக்கிறது.

இந்தக் கொம்பியூட்டருக்கு 'டச்' ரோக்கர் (Touch Talker) என்று பெயரிடப்பட்டுள்ளது.

பேசமுடியாத நபர், தாம் பேச விரும்பும் சொற்களை இந்தக் கொம்பியூட்டரில் உள்ள கீ–போர்ட்டில் டைப் செய்தால், இந்தக் கொம்பியூட்டருடன் இணைக்கப்பட்டுள்ள வாய்ஸ் சிந்னதஸர் (Voice Synthesiar) சாதனம், அவற்றை ஒலியாக மாற்றிக் குரலெழுப்புகிறது.

ஊனமுற்றோரின் தேவைகளுக்கு ஏற்ற கொம்பியூட்டர் சாதனங்களை உருவாக்குவதற்காக வே. ஐ. பி. எம். நிறுவனம் தனிப் பிரிவு ஒன்றை இரு ஆண்டுகளுக்கு முன்பு நிறுவியது.

'ஸ்கிரீன் ரீடர்' (Screen Reader) என்னும் புதிய சாதனத்தை இந்தப் பிரிவு அண்மையில் வடிவமைத்துள்ளது.

பார்வையற்றோருக்கு உதவும் சாதனம் இது. கொம்பியூட்டர் திரையில் தோன்றும் வாக்கியங்களையும், எண்களையும் அப்படியே இந்தச் சாதனம் படித்துக் காட்டுகிறது. எவ்வளவு படிக்கவேண்டும், எந்த வேகத்தில் படிக்க வேண்டும் என்பதை: இந்தச் சாதனத்தை இயக்குகின்ற பார்வையற்ற நபர் தமது விருப்பப்படி கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். ★

# பண்பு

அதிகாலைப் பனிக்குளிருக்குச் சுடச்சுடக் கோப்பி குடிக்க வேண்டும் அவனுக்கு, வீட்டிலே நேற்று முழுவதுமாக முடிந்துவிட்டது கோப்பித்தூள்; அவன் மனைவி தேனீரைத் தயார் செய்த போது இவனுக்கு வயிற்றைப் புரட்டியது.

அவனுக்கு அது ஒத்து வராது. கடைகள் திறக்க நேரமாகும். அதுவும் அரை மைல் தூரம் போக வேணும். சற்றுத் தொலைவில் ஒரு தேநீர்க்கடை இருப்பது நினைவுக்கு வந்தது.

அங்கு ஒருவேளை கோப்பித்தூள் இருக்குமோ?......... நப்பாசையுடன் நடந்தான்.

அப்போது தான் கடையைத் திறந்து கொண்டிருந்தார் கடைக்காரர். அவன் தயக்கத்துடன் சற்று எட்டத்தில் நின்றான். கடைக்காரர் அவன் தயங்கி நிற்பதைப் பார்த்து விட்டு,

'என்ன தம்பி வேணும்?' என்று கேட்டார். அவன் கடைக்குள் மெல்ல நுழைந்து சுற்றும் முற்றும் பார்த்தான்.

'கோப்பித்தூள் இருக்கிறதா?' என்று தயக்கத்துடன் கேட்டான். கடைக்காரர் முகம் சுருங்கியது.

'இல்லை டீ போட்டுத் தரவோ?' — அவரது சங்கடம் அவனுக்குப் புரிந்தது. கடையில் விற்பனைக்குரிய பொருள் வேறொன்றுமில்லை. சிகரெட் பக்கட் தெரிந்தது.

'ஒரு சிகரெட் தாங்கோ' - சில்லறையைக் கொடுத்தான்.

அவனைக் கடைக்காரருக்கு நன்கு தெரியும். அவன் சிகரெட் புகைப்பதில்லை.

'ஓம் தம்பியும் தொடங்கி விட்டார் போல' என்று தனக்குள் நினைத்துச் சிரித்தபடி சிகரெட்டைக் கொடுத்தார்.

கடையை விட்டுச் சிறிது தூரம் நடந்தபின் திரும்பிப் பார்த்து விட்டுச் சிகரெட்டை வீசி எறிந்து விட்டு மெல்ல நடந்தான் அவன்.

கடைக்காரருக்கு முதல் வாடிக்கையாக 'நான் போய் முதல் வியாபாரமே இல்லை என்று ஆகக்கூடாது' என அவன் நினைத்தது கடைக்காரருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ★

**- கோப்பாய் சிவம் -**

**குறுக்கதை**

**வைத்திய சஞ்சீவி**

# புதியரக காய்ச்சலைப் பரப்பும் புதிய வகை நுளம்பு

புதிய ரகக் காய்ச்சல் ஒன்று கொழும்பு மாநகரிலும் ஏனைய மாகாணங்களிலும் வேகமாகப் பரவி வருவதாக எச்சரிக்கை செய்யப்படுகிறது.

'ஏடஸ்' (Aedes) என்ற புதிய வகை நுளம்பு தான் இக்காய்ச்சல் பரவக் காரணம் என்று கொழும்பு வைத்திய ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டாக்டர் திஸ்ஸ வித்தாரண எச்சரித்துள்ளார். இப் புதிய காய்ச்சல் 3 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளைத்தான் தாக்குகின்றன.

இக் காய்ச்சலின் அறிகுறிகள் வருமாறு;

காய்ச்சல் 4 முதல் 7 நாட்கள் வரை நீடிக்கின்றது.

உடல் நோவு, உளைவு, கண்ணின் வெள்ளைப் பகுதியில் கறுப்புப் புள்ளி ஏற்படுவது, மூக்கில் இருந்து இரத்தம் கசிவது, தோலில் இருந்து இரத்தம் கசிவது.

குழந்தைக்கு குறைந்தளவு இரத்த அமுக்கமே அதிர்ச்சியும் ஏற்படுகிறது. குழந்தையை உடனடியாக மருத்துவ மனையில் அனுமதிக்க வேண்டும். இல்லையேல் மரணம் ஏற்படும்.

இப்படி டாக்டர் திஸ்ஸ வித்தாரண எச்சரிக்கிறார்.

இக் காய்சலைக் கொண்டு வரும் நுளம்பு 'ஏடஸ்' தேங்கிய நீரில் உற்பத்தியாகின்றன.

வளவுகளில் கழித்து விடப்பட்டுள்ள டயர், தகரடப்பாக்கள், கொள்கலன்களில் தேங்கி நிற்கும் நீர், இந்த நுளம்பின் பிறப்பிடமாக அமைகிறது.

இதுபோன்ற நுளம்புகள் தான் ஆபிரிக்கக் கண்டம், பொலிவியா, ஆர்ஜென்ரீனா, ஆசியப் பிராந்தியத்தில் தாய்லாந்து போன்ற நாடுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகளைப் பலி எடுத்துள்ளன.

வளவுகளில் தண்ணீர் தேங்கி நிற்காமல் துப்பரவாக வைத்துக் கொள்ளுவதே இக் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கையாகும்.

# நானே நல்ல மேய்ப்பன்

கர்த்தராகிய இயேசு சொன்னார்: பரலோக ராச்சியம் கடலிலே போடப்பட்டு சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக் கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. வலை நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள்.

இது போலவே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதுவர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவில் இருந்து பொல்லாதவர்களைப் பிரித்து அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாகும்.

மத்தேயு 13:47-50

சீஷனாக யோவான் எழுதிவார், நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதன்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்.

மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும், கண்டேன். அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுத்தகம் என்னும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது.

அந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள். ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

வெளிப்படுத்தல் 20:11,12:15



குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது.

யோவான் 6:40

நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். யோவான் 10:9

நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

யோவான் 10:11

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.

சங்கீதம் 116:13

# தொழுகையால் ஏற்படும் சிறப்புக்கள்

★ இரணத்தைக் கொண்டு வந்து சேர்க்கிறது.
★ உடல்நலத்தைப் பாதுகாக்கிறது.
★ வியாதிகளைத் தீர்த்து வைக்கிறது.
★ இதயத்துக்குச் சக்தி அளிக்கிறது.
★ முகத்தை அழகாகவும், ஒளியுள்ளதாகவும் ஆக்குகிறது.
★ உறுப்புகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது.
★ சோம்பலைப் போக்குகிறது.
★ மனத்தை விரிவுபடுத்துகிறது.
★ உயிருக்கு உணவாக ஆகிறது.
★ உள்ளத்தைப் பிரகாசமுடையதாய் ஆக்குகிறது.
★ இறைவனது அருட்கொடைகளைப் பாதுகாக்கிறது.

- ஹாபிஸ் இப்னுல் கய்யில் (ரஹ்)

**பெருமானாரின் கடுமையான எச்சரிக்கை!**

★ நீங்கள் துண்டம் துண்டமாக வெட்டப்பட்டாலும் நெருப்பிலிட்டுப் பொசுக்கப்பட்டாலும், தூக்கிலேற்றப்பட்டாலும் – எந்த நிலையிலும் இறைவனுக்கு இணை வைக்காதீர்கள்!

★ நீங்களறிய எந்தத் தொழுகையையும் விட்டு விடாதீர்கள்; தொழுகையை விட்டவர் நமது மார்க்கத்தை விட்டும் நீங்கியவராவார்!

★ எந்தப் பாவமும் புரியாதீர்கள்; அது அல்லாஹ்வின் கோபத்திற்குக் காரணமாகும்!


★ மது அருந்தாதீர்கள்; அது எல்லாப் பாவங்களுக்கும் தலையாகும்!

— நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்



**- தொகுப்பு: ஜனாபா ஸீனதுல் முனவ்வரா -**

# சொற்சிலம்பம்



சொற்சிலம்பம் இல: 110
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

## போட்டி இல: 110

**இடமிருந்து வலம்:**

1. நீரில் மலரும் பூ 4. எருமைக்கு இது பிடிக்கும் 6. பக்குவம் 7. இது இறைவனால் கொடுக்கப்படுவது 8. இது செய்தித் தாள்களில் வருவது 10. ''அழகு'' மாறிவிட்டது 12. ''வலிமை'' ஒரு சொல் குறைந்து இருக்கிறது. 13. பல்கலைக்கழகங்களில் ஒன்று இங்கும் உண்டு. 16. பாம்பு 18. இலக்குமி தேவி 20. மீனாட்சி அம்மனுக்குப் பிடித்த இடம் 23. ஒரு நாட்டின் தலை நகரம் ஒரு எழுத்து இன்றி மாறி உள்ளது. 24. கொடு 25. நெல்லின் கோது 26. பழையது.

**மேலிருந்து கீழ்:**

1. வஞ்சகம் 2. வெறி 3. பெண்களின் காலணிக்கு முதல் எழுத்து இல்லை 4. மலர்களைத் தொடுத்தால் வருவது இது 5. பிள்ளையாருக்குரிய மந்திரங்களில் ஒன்று 7. காடு 9. வினவு 11. உருவம் இல்லாதது 12. கூட்டம் 14. பரி 15. ''கிருபை'' ஒரு எழுத்தை இழந்து குழம்பி விட்டது 16. கதியற்றவர் 17. ''ஆரவாரம்'' தலைகீழாகி விட்டது. 19. இறந்த உடல்களைப் பாதுகாத்து வைப்பது 21. சொட்டு 23. இரவு.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**முடிவு திகதி: 28 - 03 - 1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை ஆற்றலை வளர்க்கும் சனிபகவான்

# சொந்த வீட்டிற்கு மார்ச் 19 இல் செல்கிறார்

தனுர் ராசியில் இருக்கும் சனிபகவான் எதிர்வரும் 19 ஆம் திகதி (நாளை மறுநாள்) திங்கட்கிழமை தனுர் ராசியை விட்டு நீங்கித் தனது சொந்த (ஆட்சி) வீடான மகர ராசியில் பிரவேசிக்கப்போகிறார்.

பிறக்கும்போது ஒருவருக்கு எத்தனையாம் வீட்டில் சனி இருந்ததோ அதற்கான பலன்கள் இம்முறை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. திருக்கணித முறைப்படி, சனிமாற்றம் காரணமாக ஏற்படும் ராசிவாரியான பலன்கள் அடுத்த வாரம் பிரசுரமாகும்.

உதயன் நிறுவனத்திலிருந்து வெளிவரும் 'ஜோதிட ஜோதி' பெப் - மார்ச் மாத சஞ்சிகையில் சனிமாற்றம் பற்றிப் பிரசுரமான கட்டுரையின் சிலபகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளது.

சனி எல்லையில்லாத மிகவும் சூட்சுமமான சக்தி உடைய கிரகம். மற்றக் கிரகங்களிலும் பார்க்க சனிக்குச் சில சிறப்புத்தன்மைகள் உண்டு.

சனிபகவான் சூரியாம்சம் உடையவர்எனவே வாழ்க்கை ஒளி பெற மனப்பூர்வமான பக்தியுடன் இவரை அணுகுபவர் உரியபடி நன்மை பெறுவர் என்பது திண்ணம்.

சமயத்தலைவர்கள், தத்துவமேதைகள், மாபெரும் விஞ்ஞானிகள், தேசத்தலைவர்கள், சமூகத்சீர்திருத்த வாதிகள், வீரர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் என பல துறைகளைச் சேர்ந்தவர்கள் சனிபகவானது ஆற்றலினால் புகழடைந்திருக்கக் காணலாம்.

சனி சிறந்த சிந்தனை ஆற்றலைத் தருபவர்.

மனம், ஒழுக்கம் இவற்றில் மிகுதியான தைரியத்தை உண்டாக்குபவரும் இவரேயாவார்.

கட்டுப்பாடு, தீர்க்கதரிசனம், சகிப்புத் தன்மை, இன்னல்களைப் பொருட்படுத்தாமல் தாங்கிக்கொள்ளுதல், தன்னலத்தை ஒதுக்குதல். தியாக மனப்பான்மை, மிகுதியான கற்பனா சக்தி, ஆத்மீகத் துறையில் ஆழ்ந்துநோக்கும் ஆற்றல், பலனுள்ள பல தேசப் பிரயாணம், புண்ணியத்தலயாத்திரை, மிகுதியான செல்வம், அறவழியில் பெருமளவில் பொருள் செலவழித்தல் என்பனவெல்லாம் சனியின் ஆற்றலாலேயே மனிதர்களால் பெறப்படுகின்றன.

### இடபம் துலாம்

இந்த இரு இலக்கினங்களில் பிறந்தர்வகளுக்கு சனி யோககாரகன். இவர்களுக்கு சனி திசை நடக்கும்போது மிகுதியான நற்பலன்கள் கிட்டும்.

செவ்வாய், சூரியன், கேது, ராகு இவர்களுடன் சனி சேர்ந்திருப்பாரானால் ஓரளவு தீய பலன்களும் உண்டாகும்.

மற்ற இலக்கினங்களில் பிறந்தவர்களைப் பொறுத்தவரை சனி வேறுவிதமாகப் பலன் செய்வார். சனி பாபக் கிரகம் என்றளவில் 3, 6, 11 ஆம் இடங்களில் இருந்தால் நல்லது. தீயபலன் குறையும்.

மீனம், தனுசு, துலாம் ஆகிய வீடுகளில் எதிலாவது சனி இருக்கப் பிறந்தவர்கள் வாழக்கையில் சிறப்பும் உயர்வும் அடைவர். ஆனால் அவ்விராசியை யோககாரன் தவிர பாபக்கிரகங்கள் பார்க்கக் கூடாது.

பிறக்கும்போது எந்த இடத்தில் சனி இருந்ததோ அதற்கான பொதுப்பலன்கள் இங்கே தரப்படுகிறது.

### இலக்கினத்தில் சனி

மகரம், கும்பம் இவை இலக்கினமானால் நல்ல பலன் உண்டு. மற்ற இலக்கினக்காரர்களுக்கு உடல் நலிவு, தாய், தந்தையரைப் பால்யத்திலே இழத்தல், நீடித்து வருத்தும் நோய், விபத்துக்கள் மூலம் தலை அல்லது மூளையில் தாக்கம், மனம் தளர்ந்த நிலை இவற்றை ஏற்படுத்தும்.

### 2 ஆம் இடத்தில்

பொருள் நட்டம், பொருள் வராமை, உறவினர்களை விட்டுப் பிரிந்திருத்தல், போதிய உணவு கிடைக்காமை, கொடுஞ்சொற்களைப் பேசுதல், கண்பார்வையில் கோளாறு என்பன ஏற்படும்.

### 4 ஆம் இடத்தில்

சிறு வயதில் தாயை இழத்தல் அல்லது தாயை விட்டு பிரிந்து வாழ்தல், கல்வியில் குளறுபடி, தீயவர் நட்பு, நோய், பூர்வீகச் சொத்துக்களை இழத்தல், விபரீத எண்ணங்கள் உண்டாகும்.

### 5 ஆம் இடத்தில்

புத்திரப் பேறு இன்மை, புத்திர நாசம், இருதயம் பாதிக்கப்படுதல், சூதாட்டம் முதலியவற்றில் நாட்டம் என்பன ஏற்படும்.

### 7 ஆம் இடத்தில்

தாமதமாகத் திருமணம், குடும்ப சச்சரவு, கூட்டு வியாபாரச் சிக்கல்கள், வழக்குகளில் ஈடுபடல் பகைவர் தொல்லை ஆகியன ஏற்படும்.

### 8 ஆம் இடத்தில்

நீண்ட ஆயுளைக் கொடுத்த போதிலும் சொத்துரிமைகளை இழத்தல், மனைவி மரணம், விபத்துக்கள் உணவில் நஞ்சூட்டப்படல் மூல வியாதியால் வருந்துதல் ஏற்படும்.

### 9 ஆம் இடத்தில்

இளம் வயதில் தந்தையை இழத்தல், அல்லது பிரிந்து விடுதல், பெற்றோருக்கு கீழ்ப் படியாமை, துரதிஷ்டம் துன்பம் நிறைந்த தூரதேசப்பயணம், மனஅமைதி இன்மை, பார்வையில் கோளாறு, எதற்கும் குறுக்கு வழியை நாடுதல் சமய ஈடுபாடற்ற தன்மை.

### 10 ஆம் இடத்தில்

உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை, எதிர்பாராத வகையில் உயரிய நிலையை அடைந்து திடீரென வீழ்ச்சி, செயல்களில் நேர்மையற்ற தன்மை, பொருளீட்டக் குறுக்கு வழிகளைக் கைக்கொள்ளல், பாகுபாடின்றி ஈனமான தொழிலைச் செய்தல் என்பவற்றை உண்டாக்குவார்.

### 12 ஆம் இடத்தில்

பெருத்த பொருள் நஷ்டம், மேலும் மேலும் செலவு, சிறைவாசம், கசப்பான திருமண வாழ்க்கை, சீக்கிரத்திலேயே மனைவியின் மறைவு, நாடு கடத்தப்படுதல், மர்மமான பகைவர்கள், துறவு மனப்பான்மை என்பவற்றை ஏற்படுத்துவார்.

ஒருவருடைய ஜாதகத்தில் சனி பலம் பெற்று, சுபத்தன்மை, யோகம், சுபக்கிரகச் சேர்க்கை, முறையாகப் பெற்று சனிதிசையும் நடந்தால் மிகவும் சீரும் சிறப்பும் உண்டாகும்.

கோசர ரீதியிலான ஏழரைச் சனியின் காலம் ஒருவருக்கு மூன்று முறை வரலாம். அபூர்வமாக நான்காவது முறையும் வரலாம். முதல் முறை தீய பலன் தரும். இரண்டாவது நற்பலன்களையும் செய்யும். மூன்றாவதுமுறை கட்டாயம் மரணத்தை ஏற்படுத்தும் எனப்படுகிறது. சனி யோககாரகனாக உள்ளவர்களுக்கு இது இப்பொழுதும் பொருந்தாது.

சனியும் குருவும் தீய வீடுகளிலிருப்பின் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணமுடியாது போய்விடும். நல்ல சேர்க்கை உயரிய பதவியையும் முறையான செல்வாக்கையும் கொடுக்கும்.

சனி கோசார ரீதியாக 8 ஆம் இடத்தில் வரும் காலத்தில் உடல்நலம் பாதிப்பு, அவமரியாதை, இடமாற்றம், உத்தியோக இழப்பு, எதிர்பாராத பெரும் பொருட்செலவுகள், தாய், தந்தையர் சகோதரர்கள் பறிபோதல், விபத்துக்கள் பணக்கஷ்டம் மனைவியாகூலம் அனைத்துச் செயலிலும் தேக்கநிலை என்பன ஏற்படும்.

(அடுத்தவாரம் ராசிவாரியாக சனிமாற்றப்பலன்கள் பிரசுரமாகும்).

- பாரத்வாஜன் -


### இலட்சிய மனிதன்

நிலையற்ற வாழ்வில்
நிம்மதி தேடும்
நினைவற்ற மனிதா!
பணம் ஒரு பிணம்
என்று கூறி
கொள்ளை அடிக்கிறாயே!
பெண்களே வாழ்வின்
நரகம் என்று
கூறும் மனிதா
கற்பை ஏன் –
நீ–
களவாடுகின்றாய்
ஆறடி நிலம் தான்
சொந்தம் எனக் கூறி
பல ஆயிரம் ஏக்கர்
ஏன் வாங்குகின்றாய்.
வெயிலுக்குப் போடும்
செருப்பு என்று
சொல்லி அதிலும்
ஏன்?
உயர்விலை செருப்பை
அணிகின்றாய்.
இம் மாய நிலை
எப்போது மாறும்
இலட்சிய மனிதா?

- மந்துவிலூர் சிவா -


# உங்களுக்குத் தெரியுமா?

## இப்பொழுது குஷ்டரோகத்தை உடல் விகாரங்களின்றிக் குணப்படுத்தலாம்!



குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்த வல்ல மருந்துகள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நோயின் அறிகுறிகளை வேளைக்கே இனங்கண்டு முறைப்படி சிகிச்சை அளித்தால் எவ்வித அங்க விகாரங்களுமே ஏற்படாமல் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தி விடலாம்.

### குஷ்டரோகம் ஒரு பரம்பரை வியாதியல்ல

குஷ்டரோகம் என்பது சருமத்தையும் சில நரம்புகளையும் பாதிக்கும் ஒருவகை பக்டீரியாக்களினால் உண்டாக்கப்படும் நோயாகும். உடலில் தோன்றும் (நமைச்சல் அளிக்காத) உணர்வற்ற தடமே இந்த நோயின் முதலாவது அறிகுறி. குஷ்டரோகம் ஒரு பரம்பரை வியாதி அல்ல. அவ்வாறே தெய்வ சாபத்தினால் அல்லது பாவத்தினால் ஏற்படும் நோயுமல்ல.

### குஷ்டரோகம் இலகுவில் தொற்றுவதில்லை

குஷ்டரோகமானது தொற்றக்கூடியது என்றும் தொற்றாதது என்றும் இருவகைப்படும். பொதுவாக, பத்து நோயாளிகளில் 2 பேருக்கே தொற்றக்கூடிய குஷ்டரோகம் ஏற்படுகிறது. அவர்கள் கூட சரியான சிகிச்சையைத் தொடர்ந்து பெற்றுவந்தால் அவர்களிடமிருந்து பிறருக்கு நோய் தொற்றாது.

ஆகவே, நோயாளர்கள் வீட்டில் குடும்பத்தினரோடு தங்கியிருந்து வழமையான அலுவல்களைக் கவனித்துக் கொண்டே சிகிச்சை பெற முடியும்.

### அநேகமானோருக்கு குஷ்டரோக எதிர்ப்புச் சக்தி உண்டு

சகல தொற்றுநோய்களுள்ளும் மிகக் குறைவாகவே தொற்றும் நோய்தான் குஷ்டரோகம். பத்துப் பேரில் ஒன்பது பேர் இயற்கையாகவே இந்த நோய்க்கு எதிரான தடுப்புச் சக்தியைக் கொண்டுள்ளனர். இவர்கள் நோயாளியுடன் நெருங்கிப் பழகினாலும் குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட மாட்டார்கள்.

### குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம்.

குஷ்டரோகத்தை எவ்வித அங்க விகாரங்களுமின்றி முற்றாகக் குணப்படுத்த இப்பொழுது மருந்துகள் உள்ளன. அதற்கு மிக முக்கியமானது நோயை வேளைக்கே கண்டுபிடித்து சரியான முறையில் சிகிச்சை பெறுவதாகும். உரிய வேளைகளில் சிகிச்சை பெறவிட்டால் அல்லது சரியான முறையில் சிகிச்சை அளிக்காவிட்டால் மட்டுமே அங்க விகாரங்கள் ஏற்படும். அவ்வாறு ஏற்படும் அங்க விகாரங்களை மாற்ற முடியாதிருக்கும்.

### குஷ்டரோகத்தின் ஆரம்ப அறிகுறிகள்

- சருமத்தில் நமைச்சல் அளிக்காத, வெளிறிய அல்லது செந்நிறத் தடங்கள் தோன்றும்.
- இந்தத் தடங்களில் உணர்வோ வலியோ இருக்காது.
- கை கால்களில் விறைப்பு ஏற்படக்கூடும்.
- தடங்களுக்குப் பதிலாகக் கட்டிகள் அல்லது கழலைகள் தோன்றக்கூடும்.

### நினைவிருக்கட்டும்.

இப்பொழுது குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம். இந்த நற்செய்தியை உங்கள் உறவினர்-நண்பர்கள்-அயலவர் அனைவர் மத்தியிலும் பரப்புங்கள்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
சிபா-கெய்கி குஷ்டரோக நிதியம்

மேலதிக விபரங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல மருத்துவ மாது, பொதுச் சுகாதாரத் தாதிமார் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெறலாம்.

CGL 343/

இப்பொழுது உடல் விகாரங்களின்றிக் குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம். இன்றே சிகிச்சை பெறுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்சன் கல்வி நிலையம்
தெல்லிப்பழை.

ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள்
நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. மகேந்திரன், மதி |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| சமூகக்கல்வி | — | திரு. திருக்குமார். |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| ஆங்கிலம் | — | திரு. ஹரிதாஸ் |

சஞ்சீவி
# சஞ்சிகை

17 - 03 - 1990 சனிக்கிழமை

தான்சன் கல்வி நிலையம்
தெல்லிப்பழை

A/L DAY CLASS

நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. சண் |
| வர்த்தகம் | — | திரு. சிவா |
| கணக்கியல் | — | திரு. யோகன் |
| | — | திரு. வாசன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| இந்து நாகரீகம் | — | திரு. MR. |

# 70 ஆண்டுகால ஏகபோக அரசுரிமையை இழக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி!

## ஒரு கட்சி ஆட்சி முறை போய் தனிநபர் ஆட்சி ஏற்படுகிறதா?

உலகிலேயே மிகப் பெரிய நாடு சோவியத் யூனியன் ஆகும்.

பூமியில் ஆறில் ஒரு பங்கு விஸ்திரணத்தைக் கொண்ட நாடு இது.

இதன் விஸ்திரணம் 86 லட்சம் சதுர மைல்கள்.

15 மாநிலங்களைக் கொண்ட சமஷ்டி அமைப்பாக விளங்கும் சோவியத் யூனியனில் ஒரு கட்சி ஆட்சி முறையே 1917 அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து இருந்து வந்தது.

கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக ஆட்சி உரிமைக்கு கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே ஆட்சி நடத்த அனுமதியளிக்கும் ஷரத்தை சோவியத் அரசியல் சாசனத்தில் இருந்து அகற்றும் சட்டத்தை சோவியத் நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவேற்றியது.

இதன் மூலம் பல கட்சி ஆட்சி அரசியல் முறை சோவியத் யூனியனில் ஏற்படப் போகிறது.

அதேவேளை—கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையைக் கொண்டு வரும் யோசனையையும் சோவியத் யூனியன் நாடாளுமன்றம் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது.

### கூடுதல் அதிகாரம்

புதிய சோவியத் ஜனாதிபதிக்கு யுத்தப்பிரகடனம் செய்வது அவசரகால நிலையை பிரகடனம் செய்வது போன்ற அதிகாரங்களைப் பெறுகிறார்.

தனி நபரிடம் இவ்வளவு அதிகாரங்களை ஒப்படைப்பதை எப்படி அரசியல் சீர்திருத்தம் என்று ஏற்பது என்று திரு. கோர்பச்சேவுக்கு எதிரானவர்கள் கருதுகின்றனர்.

கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு, சோவியத் நாடாளுமன்றத்தில் கோர்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கையை எதிர்ப்பவரான போரிஸ் யெல்ற்சின் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில் கோர்பச்சேவ் ஆத்திரமடைந்தார்.

''அமைதி, அமைதி, அமைதியாக இருங்கள்''—என்று உத்தரவிட்ட திரு. கோர்பச்சேவ், ''கூடுதல் அதிகாரம் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையை எதிர்ப்பவர்கள் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை விதைக்க முயற்சிக்கிறார்கள்''— என்று குற்றஞ் சாட்டினார்.



கோர்பச்சேவ்

புதிதாக உருவாக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் நடத்தப் படவேண்டும்; மக்களே நேரடியாக வாக்களித்து அவரைத் தெரிவுசெய்வர்.

ஆனால் முதல் நிறைவேற்று ஜனாதிபதியாக திரு. கோர்பச்சேவையே நாடாளுமன்றம் தெரிவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

### மக்களால் தெரிவு

அடுத்து வரும் ஜனாதிபதிகள் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுவார்.

நான்கு ஆண்டுகள் கழித்தே மக்கள் நேரடியாக பங்குபற்றும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

அத்தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்திருக்கும் திரு. கோர்பச்சேவ், ''நாடாளுமன்றம் தெரிவு செய்யும் முதல் ஜனாதிபதியாக நான் பதவி ஏற்க மறுப்பது கோழைத்தனமானது என்று கூறிவிட்டார்.

''சோவியத் சமஷ்டி அமைப்பில் மாநிலங்கள் மத்தியில் எழுந்துள்ள பிரிவினைக் கோரிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டிய இத்தருணத்தில் நான் விலகப் போவதில்லை''— இதுவே திரு. கோர்பச்சேவ் கூறும் காரணம்.

லித்துஏனியா மாநிலம் சோவியத் யூனியனில் இருந்து சுதந்திர நாடாக அண்மையில் பிரகடனம் செய்ததையே அவர் இதற்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

லித்துஏனியாவின் சுதந்திர பிரகடனம் செல்லாது; சட்ட விரோதமானது என்று கூறியிருக்கும் திரு. கோர்பச்சேவ் சோவியத்தில் வளர்ந்து வரும் இன உணர்வுகளை கட்டுப்படுத்த தனக்குக் கிடைத்துள்ள கூடுதல் அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்தப்போகிறார் என்பதை உலகம் உன்னிப்பாக கவனித்து வருகிறது.

சோவியத் யூனியனில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள் ஒரு கட்சி ஆட்சி முறைக்கு விடைகொடுத்து தனி நபர் ஆட்சி முறைக்கு வரவேற்புக் கொடுத்துள்ளதா? என்றும் சந்தேகிக்கப் படுகிறது. ★

# நிக்கரகுவாவில் அரசியல் அதிகாரம் அமைதியாகக் கைமாறுமா?

ஜனாதிபதி தேர்தலில் எதிர்பாராத தோல்வியடைந்த 12 மணித்தியாலயங்களில் ஜெனரல் டானியல் ஒற்றேகா பாதுகாப்பு அதிகாரிகளுடன் காரில் புறப்பட்டார்.

கார் மனாகுவாவில் ஒதுக்குப்புற வீடு ஒன்றின் முன்னால் போய் நின்றது.

ஒற்றேகாவை வரவேற்றவர், நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட 61 வயதான திருமதி வயலற்றா ஷிமொறா.

எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி திருமதி வயலற்றா ஷிமொறா நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவேண்டும்.

திரு. ஒற்றேகா, திருமதி ஷிமொறாவை நேரிற்சென்று சந்தித்தது அந்த அதிகார மாற்றம் சுமுகமான முறையில் இடம்பெறும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

### சான்டினிஸ்டா படைகள்

ஆனால் அதன் பின்னர் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் அதனை நிரூபிப்பதாகக் காணப்படவில்லை.

காரணம், நிக்கரகுவா அரசுப் படைகளில் ஜெனரல் ஒற்றேகாவுக்கு விசுவாசமான வீரர்கள் ஏராளமாக இருப்பதேயாகும் என்று கூறப்படுகிறது.

ஒற்றேகாவின் சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள்தான் நிக்கரகுவா அரசுப் படைகளில் உள்ளனர்.

திருமதி ஷிமொறா பதவி ஏற்ற பின்பு அவர் நோக்கும் முதல் பிரச்சினை தனக்கு ஆதரவாக அரசுப்படைகளை மாற்றி அமைப்பதேயாகும்.

### கொன்றா படைகள்

ஒற்றேகாவின் சான்டினிஸ்டா படைகளை எதிர்த்துப் போராடிய அமெரிக்க ஆதரவு பெற்ற கொன்றா வலதுசாரி கிளர்ச்சியாளர்கள் இன்னும் ஆயுதங்களுடன் நிக்கரகுவாவின் எல்லைப்புற நாடான ஹொண்டுறாஸில் முகாம்களில் தங்கியுள்ளனர்.

அமெரிக்க சார்பான புதிய ஜனாதிபதி ஷிமொறா கொன்றாஸ் கிளர்ச்யாளர்களை எப்படி நிராயுதபாணிகளாக்கப் போகிறார்?

கொன்றா கிளர்ச்சியாளர்களை அரசுப்படைகளில் சேர்ப்பது சாத்தியமானதா?

இக்கேள்விகளுக்கு எல்லாம் பதில் சாதகமாகக் காணப்பட்டால்தான் ஏப்ரல் 25 இல் இடம்பெறும் அதிகாரமாற்றம் சுமுகமாக அமையும் வாய்ப்பு உண்டு என்று அவதானிகள் கருதுகின்றனர்.

### ஒற்றேகா நிபந்தனை

தேர்தலில் தோல்விகண்ட பின்னர் கொன்றாகிளர்ச்சியாளர்களுடன் ஒரு தலைப் பட்ச யுத்த நிறுத்தம் ஒன்றை ஜெனரல் ஒற்றேகா அறிவித்தார்.

அதுமட்டுமல்ல, புதிய ஜனாதிபதியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு முன்னர் கொன்றா கிளர்ச்சியாளார்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு ஹொண்டுறாஸில் இருந்து நிக்கரகுவாவுக்குத் திரும்பி விடவேண்டும் என்றும் ஒற்றேகா நிபந்தனை விதித்தார்.

கொன்றாக் கிளர்ச்சியாளர்களை ஹொண்டுறாஸில் இருந்து நிக்கரகுவாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்க அமெரிக்க அரசும் முயற்சிக்கின்றது.

இதற்காக விசேட தூதராராக ஹரி ஷால்டிமென் என்பவரை அமெரிக்க ஹொண்டுறாஸுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாக கொன்றாக் கிளர்ச்சியாளர் மீது நிர்ப்பந்தம் ஏற்படுத்த மத்திய அமெரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் அடங்கிய மாநாடு ஒன்றை ஏப்ரல் 25 க்கு முன்னர் நடத்த கோஸ்டாறிக்கா ஜனாதிபதி ஒஸ்கார் ஏரியாஸ் முயற்சிகள் எடுத்து வருகிறார்.

### சிவில் யுத்தம்

அமைதியான முறையில் அதிகார மாற்றம் இடம் பெற முட்டுக்கட்டையாக இருப்பது கொன்றா கிளர்ச்சி அமைப்பைக் கலைப்பதில் உள்ள தாமதமேயாகும் என்று ஜெனரல் ஒற்றேகா எச்சரித்திருக்கிறார்.



ஷிமொறா

கொன்றா கிளர்ச்சியாளரின் பயமுறுத்தலை முதலில் அகற்ற வேண்டும் என்பதில் ஜெனரல் ஒற்றேகா திடமாக இருப்பதை அவரது எச்சரிக்கை எடுத்துக்காட்டுகிறது.

நிக்கரகுவா படைகளில் உள்ள சான்டினிஸ்டா வீரர்களை அகற்றிவிட்டு அவர்களது இடத்துக்கு கொன்றா கிளர்ச்யாளர்களைச் சேர்க்க திருமதி. ஷிமொறா நடவடிக்கை எடுத்தால் அது ஒரு சிவில்யுத்தத்துக்கே வழிவகுக்கும் என்று ஜெனரல் ஒற்றேகா எச்சரித்திருக்கிறார்.

### கொன்றா நிலை

ஏப்ரல் 25 இல் ஜனாதிபதியாக திருமதி வயலெற்றா ஷிமொறா பதவி ஏற்ற பின்னர், அவரது அரசிடம்தான் தாங்கள் ஆயுதங்களை ஒப்படைப்போம் என்று கொன்றாக் கிளர்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

இதை ஒற்றேகா ஏற்றுக்கொள்வாரா? என்பதில் தான் அதிகார மாற்றம் சுமுகமாக இடம் பெறும் என்பது தங்கியுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர்.

## தெரிந்த நாடு தெரியாத விவரம் — நிக்கரகுவா

நாட்டின் பெயர்: நிக்கரகுவா.

சனத்தொகை: 35 லட்சத்து 2 ஆயிரம் (987)

சனத்தொகை அதிகரிப்: ஆண்டுக்கு 3·4 சதவீதம்.

தலைநகர்: மனாகுவா (7 லட்சம் மக்கள்)

2000 ஆவது ஆண்டில் எதிர்பார்க்கப்படும்.

சனத்தொகை: 50 லட்சம்

விஸ்திரணம்: ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 849 சதுர கிலோ மீற்றர்.

உத்தியோகமொழி: ஸ்பானிஷ்.

மதம்: உத்தியோக மதம் இல்லை. ஆனால் 90 சதவீதமானோர் ரோமன் கத்தோலிக்கர்கள்.

தொலைபேசி: 66 பேருக்கு ஒன்று.

டெலிவிஷன்: 26 பேருக்கு ஒன்று.

டாக்டர்கள்: 2, 230 பேருக்கு ஒருவர்.

தாதிகள்: 590 பேருக்கு ஒருவர்.

ஆஸ்பத்திரி படுக்கைகள்: 674 நோமாளருக்கு ஒருவர்.

சினிமாப் படமாளிகைகள்: நூறு.

பத்திரிகைகள்: மூன்று தினசரிகள்.

கல்வி வளர்ச்சி: ஆரம்ப படிப்பு – சதவீதம்.

இரண்டாம் நிலைப்படிப்பு– 39 சதவீதம், உயர் கல்வி – 10 சதவீதம்.

ஆறு பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன.

பொருளாதாரம்: பிரதானமாக விளங்குவது விவசாயம், சோளம், அரிசி, கோப்பு, பருத்தி, பருப்பு, தங்கம் உட்பட கனிமங்கள், வெள்ளி, பித்தளை, உணவு பதனிடுதல் போன்ற சிறு கைத்தொழில்கள்.

ஆயுதப்படைகள் பலம்:
இராணுவம்: 75 ஆயிரம்.
கடற்படை: 4 ஆயிரம்
விமானப்படை: 3 ஆயிரம்
பரா துருப்புகள்: 2 ஆயிரம்.

கரன்ஸியின் பெயர்: கொர்டோபா (Cordoba)

உலக உலா
என்.பி.சீலன்

★இத்தாலியில் நடைபெறவிருக்கும்

# 1990 உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப்போட்டி

- செ. தெய்வசீலன் -

எதிர்வரும் ஜூன் – ஜூலை மாதங்களில் உலக கிண்ணத்திற்கான பதினான்காவது உதைபந்தாட்டப் போட்டி இத்தாலியில் நடைபெறவிருக்கின்றது.

இப் போட்டியில் கலந்து கொள்ள இருபத்திநான்கு நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1986 இல் உலக கிண்ணத்தை வென்ற ஆர்ஜன்ரீனாவும் இம் முறை போட்டி இத்தாலியில் நடைபெறுவதால் இத்தாலியில் உலக கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளப் போட்டியின்றி அனுமதிக்கப்பட்டுள்ளன.

மிகுதி இருபத்திரண்டு இடங்களுக்கும் 112 நாடுகள் போட்டியிட்டன. 313 பூர்வாங்க போட்டிகளில் இவை பங்குபற்றின.

இறுதியில் இத்தாலி, ஆர்ஜன்ரீனா தவிர்ந்த ஏனைய 22 நாடுகளும் இப்பூர்வாங்க போட்டிகள் மூலம் தெரிவு செய்யப்பட்டன.

இவற்றில் அமெரிக்காக் கண்டத்தில் இருந்து ஆறு நாடுகளும் பதினான்கு நாடுகள் ஐரோப்பாக் கண்டத்தில் இருந்தும் ஆசியா, ஆபிரிக்கக் கண்டங்களில் இருந்து தலா 2 நாடுகளும் தெரிவாகின.

உலகக் கிண்ணப்போட்டிகளிலும் கலந்து கொள்ளும் 'புதுமுக' நாடுகளாக ஐக்கிய அரபு மொறேற்சு, கோஸ்டாரிக்கா, ஜரிஷ் குடியரசு ஆகியன உள்ளன.

நாற்பது ஆண்டுகளின் பின்னர் இப்போதுதான் உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளும் தகுதியை அமெரிக்கா பெற்றுள்ளது.

1934 இல் நடைபெற்ற இரண்டாவது உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு பற்றிய எகிப்தும் இம்முறை போட்டியிடத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியில் பங்கு பற்றும் 24 நாடுகளும் ஆறு குழுக்களாகப் பிரிககப்பட்டுள்ளன.

அவையாவன:

**'ஏ' பிரிவு**
ஆர்ஜென்ரீனா
சோவியத் யூனியன்
ருமேனியா
கமரூன்

**'பி' பிரிவு**
இத்தாலி,
ஆஸ்திரேலியா.
செக்கோஸ்லேவேகியா,
அமெரிக்கா

**'சி' பிரிவு**
பிரேஸில்,
ஸ்கொட்லாந்து,
சுவீடன்,
கோஸ்டாறிக்கா.

**'டி' பிரிவு**
மேற்கு ஜேர்மனி,
யூகோஸ்லேவியா,
கொலம்பியா,
ஐக்கிய அரபு எமிறேற்சு.

**'இ' பிரிவு**
பெல்ஜியம்,
ஸ்பெயின்,
உருகுவே,
தென்கொரியா.

**'எப்' பிரிவு**
பிரிட்டன்,
நெதர்லாந்து,
எகிப்து,
ஐரிஷ் குடியரசு.

இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ணத்துக்கான போட்டிகளில் ஆறு நாடுகளே உலகக் கிண்ணத்தைப் பெற்றன.

பிரேஸில், இத்தாலி ஆகிய நாடுகள் மூன்று முறையும்,

மேற்கு ஜேர்மனி, உருகுவே, ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகள் இரு தடவைகளும்,

இங்கிலாந்து ஒரு தரமும் உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்தன.

இதுவரை உலகக் கிண்ணப் போட்டிகள் நடந்த நாடுகள், ஆண்டு, சாம்பியனாக வந்த நாடுகள் ஆகிய விவரங்கள் கீழே தரப்படுகிறது.

| ஆண்டு | நடந்த நாடு | சாம்பியன் நாடு |
|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே |
| 1934 | இத்தாலி | இத்தாலி |
| 1938 | பிரான்ஸ் | இத்தாலி |
| 1950 | பிரேஸில் | உருகுவே |
| 1954 | சுவிட்சர்லாந்து | மேற்கு ஜேர்மனி |
| 1958 | சுவீடன் | பிரேஸில் |
| 1962 | சிலி | பிரேஸில் |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | மெக்ஸிகோ | பிரேஸில் |
| 1974 | மேற்குஜெர்மனி | மேற்குஜேர்மனி |
| 1978 | ஆர்ஜென்ரீனா | ஆர்ஜென்ரீனா |
| 1982 | ஸ்பெயின் | இத்தாலி |
| 1986 | மெக்ஸிகோ | ஆர்ஜன்ரீனா |

## சொற்சிலம்பம் இல: 109

பரிசு பெற்றவர்கள் விபரம்

**முதலாவது பரிசு:**

சு.ஸ்ரீதரன், கோண்டாவில் கிழக்கு; கோண்டாவில்.

**இரண்டாவது பரிசு:**

து.விக்கினேஸ்வரன், வசந்த மாளிகை, ஐயனார் வீதி, சுன்னாகம்.

**மூன்றாவது பரிசு**

திருமதி. லீலாவதி, இராஜநாயகம், அரசினர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**சொற்சிலம்பம் இல: 109 சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. சத்தியவான் 5. ரதி 6. கதிர்காமம் 9. மரு 10. அகம் 11. அமேசன் நதி 13. தங்கம் 14. தாயகம் 15. வயல் 17. கூவும் 13 வரம்பு.

**மேலிருந்து கீழ்**

1. சங்கமம் 2. திமிர் 3. வாமன 4. சரணாகதி 7. திரு 8. காளமேகம் 10. அபிநயம் 11. அங்கம் 13. தயவு 14. தாகூர் 15. வரவு 16. புல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org